# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.








புத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1996 ஆடி திங்கள் 10-ம் நாள் (25—7—1965) ஞாயிற்றுக்கிழமை ரபி.அவ்25 | இதழ் 9


# தமிழர்-முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களை அபகரிக்க முயற்சி

## சிங்கள முதலாளிகள் நடத்தும் இரகசிய இயக்கம்

தமிழர்—முஸ்லிம்கள் முதலாளிகளிடமுள்ள வர்த்தக நிறுவனங்களை தந்திரமான முறையில் அபகரித்துவிட சிங்கள வகுப்புவாதிகளான சில முதலாளிகள் முயற்சித்து வருவதாக நம்பிக்கையான செய்தி ஒன்று கிடைத்துள்ளது. முதலாளிகள் வர்த்தக நிறுவனங்களை விற்றுவிட விரும்பாத நிலையிலும், அவர்களை மீண்டும் மீண்டும் விற்பனை செய்ய நிர்ப்பந்திக்கும் பணியில் சில தரகர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இந்நாட்டுத் தமிழர்களும், முஸ்லிம்களும், கணிசமான தொகையினரான இந்தியர்களும் வர்த்தகத்துறையில் ஈடுபட்டு வருகின்றனர். சில்லறை வியாபாரம் முதற்கொண்டு ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்திலும் இவர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர். தமிழர், முஸ்லிம்கள், இந்திய வம்சாவளியினர் ஆகியோரின் கைகளிலேயிருக்கும் வர்த்தக நிறுவனங்களை அபகரிக்க, ஒரு தனியான குழு இயங்கிவருவதாகக் கூறப்படுகிறது.

வகுப்புவாதத்தில் ஊறித்திளைத்த சிங்கள முதலாளிகளை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள இவ் வியக்கம் மலையகத்திலும், புத்தளம், சிலாபம், காலி போன்ற இடங்களிலும் தனது கையாட்களை வைத்துக்கொண்டு இயங்கிவருகிறதாம்.

சிங்களவரல்லாதவர்களிடமிருந்து சகல வர்த்தகத் துறைகளையும் எத்தகைய தந்திரங்களைக் கையாண்டாவது அபகரித்து விடுவதே இவ்வியக்கத்தின் நோக்கமாகக் கூறப்படுகிறது. முதலாளிகள் தங்கள் நிறுவனத்தை விற்றுவிட முடியாது என்று பலமுறை கூறினாலும், விலைபேசும் தரகர்கள் அம்முதலாளிகளை விட்டுவிடுவதாகத் தெரியவில்லை. தொடர்ந்து நச்சரித்துக் கொண்டே உள்ளனராம்.

சில முதலாளிகளை சில தரகர்கள் பயமுறுத்தியும் காரி

(9-ம் பக்கம் பார்க்க)

## சிங்கள தகைமை வேண்டாம்!

சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் அரச சேவையிற் சேர்ந்த ஊழியர்கள் எவரும் சிங்களத் தகைமை பெற வேண்டியதில்லையென்று இவ்வாரம் கூடிய அமைச்சரவை முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. இவர்கள் சிங்களப் பரீட்சை எதற்கும் தோற்றாது பதவிக் காலம் முழுவதும் கடமையாற்றலாம் என்றும், இவர்கள் தங்கள் கடமைகள் அனைத்தையும் ஆங்கில மொழி மூலம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அறியப்படுகிறது.

பழையவூழியர்களான இவர்களுக்குரிய பதவி உயர்வு, சம்பள உயர்வு ஆகியன வழமை போல் எத்தகைய இடர்ப்பாடுமின்றி காலந்தோறும் கொடுக்கப்படும் என்றும் நம்பப்படுகிறது.

## அமைச்சர் வருகையை ஜீ.ஜீ. புறக்கணித்தது ஏன்?

காணி மின்சார அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வாவின் யாழ்ப்பாண விசயத்தை யொட்டி வகுக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலில் யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஜீ. ஜீ. பொன்னம்பலத்திற்கு முதலிடம் கொடுக்கப்படாதமையினாலேயே அவர் அமைச்சரை வரவேற்க செல்லவில்லையென்று நம்பகமான வட்டாரங்களில் பேசப்படுகிறது.

காணி மின்சார அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா அவர்களுடன் திருவாளர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம், மு. திருச்செல்வம், தமிழரசுத் தந்தை சா. ஜே. வே. செல்வநாயகம் ஆகியோரும் ஒரே விமானத்தில் கொழும்பிலிருந்து புறப்படுவதாகவும், விமான நிலையத்தில் அமைச்சரை சம்பிரதாயமாக திரு. செல்வநாயகம் அவர்கள் முதலில் வரவேற்பதாகவும், அடுத்து திரு. பொன்னம்பலம் வரவேற்பதாகவும் நிகழ்ச்சி நிரல் வகுக்கப்பட்டதாம். இதை யறிந்ததும் திரு. பொன்னம்பலம் யாழ்ப்பாணம் செல்லும் திட்டத்தை ஒத்திவைத்து, தமது குழுவைச் சேர்ந்த திரு. சிவசிதம்பரத்தை தம் சார்பில் செல்லும்வண்ணம் பணித்தார் என்று பேசப்படுகிறது.

திரு. சி. பி. டி. சில்வாவின் யாழ்ப்பாண விசயத்தில் ஏன் கலந்துகொள்ளவில்லையென்று ஒருவர் திரு. பொன்னம்பலத்திடம் வினவிய போது, திரு. பொன்னம்பலம் 'இன்றைக்கு வந்து சேர்ந்தவர்களையெல்லாம் நான் வரவேற்கமாட்டேன், அவர்களை வரவேற்பவர்கள் சமஷ்டிக் கட்சியினர்தான்' என்றாராம்.

## இன்னும் இந்தக் கெடுபிடியா?

தமிழ்ப் பாடசாலைத் தலைமை ஆசிரியர்கள் சிங்களத்திற் தேர்ச்சி பெற வேண்டியதில்லையென கல்வி அமைச்சர் தெரிவித்திருந்தும், இன்னும் கல்வித் திணைக்களத்திலிருந்து தமிழ் பாடசாலை அதிபர்களுக்குச் சிங்களத்தில் கடிதங்கள் அனுப்பப்படுவதாக அறியப்படுகிறது.

ஆசிரியர்களின் சம்பளத்திலிருந்து தொழிற் சங்கச் சந்தா பணத்தைக் கழித்துக் கொள்வது பற்றி சிங்களத்தில் எழுதப்பட்ட கடித

(9-ம் பக்கம் பார்க்க)


இனும்!
ரூபா 550-00
தரும்
அருத எண்ணெய்
அதிர்ஷ்டப் பரிசு
அஞ்சலட்டைகள்!
தற்சமயம்
கீழ்க் காண்பவர்களிடத்தில்
பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணம்:
ஏ. இராசையா அன் சன்ஸ் கே. கே. எஸ். ரோட்.
சி. எஸ். கைலாசம்பிள்ளை அன் சன்ஸ், பெரியகடை.
சி. எஸ். கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், கே. கே. எஸ். ரோட்
எஸ். வி. பி. கார்த்திகேய பிள்ளை, பெரியகடை.
வி. கந்தையாபிள்ளை அன் சன்ஸ், கே. கே. எஸ். ரோட்

நல்லூர்:
குமரன் மெடிக்கல் ஸ்டோர்ஸ்
முருகன் மெடிக்கல் ஸ்டோர்ஸ்
நடன முருகன் மெடிக்கல் ஸ்டோர்ஸ்

திருநெல்வேலி:
சிவன் ஸ்டோர்ஸ்
பரமேஸ்வரா ஜங்ஷன்

கோப்பாய்:
சிவபாதம் ஸ்டோர்ஸ்
இருபாலை சந்தி

சாவகச்சேரி:
லிங்கம் ஸ்டோர்ஸ்,
எம். எம். சுல்தான் அப்துல் காதர் அன் பிரதர்

இணுவில்:
குமரகுருபர ஸ்டோர்ஸ்

சுன்னாகம்:
யாழ்ட்டன் ஸ்டோர்ஸ்
ராஜா மெடிக்கல் ஸ்டோர்ஸ்
பிருந்தா மெடிக்கல் ஸ்டோர்ஸ்

கலட்டி:
கே. டி. சிவகுரு,
17, நாச்சிமார் கோவிலடி

சுளிபுரம்:
என். முருகேசு, மூளாய், (மூளாய் ஆஸ்பத்திரி முன்னால்)

தெல்லிப்பளை:
தனலக்ஷ்மி ஸ்டோர்ஸ்,
எஸ். ரங்கநாதன் அன் கம்பெனி

காங்கேசன்துறை:
எஸ். எஸ். வி. சந்திரன் (சந்திரா ஸ்டோர்ஸ்)
ஆசை ஸ்டோர்ஸ்
தையிட்டி.

பண்டத்தரிப்பு:
ஸ்ரீ அம்பாள் ஸ்டோர்ஸ்
ப நோ. கூ. ச. சமாச புடவை சில்லறை விற்பனை நிலையம்
வடலியடைப்பு
ப. நோ. கூ. ச.

ஊர்காவற்றுறை:
பாலா பிரதர்ஸ்

மானிப்பாய்:
வி. எஸ். கணபதிப்பிள்ளை அன் பிரதர்

ஆவரங்கால்:
மல்லிகா ஸ்டோர்ஸ்

துன்னாலை தெற்கு:
ஐ. பொன்னம்பலம்

கரவெட்டி:
நடனமுருகன் மெடிக்கல் ஸ்டோர்ஸ், நெல்லியடி.
ஈஸ்வரி மெடிக்கல் ஸ்டோர்ஸ், நெல்லியடி
கணேஷ் மெடிக்கல் ஸ்டோர்ஸ், நெல்லியடி.

பருத்தித்துறை:
குமாரவேல் மருந்துச்சாலை,
கே. எஸ். மார்க்கண்டு.

சங்கானை:
ஆ. தா. வேலுப்பிள்ளை அன் சன்ஸ்
என். டி. இராசரத்தினம் மார்க்கட்
எஸ். கணபதிப்பிள்ள— பிரைட்ஸ்

வேலணை:
எஸ். வி.
மேற்கு ப. நோ. கூ. ச.

உரும்பராய்:
விக்னேஸ்வரன் ஸ்டோர்ஸ்.

தயாரிப்பாளர்:
பி. எஸ். திசாநாயக்க,
கண்டி ரோட், கம்பளை.
போன்: 454


திரைப்படப் போட்டி 12ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"வானம்பாடி போலமின்னும் கானம்பாடும் வாவிகள்
மலர்கனி குலுங்கிடும் எழில்மிகுந்த சோலைகள்
தேனும் பாலும் பாய்ந்திட செந்நெல் பொழியும் கழனிகள்
தெய்வ கற்பகத்தருக்கள் உய்வளிக்கும் மானிலம்!"

—அமரர் "பரமஹம்ஸதாஸன்"

## 26 சரோஜாவின் கதை

கணேசன் குடியிருந்த அந்தச் சின்னஞ்சிறு வீட்டையும், அது அமைந்திருந்த சூழலையும் ஒரு தடவை நோட்டம் விட்டான் புது விருந்தினனான குமரன். சற்று மேடான நிலப்பரப்பில் அமைந்திருந்த அந்த வீடு, அந்தக் கிராமத்தினின்றும் தன் பற்றை உதறிக்கொண்டு தனித்துக் காட்சி தந்துகொண்டிருந்தது. அந்த வீட்டுக் கூரையில் வேயப்பட்டிருந்த ஒருவகைக் காட்டுப் புல் இறந்து உக்கி வெண்மை நிறமாகக் காட்சியளித்ததைக் கண்ட குமரனுக்கு முதிர்ந்த ஒரு தபசி, நரை கண்ட தன் சடாமுடியை உலுப்பிவிட்டுக்கொண்டு நிஷ்டையில் அமர்ந்திருப்பதுபோற் பட்டது.

வீடு சிறியதாக இருந்தாலும், வீட்டின் நிலப்பரப்பு நல்ல விசாலமாகவே இருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாக முதிர்ச்சியுற்ற இரண்டொரு இறப்பர்மரங்கள்; வீட்டின் முற்றத்தில் நெடிதுயர்ந்த ஒரு றம்புட்டான் மரம்; அதனையடுத்து அடர்த்தியாக வளர்ந்திருந்த இரண்டு மூன்று மங்குஸ்தான் மரங்கள்; விருத்தாப்பிய நிலையிலுள்ள தேன் தோடைகள் சில; வீட்டின் இருமருங்கிலும் இரண்டு இளம் தெமிலித் தென்னைகள்; அதையடுத்து நின்ற கமுகில், மரம் தெரியாத அளவு பற்றிப் படர்ந்திருந்த மிளகுக் கொடியின் பசுமை; அப்பால் இரண்டு மூன்று கோப்பிச் செடிகள். இவற்றை யெல்லாம் கண்ணுற்ற குமரன், தான் ஒரு புது உலகில்பிரவேசித்ததாக உணர்ந்தான். கணேசனுடைய வீட்டின் இந்தச் சூழலையும், வீட்டுக்கு அப்பால் தெரிந்த பசுமை குலுங்கும் நெல்வயலையும் கண்ட குமரன் கணேசனிடம் சொன்னான், 'என்னடா கணேசா! இலங்கையின் பொருளாதாரங்கள் அத்தனையும் இப்படி உன் வீட்டிலேயே தஞ்சம் புகுந்தால், நாட்டின் செல்வ வளம் என்ன ஆவது?'

'குமரா! இந்த நாட்டின் பொருளாதார வளம் மட்டும்தான் என்னுடைய இந்த வீட்டில்முடங்கிக்கிடக்கின்றதென்று எண்ணிக்கொண்டாயா? இலங்கைத்திருநாட்டின் அழகுவளம் கூட என்னுடைய வீட்டில் தான்டா உறைந்துகிடக்கின்றது! இன்னும் சற்றுப் பொறுத்துப் பார். நீயே அந்த உண்மையைஏற்றுக்கொள்வாய்.'

'அத்தனை பேரழகியோ உன் தாமர குமாரி?' 'ஏன் மோகினியும், இலட்சுமியும் எங்கே போனார்கள்? தாமர குமாரிக்கு எந்த விதத்திலும் அவர்களுடைய அழகு குறைந்ததல்ல!'

'எல்லாம் சொல்லிச் சொல்லி என் ஆவலைக்கூட்டுகின்றாயே ஒழிய, இதுவரைக்கும் அந்த அழகுத் தேவதைகளில் ஒருத்தியையாவது எனக்குக் காட்டுகின்றாயில்லையே!'

'பயிற்சிக்காலத்தில் நாம் பயின்ற உளவியலை அதற்குள் மறந்துபோனாயா?'

'அடப் பாதகனே! இப்பொழுது ஏனடா அந்த உளவியலை இங்குஇழுக்கின்றாய்?'

'உன் முட்டாள் தனத்துக்கு அதை இழுத்துத்தானே ஆகவேண்டியிருக்கின்றது. ஒரு பொருளுக்கு எப்போ மறைவுத் திரை போடப்படுகின்றதோ; அப்பொழுதுதான் அந்தப் பொருளைப் பார்க்கவேண்டுமென்ற துடிப்பும், அறிய வேண்டும் என்ற ஆர்வமும் மனிதனுக்கு ஏற்படுகின்றது. இங்கு ஒரு வேடிக்கை பார். நான் உனக்கு முன்னர் எழுதியிருந்தேன் அல்லவா? இங்குள்ள பெண்களெல்லாம் ஆற்றிலும், 'பீலி'யிலும் குளிக்கும்போது தங்கள் மார்பகங்களை ஆடைகளால் மறைப்பதில்லை என்று! தினசரி இந்தக் காட்சிகளை நான். பார்த்து வந்ததில்லை, ஆரம்பத்தில் அப்படிக் காட்சிகளைப் பார்க்கவேண்டுமென்று என்னுள் இருந்த வேகம் இப்போ கணிசமான அளவு குறைந்துவிட்டிருக்கின்றது. அவர்களுடன் சேர்ந்து குளித்துக் குளித்துப் பழகிவிட்டதால்;—அந்தக் காட்சிகளைப் பார்த்துப் பார்த்து மனம் 'சளுக்கத்து' விட்டதால்—அவையெல்லாம் ஆபாசமாகவே எனக்குத் தோற்றுவதாய் இல்லை! ஒருவேளை இங்குள்ள பெண்களெல்லாம் திடீரென்று மார்பகங்களை மறைத்துக் கொண்டு குளிக்க ஆரம்பித்தால் தான் அந்தக்காட்சி ஆபாசமாக எனக்குப் படும்!......'

'டேய் கணேசா! இப்போ நான் உன்னை என்ன கேட்டேன்? நீ என்ன சொல்லிக் கொண்டு போகின்றாய்?'

'குமரா! யாருக்கும் இலகுவில் கிட்டாத கவியுள்ளம் படைத்தவனல்லவா நீ! உன் கவியுள்ளத்தைச் சற்று வியப்பு நிலைக்குக் கொண்டு வந்துவிடுவதால், இலக்கியப் பூங்கன்றில் செழுமையும், மணமுமுள்ள கவிதை மலர்களும் பூக்க வாய்ப்பு ஏற்படும் என்பதற்காகவே இப்படியெல்லாம் 'சஸ்பன்' வைத்துக் கொண்டு போகின்றேன். கவலையுறாதே! உடலால் ஒன்றிவிட்ட அந்த மோகினியையும், இலட்சுமியையும் உளத்தால் ஒன்றிவிட்ட அந்தத் தாமரகுமாரியையும் உனக்குக் காண்பிக்கின்றேன். அதுமட்டுமல்ல; இன்னும் சிறிது நேரத்தில் நாம் இருவரும் கங்கை நீரில் குளிக்கவும் போகின்றோம்... அங்கு, நான் சொன்ன அந்த ஆபாசமற்ற பச்சைக் காட்சியையும் நீ பருகி உருகப் போகின்றாய். ஆக, நீ இங்கிருந்து ஊர் திரும்பும்போது ஒரு புது உணர்வோடு போகப் போகின்றாய் என்பது மட்டும் உறுதி!'

கணேசன் கூறிய வார்த்தைகள் குமரனின் ஆவலைக் கொழுந்துவிட்டு எரியப்பண்ணின. கணேசன் கூறிய அந்த அழகிகள் மூவரையும் பார்ப்பதற்கு அவன் தன்னைத் தயார்படுத்திக்கொண்டிருந்தான்.

'சரோஜாவைப்பற்றி ஏதோ கதையே இருப்பதாகக் கூறினாயே! அதை நீ இன்னமும் கூறவில்லையே'—ஆவல் ததும்பக் கேட்டான் கணேசன்.

'இந்தஉலகில் ஆக உனக்கு மட்டும்தான் 'சஸ்பன்ஸ்' தெரியும் என்று எண்ணமா?' நெஞ்சை விறைப்பாய் வைத்துக் கொண்டு கேட்டான் குமரன்.

'ஐயா ஹிட்ச்காக் அவர்களே 'சஸ்பன்ஸ்' போதும் விஷயத்தை உடையுங்கள்.

குமரன் சரோஜாவின் அந்தக் கதையைக் கூறி முடித்தான்.

அவன் சொன்ன அந்தக் கதையில் அப்படியொன்றும் புதுமையோ? விறுவிறுப்போ இருக்கவில்லை. எல்லாம் சாதாரண சம்பவங்கள் தான்.

சரோஜாவுக்கு தனிமை வெறுத்துவிட்டதாம். வீட்டிலும் அவள் பெற்றோர் திருமணப் படலத்தைப் படிக்கத் தொடங்கி விட்டார்களாம். கூடிய கெதியில் கணேசன் அவள் கரத்தைப் பற்றி, அவளைத் திருமதி கணேசனாக்கி விடவேண்டும். காலத்தை நீட்டிக் கொண்டே சென்றால், அப்புறம் ஒரு நாளைக்கு அவளே கணேசனைத் தேடிக்கொண்டு இங்கு ரயில் ஏறி விடுவாளாம்!

குமரன் சொன்ன இந்த விபரங்களைக் கேட்டுக் கணேசன் உள்ளூர மகிழ்ந்து கொண்டான். அதைவிட அவனுக்குச் சிரிப்பு மூட்டிய சமாச்சாரம், குமரன், கணேசன்—சரோஜா திருமணத்துக்காகத் துடித்த துடிப்பு! ஒற்றைக்காலில் நின்றுகொண்டு கணேசனைக் குதறி எடுத்தான் குமரன்! அவன் படுத்திய அவசரத்தைப் பார்த்ததும், தன்மீது அவன் எவ்வளவு தூரத்துக்கு நம்பிக்கை இழந்திருக்கின்றான்என்பதைக்கணேசனுக்குப் புலப்படுத்தியது. ஓரளவுக்கு அதில் நியாயத்தையும் கண்டான் கணே

(14-ம் பக்கம் பார்க்க)

"ஆற்றோரப் பூங்காவில் நீயும் நானும்
அருகிணைந்து அன்றிலைப்போல் களித்த நாட்கள்
நேற்றுப்போல் என்மனத்துள் இனிக்கு தன்பே!
நினைவெடுத்த போதெல்லாம் உனது வண்ண
வேற்கண்கள் என்நெஞ்சைக் குத்துகின்ற
வேதனையொன் றெனைவந்து வாட்டுதன்பே!
பாற் செம்புக் கன்னத்தில் இதழ் பதித்து
பழம் பறிக்க வருகின்றேன், கவலைவேண்டாம்!"

—"பாலபாரதி"

## 27 மோகினிக் கடல்

குமரன் உமிரியை விழுங்கும் வண்ணம், 'மாத்தயா' என்று மொழிந்துகொண்டு, கட்டைப் பிரமச்சாரியான கணேசன் வாழும் அந்த வீட்டுக்கு சங்கோஷம் சிறிதுமின்றி நடைபயின்று வந்த அந்தப் பெண் வேறு யாருமல்ல; அவன் விட்டுக்குச் சிறிது தொலைவில் இருக்கும் தேநீர்க்கடை மோகினிதான் அங்கு வந்தவள்.

வந்தவளை வைத்தவிழி வாங்காமல் விழுங்கிக் கொண்டிருந்தான் குமரன்.

அவளை அப்படியே விழுங்கிக்கொண்டிருக்க விட்டுவிட்டு, கணேசனும், அவளும் ஏதோ உரையாடத்தொடங்கிவிட்டனர். கணேசன் தடக்கித் தடக்கிச் சிங்களத்தில் பேசுவதும், அந்த 'மழலை' கேட்டு அவள் 'கொல்'லென்று சிரிப்பதும் நல்ல வேடிக்கையாக இருந்தன. இருந்திருந்து கணேசன் குமரனை அவளிடம் காண்பித்து ஏதோ உளற, அந்த உளறலைக் கேட்டுவிட்டு அவள் நாணுவதையும், கோணுவதை கண்ட குமரனுக்கு, அந்தச்சம்பாஷணையின்போக்கும், பச்சைத் தன்மையும் ஓரளவு புரிந்தது.

பேச்சை முடித்துக் கொண்டு மோகினி புறப்பட்டாள். சாரன்போல் இடையில் அவள் உடுத்தியிருந்த துண்டும்,அதற்குமேல் அவள் இறுக்கமாக அணிந்திருந்த சட்டையும், வாளிப்பான அவள் அங்கங்களுக்குவெறிப் பொடிதூவின. அவளது பின்புறத்தோற்றம் கொட்டிச் சென்ற இளமைத்துகள்களை அள்ளி விழுங்கிக்கொண்டு தன்னிலைமறந்து நின்ற குமரனின் தோள்பட்டையை உசுப்பிய கணேசன், 'என்ன 'கடும்பசி'க் கவிராயரே! அவள் சென்று ஐந்து நிமிஷங்களுக்கு மேலாகிவிட்டன. இப்பொழுது என்னுடன் வாரும் கங்கைக்குக் குளிக்கச் செல்வதற்கு' என அழைத்தான்.

விழிப்புற்ற குமரன், 'டேய் கணேசா! என்னடா இதெல்லாம்? வீடுதேடி வருமளவுக்கு மன்மதக்கலையை நீ அவளுக்கு உபதேசித்திருக்கின்றாயா? மாகெட்டிக்காரன்தானடா நீ! ஆமாம்; 'சளசள' வென்று நீயும், அவளும் பேசிக்கொண்டீர்களே தவிர, அவள் யாரென்பதையும், நான் யார்? எப்படிப்பட்டவன்? என்பதையும் அவளுக்கு அறிமுகம் செய்துவைககவில்லையே!' என்று பிடுங்கினான்.

'அறிமுகம் என்ன; இன்று அவள் கரத்தாலேயே உனக்கு உணவுபோடச் செய்கின்றேனே! போதுமா?' என்று கண்சிமிட்டிக்கொண்ட கணேசன், 'டேய் குமரா! அவள்தானடா மோகினி! அவளுடைய கடையில்தான் இவர் சாப்பாடு வைத்துக் [illegible] பாடு என்றால் [illegible] பாடா? 'எல்லாச் சாப்பாடும்' தான்!' என்று அர்த்தம் தொனிக்கக் கூறினான் கணேசன்.

'அப்படியானால் எனக்கு மட்டும் உன் மோகினி வெறும் சாப்பாடு மட்டும்தான் தருவாளோ? நீ கூறிய அந்த 'எல்லாச் சாப்பாட்டை'யும் பெறுவதற்கு நான் அருகதையற்றவனோ?'

'குமரா! இந்த மோகினி இருக்கின்றாளே! இவள் ஒரு கடல்! கடலில், குறிப்பிட்ட ஒரு நதிதான் கலக்கவேண்டும், மற்ற நதிகள் கலக்கக்கூடாதென்ற கட்டுப்பாடும் நியதியும் இருப்பதாக நீ கேள்விப்பட்டதுண்டா? மோகினி என்ற கடலில் கணேசன் என்றநதியும் சங்கமிக்கலாம்; குமரன் என்ற நதியும் சங்கமிக்கலாம்!இவற்றிற்கு உச்சவரம்பு எதுவும் கிடையாது! இப்பொழுது பேசாமல் என்னுடன் வா குளிப்பதற்கு.'

வழியெல்லாம் குமரன் உள்ளத்தில் இன்பச் சுரப்பும், புதிய புதிய கற்பனைகளும் குமுறிப்பாய்ந்தன.

பெண்களின் மன ஆழத்தைப் புலப்படுத்துவதற்காக அவர்களைக் கடலுடன் ஒப்பிடுவதைத் தான் இதுவரை குமரன் கேட்டிருக்கின்றான். பெண்களைக் கடலுடன் உவமிப்பதற்கு இப்படியும் ஒரு கருத்து இருக்கின்றதென்பதைக் கணேசன் வாயிலாகக் கேட்டபின்னர், இந்தக் கடல்—நதி விவகாரத்தை வைத்து ஒரு கவிதை புனைய வேண்டும் என்று அப்பொழுதே தீர்மானித்துக் கொண்டான் குமரன். குமரனின் தீவிர சிந்தனையைக் கவனித்த கணேசன் அவனுடன் பேச்சுக் கொடுத்தான்:

'என்ன; கவிஞர் வாள் அப்படியே கடலாராச்சியில் மூழ்கிவிட்டீர். போல இருக்கின்றதே! மூழ்கியது தான் மூழ்கினீர்கள்; அதிகமாக மூழ்கிவிடாதீர்கள்; மூச்சுத் திணறல் ஏற்படப் போகின்றது!'

'உண்மையைச் சொன்னாயடா நண்பா! என்னுடைய கடலாராய்ச்சியில் மோகினி என்ற கடல் மட்டுமல்ல; தாமரகுமாரி என்ற கடலும், இலட்சுமி என்ற கடலும் குறுக்கிட்டு, என்னை மூச்சுத் திணறலுக்குள் அமுக்குகின்றன.'

தாமர குமாரியின் பெயரைக் குமரன் எடுத்ததும், கணேசனிடமிருந்த வேடிக்கை உணர்வு எங்கோ மறைந்தது. உலகப் பந்தங்களை உதறியெறிந்த ஞானியைப் போல் அகண்ட பரந்த வான வெளியை வெறித்திட்டு நோக்கலானான் அவன்.

'என்னடா கணேசா அப்படியே திக்பிரமை பிடித்தவன் போல் நீ மாறிவிட்டாய்?'

'குமரா! யாரை எது வேண்டுமானாலும் நீ சொல்; ஆனால் தாமர குமாரியை மட்டும் அப்படிக் கடல் அது

(14-ம் புக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பி. துரைராசா,
கொட்டகலை.

கே: மலையகத்தில் பல இடங்களில் தொழிலாளர் கலகம் பரவாத காரணம் ஏன்?

ப: கலகம் என்று எதைக் கூறுகிறீர்? வேலை நிறுத்தத்தையா? வேலைநிறுத்தம் கலகமல்ல அது தொழிலாளரின் சட்டபூர்வமான ஒரு போராட்டம்.

கே: மனிதனுடைய பொறுமைக்கு காரணம் என்ன?

ப: உயர்வு தாழ்வுதான் காரணம். உயர்வு தாழ்வுக்குக் காரணம் ஆசை. எனவே பொறுமையின் அடிப்படை ஆசைதான்.

ஃ

சு. பாலகிருஷ்ணன்,
வெள்ளவத்தை.

கே: ஐயா, தனதுசெல்வம் அந்தஸ்துப்பற்றி புகழ்ந்து பெருமைகொள்ளும் எனது நண்பனொருவன் அதேநேரத்தில் தனது வாழ்க்கை இரகசியம் முழுவதையும் என்னிடம் கூறுகிறானே!

ப: கொல்லன் தெருவில் ஊசிவிற்கும் புத்திசாலி அவர்.

கே: முதலாளிகளின் லாபத்தை அப்படியே அரசாங்கம் உறிஞ்சிவிட வேண்டும் என்று அறிஞர் அண்ணா கூறிவைத்தாரே காரணம் என்ன?

ப: காரணம் 'லாபம்' என்பது முதலாளிக்குச் சொந்தமானதல்ல என்பதுதான். பிறரது உழைப்பின் மதிப்பே அது. அது உழைப்பைக் கொடுத்தவர்களுக்கே சொந்தமானது. எனவே அதனை உறிஞ்சியெடுக்குமாறு கூறுகிறார் அண்ணா.

ஃ

இ. நா. தியாகராசா,
கொழும்பு-6.

கே: வாழ்க்கையில் ஆண் தவறிழைத்தால் உலகம் அவனை மன்னித்து விடுகின்றது. அதே உலகம் ஒரு பெண் தவறிழைத்தால் ஒதுக்கித் தள்ளுகின்றது. ஏன் இந்த வஞ்சகம்?

ப: உலகில் பெண்ணைவிட ஆண் வல்லவனாக இருப்பது தான் காரணம்.

கே: அதிகமாக நாட்டில் நடைபெறும் குற்றங்களுக்கு மதுவெறியும் சாதிப்பூசலுமே தூண்டுதலாக இருக்கின்றன. இவைகளை ஒழித்துக்கட்ட யாதுசெய்யலாம்?

ப: மது அருந்தாவிட்டால் வெறி உண்டாகாது. உயர் சாதி ஒன்று இல்லையேல் தாழ்ந்த சாதியும் இருக்காது. பூசலும் ஏற்படாது.

கே: சமுதாயத்தில் ஏற்படும் ஊழல்களைக் களைந்தெறிய யாதுசெய்யலாம்!

ப: ஊழல்களைக் களைந்தெறிவதால் பயனில்லை. ஊழல்கள் ஏற்பட சமுதாய அமைப்புத்தான் காரணம். அந்த அமைப்பை மாற்றுங்கள். ஊழல்கள் ஏற்படா.

கே: அன்புக்கும் காதலுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்ன?

ப: வீட்டுக்கும் வாடிவீட்டுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகள்தான்.

ஃ

எம். பீ. கே. ராசலிங்கம்,
புதுவட்டகுடை.

கே: நண்பனை நல்லவனா கெட்டவனா என்பதை எப்படித் தெரிந்துகொல்லுவது?

ப: உங்களுக்கு ஓர் ஆபத்து ஏற்படும்போது அதனைத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் தெரிந்துகொண்ட பிறகு அவரைக் கொன்று விடாதீர்கள்.

ஃ

அ. சிவப்பிரகாசம்,
ஏழாலைமேற்கு.

கே: ஓய் குயுக்தியாரே தேசிய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் என்னவாக அமைந்திருக்கும்?

ப: டாக்டர் காமினி கொரியா உடன் விஷயமாக வாஷிங்டனுக்குச் சென்று திரும்பிய பிறகுதான் கூற முடியும்.

ஃ

கே. பீ. எம். சித்திக்,
பலாங்கொடை.

கே: திருக்குர்-ஆனிலுள்ள உண்மையான சோஷலிஸத்தைச் சொல்லும்போது மார்க்ஸீயவாதி என்று தூசிக்கிறார்களே சில முஸ்லீம்கள். இவர்களுக்கு உண்மையான சோஷலிஸத்தை ஏற்றுக்கொள்ளச் செய்ய ஒரு வழி கூறும்பார்க்கலாம்?

ப: ஒரேவழி இஸ்லாத்தைச் சரிவரக் கற்றுக் கொள்ளுமாறு அவர்களைத் தூண்டுவதுதான். நபிகள் நாயகம் அவர்களைப் பின்பற்றியே மார்க்ஸ் தமது பொருளாதார சித்தாந்தை உருவாக்கினார் என்பதில் ஐயமில்லை.

> திருவாளர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> த. பெ. இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

பாலச்சந்திரர், புங்குடுதீவு.

கே: எனது வருங்கால மாமா, மாமி ஒவ்வொரு நாளும் அதிகாலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணி வரையும் வீட்டில் சண்டை போடுகிறார்கள். நான் இக் குடும்பத்தில் பெண் எடுத்தால் எனது நிலை எப்படியாக இருக்கும்?

ப: சண்டையில் அம்பயராகக் கடமையாற்றும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கலாம். சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்!

ஃ

கே. ஆர். விசுவையா,
யப்பாமைதோட்டம்.

கே: சிறுபான்மை மக்களுக்கு அளிக்கும் நியாயமான உரிமைகளையும் சலுகைகளையும் எதிர்க்கட்சியினர் தடுப்பது சரியா?

ப: அவன் மாமன் மகளைக் காதலிக்கிறான். முறைப் பெண். காதலும் தெய்வீகமானது. ஆனால் அக்காதலை முறியடிக்க சிலர் சதி செய்கின்றனர். அச் சதிகாரர்களைப் போன்றவர்கள் தான் இந்த எதிர்க்கட்சியினர். சரியோ நியாயமோ அவர்களின் கண்ணில் படுவதில்லை.

ஃ

எம். எம். புகாரி,
ஹொறுவாபொத்தானை.

கே: அன்றிருந்த யூ. என்' பி. அரசாங்கத்துக்கும் இன்றிருக்கும் யூ. என். பி. அரசாங்கத்திற்குமுள்ள வித்தியாசம் என்ன?

ப: அன்று தமிழ்க் காங்கிரஸ் சேர்ந்திருந்தும் அது யூ. என்.பி.அரசாங்கமாகவே இருந்தது. இன்று தமிழரசுக் கட்சி சேர்ந்திருப்பதால் அது தேசிய அரசாங்கமாகியுள்ளது.

ஃ

அ. தவராசா,
ஊர்காவற்றுறை.

கே: சர்வாதிகார ஆட்சியின் முதல்படி என்ன?

ப: இல்லாளின் எல்லாக் கேள்விகளுக்கும் ஒன்று விடாது நீங்கள் பதிலளிக்கத் தொடங்கிவிட்டால், வீட்டில் சர்வாதிகார ஆட்சி ஏற்பட அதுதான் முதற்படி.

கே: கூட்டுறவுச் சங்கங்களால் நன்மை உண்டா?

ப: கூட்டு—உறவு இல்லையேல் உலகமே ஏதையா? அதற்கென சங்கங்களே ஏற்பட்டுவிட்டால் கூட்டும் உறவும் மென்மேலும் விருத்தியடையுமே!

ஃ

மிக்கேல், மூதூர்-1.

கே: கொம்யூனிஸ்ட் வாதிகள் தமது கிளைக் காரியாலயத்தில் (குருநாகலில்) கட்சி என்பதற்கு 'கற்சி' என எழுதி வைத்திருக்கிறார்களே?

ப: அந்த மாற்றமும் மாஸ்கோவிலிருந்தே வந்திருக்கலாம்.

ஃ

பொ. கணேசன், கல்முனை-3.

கே: அரசியலை சிறந்த முறையில் நடத்தக்கூடிய கட்சியைக் கூறுவீரா?

ப: ஆளும் கட்சி.

மு. சுவாமிநாதன்,
புதுக்குடியிருப்பு

கே: ஜனநாயகத்தின் சிகரமாக விளங்கும் பிரிட்டனில் அண்மையிற் தொழிற் கட்சி அரசாங்கம் தோல்வியடைந்தும் ராஜினாமாச் செய்யாதிருப்பது நியாயமா?

ப: நியாயமே! பிரிட்டிஷ் பாராளுமன்ற சம்பிரதாயம் அதற்கு இடமளிக்கிறது.

ஃ

இ. ரா. ராஜசுந்தரம்,
இறக்குவானை.

கே: சிரித்துப் பேசும் பெண்களை நம்பலாமா?

ப: சிரித்தாலும், அழுதாலும் நம்பக் கூடாத பெண்களை நம்பாதீர்!

கே: திருமதி குயுக்தியாரின் வயது என்ன?

ப: என்னைவிட 15 வயது மூத்தவள்.

ஃ

வீ. சண்முகலிங்கம்,
பலாங்கொடை.

கே: பொன்னம்பலம் ஒப்பந்த எதிர்ப்புக் கூட்டங்களை இம்முறையும் நடாத்துவாரா?

ப: கூட்டம் எதுவாகஇருப்பினும் இப்போதெல்லாம் ஒப்பந்தத்தை எதிர்க்காமல் அவரால் பேச முடியவில்லையே!

ஃ

எஸ். குழந்தைவேல்,
பெரிய பாராவத்தை.

கே: புத்தருடைய போதனையில் உங்களுக்கு ரொம்பப் பிடித்தது எது?

ப: 'படைப்பு' பற்றிய அவருடைய போதனை.

ஃ

ஆர். எஸ். பாண்டியன்,
பதுளை.

கே: அடிக்கடி வரும் பொதுத்தேர்தலாற் தான் ஜனநாயகம் பாதுகாக்கப்படுகிறது என்கிறார்களே, அதனால் என்ன பிரயோசனம்?

ப: பணக்காரர்களின் பணப் பையிலுள்ள சரக்கு வாக்காளர் கைக்கு மாறுவதுதான் பிரயோசனம். ஜனநாயகத் தேர்தல் என்பது வாக்காளர்களுக்கு ஒரு நாள் வரவு.

ஃ

எஸ். எஸ். பர்னந்து,
நீர்கொழும்பு.

கே: நாணம்பெண்களுக்கு அழகுதருகிறது என்கிறேன். ஒப்புக்கொள்கிறீர்களா?

ப: அது அந்தக்காலம்! இந்தக்காலத்தில் லிப்ஸ்டிக், ஸ்னோ, முகப்பவுடர் ஆகியவைதான் பெண்களுக்கு அழகுதருகிறது.

---

### சம்பந்தம் வேண்டாம்

புகையிரத-பஸ் சேவைகளில் சீர்திருத்தங்களைச் செய்ய, இவ்விரு சேவைகளுடன் தொடர்பு கொள்ளாத ஒருவருடைய தலைமையின் கீழ் குழு ஒன்று நியமிக்கப்படும்.

—செய்தி.


அருமையான யோசனை! தனக்குச் சம்பந்தமில்லாத விடயங்களில் ஒருவர் தலையிட்டாக வேண்டிய அவசியத்தை இந்த யோசனை வலியுறுத்துகின்றது.

### வளரும் துறை

பல்கலைக் கழகத்தின் புதிய கிளைகள் யாழ்ப்பாணம், காலி, குருநாகலை முதலிய இடங்களில் அமைக்கப்படும்.

—செய்தி.

இந்த நாட்டில் பல துறைகளிலும் வளர்ச்சி குன்றி வருகிறது. ஆனால் வேலை இல்லாத் திண்டாட்டம் மட்டும் பெருமளவு வளர்ந்து வருகிறது. வளரும் வேலையில்லாத் திண்டாட்டப் பயிருக்கு மேலும் நீர் வார்க்கப்படுகிறது.



### வைத்தியக் காரணம்

பதுளை நகரில் பிச்சைக்காரர்கள் பிச்சை கொடுக்காதவர்களைத் திட்டித் தீர்க்கின்றனர். வைத்தியகாரர்களின் தொல்லை பும் அதிகரித்துவிட்டது.

—செய்தி.

பிச்சை கொடுக்காத காரணத்தால் பிச்சைக்காரர்களிடம் திட்டு வாங்கியவர்களுக்கே வைத்தியம் பிடித்துவருவதாகக் கருதப்படுவதால் இது பற்றி புலன் விசாரிக்க அங்கொடையிலிருந்து ஒரு குழு அவசரமாக வந்து... விரைகிறதாம்.

### தேசிய விவகாரம்

தேசிய அரசாங்கம் என்று வெறுமனே கூறிக் கொண்டிருப்பதில் பலனில்லை. உண்மையான தேசியத்தை வளர்க்க அரசாங்கம் முன் வரவேண்டும்.

—யக்கலையில்
டாக்டர் என். எம்.

தேசியம் என்றால் என்னவென்று அரசாங்கத்தாருக்குச் சொல்லித்தர டாக்டர் ஒரு பள்ளிக் கூடம் நடத்தப் போவதாக அடிபட்ட வதந்தி உண்மையென்று இத்தால் தெரிய வருகிறது.

### தண்டச் சோறு?

நாட்டில் நிலவும் மரக்கறித் தட்டுப் பாட்டை நீக்க இராணுவத்தினர் 1000 ஏக்கர் நிலத்தில் மரக்கறி பயிரிடுவர்.

—செய்தி.

'தண்டச்சோறு' என்ற பதத்திற்கு இனிமேல் அகராதிகளில் அர்த்தம் தேட முடியாது போய் விடும். ஏனெனில் இது கால வரை இந்நாட்டின் அரசியல் அகராதியில் இராணுவம் என்பதற்கு 'தண்டச் சோறு' என்று [illegible] வந்துள்ளது.

இனும்!
ரூபா 550-00 தரும்
அருத என்ணெய்
அதிர்ஷ்டப் பரிசு
அஞ்சலட்டைகள்!
இன்றே உங்கள் வியாபாரியிடத்தில்
கேட்டு வாங்குங்கள்!
தயாரிப்பாளர்:
பி. எம். திசாநாயக்க,
கம்பளை. போன்: 454.

'மாய ஜோதி' ஊது பத்திகள்
"பாட்டாளி தொடக்கம் பணக்காரர் வரை"
விரும்புவது "மாய ஜோதி" ஊது பத்திகளே!
ஏன்?
★ அதன் சுகந்த நறுமணம்
★ அதன் நிலைத்து எரியும் தன்மை
★ நவீன தயாரிப்பு
★ அதன் நியாய விலை.
நீங்கள் மட்டும் ஏன் தயக்கம்?
வாங்குங்கள் ஒரு முறை, நிலைத்து விடும் 'மாய ஜோதி'
ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்றீஸ்.
128 2, வாட்பிளேஸ், கொழும்பு-7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரியில் இராணுவத்தினர் கைது செய்த சட்டவிரோத குடிவரவினர் தொகை என்ன?

## பிரதமர் டட்லியிடம் பண்டிதர் இரத்தினம் கேட்பார்

பூநகரிக் காரியாதிகாரி பகுதியிலும், பளைக் காரியாதிகாரி பகுதியிலும் உள்ள படை வீரர்கள் எப்பொழுது முதல் சட்டவிரோதக் குடி வரவினரைத் தடுப்பதற்கும், கைது செய்வதற்கும் அனுப்பப்பட்டனர்? அவர்கள் அவ்வப் பகுதிகளில் உள்ள கிராம சேவகர் பிரிவில் கைது செய்யப்பட்டவர்கள் தொகை என்ன? அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் விடுதலையடைந்தவர்கள் தொகை என்ன? நாடு கடத்தப்பட்டவர் தொகை என்ன? ஆகிய கேள்விகளைக் கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் ஆகஸ்ட் 23-ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் பாராளுமன்றக் கூட்டத்தில் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவிடம் கேட்கவிருக்கிறார்.

அன்றைய பாராளுமன்றக் கூட்டத்தில் கல்வி அமைச்சரிடமும் பின்வரும் கேள்வியைத் திரு. இரத்தினம் கேட்கவிருக்கிறார்.

அ. 1960-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் 1965-ம் ஆண்டு யூன் மாதம் வரையும் கலாச்சார திணைக்களம் கலை, இலக்கிய சங்கங்களுக்கும், கலைஞர்கள், புலவர்களுக்கும் கொடுத்த நன்கொடைகள், பண உதவிகளைக் கொடுக்கப்பட்ட திகதிகளுடன் கல்வி அமைச்சர் கூறுவாரா?



ஆ. இந்தப் பணத்தில் தமிழ்க் கலை கலாச்சார நிலையங்களுக்கும், தமிழ் கலைஞர்களுக்கும் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

இ. ஏனையோருக்குக் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

ஈ: இக்கொடைகளில், இக்காலப் பகுதியில் கிளிநொச்சித் தொகுதியில் உள்ள சங்கங்களுக்கும் கலைஞர்களுக்கும் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

### ஜூலை 28

இத்திங்கள் 28-ம் நாள் புதன்கிழமை பாராளுமன்றம் கூடும் பொழுது பட்டிருப்புப் பிரதிநிதி திரு. சி. மூ. இராசமாணிக்கம், கல்வி அமைச்சரிடம் பின் வரும் கேள்விகளைக் கேட்கவிருக்கிறார்:

(அ) பயிற்றப்பட்ட ஆசிரியரான திரு. பி. குணரத்தினம் என்பவருக்கு சம்பளக் கொடுப்பனவிலுள்ள வித்தியாசத் தொகை விரைவில் வழங்கப்படுமென சம்பள மாற்றுக்கிளை 12-9-61 ஆம் தேதிய SCI இலக்கத்தைக் கொண்ட கடிதத்தின் மூலம் அவருக்கு அறிவித்திருந்துங்கூட 1-10-57 முதல் 1-11-60 வரை அவருக்குக் கிடைக்க வேண்டிய சம்பள நிலுவைத் தொகை அவருக்கு வழங்கப்படவில்லையென்பதை அவர் (கல்வி அமைச்சர்) அறிவாரா?

(ஆ) திரு. குணரத்தினம் அன்றிலிருந்து மூன்று பாடசாலைகளுக்கு மாற்றஞ் செய்யப்பட்டும் கல்வி அதிபதிக்கு எழுதியிருந்துங்கூட அவருக்குப் பதிலெதுவும் கிடைக்கவில்லையென்பதை அவர் அறிவாரா?

(இ) அவருக்குரிய சம்பள வித்தியாச தொகையை அவருடைய தற்போதைய பாடசாலையான மண்டூர் அ. த. க. பாடசலையில் தாமதமின்றி வழங்குமாறு திணைக்களத்துக்கு அவர் கட்டளையிடுவாரா?

### ஆகஸ்ட் 3

ஆகஸ்ட் திங்கள் 3-ம் நாள் செவ்வாய்க்கிழமையன்று கூடவிருக்கும் பாராளுமன்றத்தில் மூதூர் முதல்வர் ஜனாப் எம். ஈ. எச். முகம்மதலி, கமத்தொழில் உணவு அமைச்சரிடம் பின் வரும் கேள்விகளை எழுத்து மூலம் கேட்கவிருக்கிறார்:

(அ) 1962, 1963, 1964 ஆகிய வருடங்களிலும்-இற்றைவரையும் திருகோணமலை மாவட்டத்திலுள்ள அரிசி ஆலைகள் எத்தனை திடீர் பரிசோதனை செய்யப்பட்டனவென்பதையும், அத்தகைய அரிசி ஆலைகள் ஒவ்வொன்றிலும் கண்டுபிடிக்கப்பட்ட குறைவுகள் எவ்வளவு என்பதையும் அவ்வரிசியாலைகளின் சொந்தக்காரர்களின் பெயர்களையும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும் எவ்வெத் தேதிகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவென்பதையும் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) 1962, 1963, 1964 ஆகிய வருடங்களிலும் இற்றைவரையும் இவ்வரிசி ஆலைகள் எவற்றினதாவது அனுமதிப் பங்குகள் இரத்துச் செய்யப்பட்டோ தற்காலிகமாக நிறுத்தப்பட்டோவுள்ளதா? அவ்வாறாயின் அதற்குரிய காரணங்களும், அத்தகைய அரிசி ஆலைகளின் பெயர்களும் என்ன?

(இ) திருகோணமலை மாவட்டத்திலுள்ள அரிசி ஆலை ஒவ்வொன்றிற்கும் தற்பொழுது வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பங்குகள் எவ்வளவு? இவ்வரிசி ஆலை



களுக்கு முன்னர் வழங்கப்பட்ட அனுமதிப் பங்குகள் எவ்வளவு?

அன்றைய கூட்டத்தில் சமூக சேவை அமைச்சரிடமும் ஜனாப் முகம்மதலி பின்வரு கேள்விகளுக்கு எழுத்து மூலமான விடைகளைக் கேட்கவிருக்கிறார்:

(அ) கடந்த வருடம் ஏற்பட்ட சூறுவளியினால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு வழங்குவதற்கென வெளிநாடுகளிலிருந்து பணமாகவும் பொருட்களாகவும் பெறப்பட்ட கொடைகள் எவ்வளவு?

(ஆ) பெறப்பட்ட கொடைகள், கொடைகளை வழங்கிய நாடுகள் அவை பங்கீடு செய்யப்பட்ட விதம், எங்கு எப்பொழுது பங்கீடு செய்யப்பட்டன ஆகிய விபரங்களைக் கொண்ட விபரமான அறிக்கையொன்றை அவர் (அமைச்சர்) சமர்ப்பிப்பாரா?

### ஆகஸ்ட் 17

ஆகஸ்ட் 17-ம் நாள் செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கும் பாராளுமன்றக் கூட்டத்தில் மூதூர் முதல்வர் ஜனாப் எம். ஈ. எச். முகம்மதலி பின் வரும் கேள்விகளை துணை வர்த்தக அமைச்சரிடம் கேட்கவிருக்கிறார்.

(அ) கிளிவெட்டி-மூதூர்-கிண்ணியா ஆகிய இடங்களிலிருந்து 1963 அல்லது 1964 ஆம் ஆண்டில் நெல் ஏற்றிச் செல்வதற்கான ஒப்பந்த வேலை கிண்ணியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத்தினால் எவ்வடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது?

(ஆ) அதிற் சம்பந்தப்பட்டுள்ள கால எல்லை, ஆட்கள், பணம் அல்லது வேறு வகையிலான தொகைகள் ஆகியவற்றின் விபரங்கள் என்ன?

(இ) பணம் அல்லது பொருட்களில் குறைவுகள் எதாவது கண்டுபிடிக்கப்பட்டதா?

(ஈ) ஆமெனில் அவற்றின் விபரங்களை அவர் தெரிவிப்பாரா?

(உ) அத்தகைய குறைவுகள் சம்பந்தமாய்த் தலைவரும் மற்றைய சங்க உத்தியோகத்தர்களும் எவ்வகையில் தனித்தனி பொறுப்புடையராயிருந்தனர்?

(ஊ) அத்தகைய குறைவுகளை அறவிடுவதற்கென இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கையென்ன? இது சம்பந்தமாக மேலும் என்ன நடவடிக்கை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?

### ஆகஸ்ட் 19

ஆகஸ்ட் திங்கள் 19-ம் திகதி வியாழக்கிழமை கூடவிருக்கும் பாராளுமன்றக் கூட்டத்தில் பின் வரும் கேள்விகளை பட்டிருப்புப் பிரதிநிதி திரு. சி. மூ. இராசமாணிக்கம் கமத்தொழில் உணவு அமைச்சரிடம் கேட்கவிருக்கிறார்!

(அ) (i) இளைப்பாற்றிச் சம்பளம், (ii) பொது அந்தஸ்து ஆகியன சம்பந்தமாய் கமத் தொழிற் திணைக்களத்திலுள்ள உணவு உற்பத்தி மேற்பார்வையாளரின் தற்போதைய நிலை என்ன?

(ஆ) காணி அபிவிருத்தி மேற்பார்வையாளரைப் போன்று அதே அந்தஸ்தில் உணவு உற்பத்தி மேற்பார்வையாளர்களை அமர்த்தி, முன்னால் கூறப்பட்டவர்களைப் போன்று பின்னாற் கூறப்பட்டவர்களை பதவியிற் சேர்க்கும்போது நிரந்தரமான, இளைப்பாற்றுச் சம்பளத்தையுடைய பதவியினராக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

இ) உணவு உற்பத்தி மேற்பார்வையாளர்களின் பதவிப் பெயரை "கமத் தொழில் விஸ்தரிப்புத் தொழிலாளர்" என அவர் மாற்றுவாரா?

அன்றைய கூட்டத்தில் மூதூர் முதல்வர் ஜனாப் எம். ஈ. எச். முகமதலி பின் வரும் கேள்விகளை நிதி அமைச்சரிடம் கேட்கவிருக்கிறார்.

(அ) சம்பள முற்பணத்தைப் பெற்றுக் கட்டடம் அமைப்பதற்கான காணியைக் கொள்வனவு செய்தவர்களும், அது கொள்ளப்பட்ட இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றஞ் செய்யப்பட்டுள்ளதன் விளைவாய் அக் காணியை விற்றுள்ளவர்களுமான அரசாங்க ஊழியர்கள், அவர்கள் கடனைச் செலுத்திய பின்னருங்கூட



1957, ஆகஸ்ட் 22-ம் தேதிய 397 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம், இரண்டாவது சம்பள முற்பணமொன்றைப் பெறமுடியாதவாறு தடைசெய்யப்பட்டுள்ளனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) அரசாங்க ஊழியர்கள் இரண்டாவது சமபள முற்பணமொன்றைப் பெறுவதற்கேதுவாக 397 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையை அவர் வாபஸ் பெறுவாரா?


ஒரு வெற்றுப் போத்தலுக்கு
ரூபா 550-00 கிட்டும்
இன்றே உங்கள்
அருகே எண்ணெய்
வியாபாரியிடத்தில்
விபரம் கோரவும்!
ஆயாரிப்பாளர்:
பி. எம். திசாநாயக்க,
கம்பளை. போன்: 454.


## தமிழிலும் உண்டு

தமிழ் மொழிப் பிறப்புப் பதிவுப் பத்திரங்கள் நாட்டின் எப் பகுதியில் தேவைப்பட்டாலும் அவற்றை அனுப்பி வைக்க மத்திய பதிவுத் திணைக்களம் தயாராக இருப்பதாக உள்நாட்டு அமைச்சர் திரு. தகநாயகா தமிழரசுத்தந்தை திரு. செல்வநாயகம் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் அநேக பகுதிகளில் தமிழ் மொழியிலான பிறப்புப் பதிவுப் பத்திரங்கள பாவனையில் இல்லையென்பதைச் சுட்டிக்காட்டி திரு. செல்வநாயகம் எழுதிய கடிதத்திற்கு அமைச்சர் இவ்வாறு பதில் அனுப்பியுள்ளார்.

## நடமாடும் பொருட்காட்சி

ஈராக் ஒரு நடமாடும் பொருட் காட்சியை நடத்துகிறது. இப் பொருட்காட்சி ஜெர்மன் சனநாயகக் குடியரசு உட்பட எட்டு ஐரோப்பிய நாடுகளில் நடத்தப்படும். ஈராக்கின் நவீன கலை வளர்ச்சியை இப்பொருட்காட்சி எடுத்துக்காட்டும். 32 கலைஞர்களால் திட்டப்பட்ட 91 சித்திரங்களும் இப்பொருட் காட்சியில் இடம் பெறும்.

அமைச்சர் திரு. தகநாயக்கா மேலும் தமது கடிதங்தில், நாட்டின் சகல பாகத்களிலும் தமிழ்ப் படிவங்கள் பாவனையில் இருப்பதாகவும், தேவையேற்படும் பொழுது கொடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## தொழிலாளர் கழக கலைவிழா

இலங்கைத் தொழிலாளர் கழக இராகலைக் கிளை எதிர்வரும் தீபாவளித் தினத்தன்று இராகலை நகரில் ஒரு கலை விழா நடாத்த தனது கலை-கலாச்சாரப் பிரிவுடன் ஆலோசித்து வருகிறது. இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு, நுவரெலியா, கந்தப்பளை, இராகலை, உடப்புசலாவைமாவட்டங்களிலுள்ள தோட்டங்களிலும் நகரங்களிலும்இயங்கிவரும் மன்றங்களுடன்-தொடர்பு கொண்டுவருகிறது.

கட்சிப் பாகுபாடின்றி நுவரெலியா, கந்தப்பளை, இராகலை உடபுசலாவை ஆகிய பகுதிகளில் வாழும் தோட்டத்து இளைஞர்கள் தங்கள் கலைத்திறனை வெளிக்காட்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய வங்கியில் தமிழும் இடம் பெறுகிறது

## தமிழரசுத் தலைவர் தலையிட்டதின் விளைவு

### செல்வநாயகம் தமிழில் கடிதம் எழுதி கட்டளையிட்டதின் சாதனை—தமிழில் மத்திய வங்கியின் வேலை—அதுதான் அரசாங்கத்தின் கொள்கையாம்!

மேற்கண்ட தலைப்புகளின் கீழ் 'ஜனதின' 21-7-65ந் திகதி வெளியிட்டுள்ள ஒரு செய்தியில் மத்திய வங்கியிலிருந்து வெளியாகும் அறிக்கைகள், தஸ்தாவேஜுகள், செய்திக் கட்டுரைகள், யதாஸ்துகள் முதலியவை உடனடியாகத் தமிழுக்கு மொழி பெயர்ப்பதற்காகத் தனிப்பகுதியொன்று நிறுவ முடிவு செய்யப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகம் மத்திய வங்கி கவர்னருக்குப் புகார் செய்ததின் பேரில் மேற்கண்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

முன்பு ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட சம்பளப் பட்டியல் பின்னர் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டதால் அதில் கையெழுத்திட முடியாதென தமிழ் உத்தியோகத்தர்கள் மறுத்ததே இந்நடவடிக்கையின் ஆரம்பமாகும்.

அந்த உத்தியோகத்தர்களிற் சிலர் இதுபற்றி திரு. செல்வநாயகத்துக்குத் தெரிவித்ததின் பேரில் அவர் 'கடுமையாக' எழுதப்பட்ட ஒரு கடிதத்தை வங்கி கவர்னருக்கு அனுப்பி வைத்தார்.

தமிழ் பேசும் மக்களுடன் அவர்களின் மொழியான தமிழ் மூலம் தொடர்பு கொள்வதே தேசிய அரசாங்கத்தின் கொள்கை என்பதை இக்கடிதத்தில் சுட்டிக் காட்டிய திரு. செல்வநாயகம் இக்கொள்கையை அமுல் நடத்துவதில் கஷ்டங்கள் இருந்தால் அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக அந்தக் கஷ்டங்களைத் தனக்குத் தெரிவிக்குமாறு கேட்டிருந்தார்.

தமிழில் எழுதப்பட்ட இந்தக் கடிதத்தைப் பரிசீலனைச் செய்த மத்திய வங்கி அறிக்கைகள், தஸ்தாவேஜுகள் முதலியவையெல்லாம் தமிழில் வெளியிட முடிவு செய்ததோடு, வங்கியின் உபயோகத்துக்காக தமிழ் தட்டெழுத்துப் பொறி ஐந்து வாங்குவதற்கும் உடனடியாக கட்டளையிட்டது.

வங்கியுடன் தமிழ் மொழியில் கொடுக்கல் வாங்கல் செய்யும் வாடிக்கைகாரர்களுக்கு அவசியமான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு மத்திய வங்கியின் பொருளாதாரக்குழு முடிவு செய்துள்ளது. அத்துடன் பெயர்ப் பலகையில் மத்திய வங்கியின் பெயர் தமிழில் பொறிப்பதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## விருந்தினர் மீது குற்றச்சாட்டு

சர்வதேச முஸ்லிம் ஐக்கியத்தை ஏற்படுத்தி வருகிறவரும் தற்போது இலங்கைக்கு விஜயம் செய்திருப்பவருமான சிறந்த அறிஞர் டாக்டர் ஸஈத் ரமழான் சம்பந்தமாக 'ஜனதின' 20-7-65ந் திகதி கீழ்க்காணும் செய்தியை வெளியிட்டுள்ளது:

'டாக்டர் ஸஈத்ரமழான் அவர்களுக்கு நேற்று கொழும்பு மாநகர சபை அளித்தவரவேற்பை மாநகர சபையின் இடதுசாரி உறுப்பினர்கள் பகிஷ்காரம் செய்தனர்.

இஸ்லாமிய கலாசாரத்தை உலகம் முழுவதும் பரப்பும்போர்வையில் நாடு பூராவும் சுற்றுப் பிரயாணம் செய்து வரவேற்புகளைப் பெறும் டாக்டர் ரமழான் அவர்கள் உட்பட ஒரு கோஷ்டி 1954ல் அலெக்ஸண்டிரியாவில் எகிப்து அதிபர் அப்துல் நஸாரைக் கொலை செய்து எதிர்ப் புரட்சி நடத்துவதற்கு ஆயுதமேந்திய ஒரு ஸ்தாபனத்தை நிறுவுவதற்காக நடவடிக்கை எடுத்ததாக நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டது. எனவே எகிப்திலிருந்து தப்பிச் சென்ற அவருக்கு ஜோர்டான் குடியுரிமையும், பிரிட்டிஷ் — அமெரிக்க ஒற்றர் ஸ்தாபனமான ஜினிவாவிலுள்ள இஸ்லாம் மத்திய நிலையத்தின் அதிபர் பதவியும் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஜினிவாவில் அவரால் நிர்வகிக்கப்படும் இஸ்லாமிய நிலையத்தின் இலங்கைப்

(9-ம் பக்கம் பார்க்க)

### உத்தியோக மொழிக்கு மாறாக

## செயலாற்றவோ பேசவோ கூடாது

## தமிழ் பிரதிநிதிகளுக்கு "லங்காதீப" புத்திமதி

'உத்தியோகமொழி மசோதா சட்டமாக்கப்பட முன்பு சேவையிற் சேர்ந்த அரசாங்க ஊழியர்களுக்குச் சிங்களத்திற் தேர்ச்சிபெற கடந்த 9 ஆண்டுகளில் முடியவில்லையெனில், இன்னும் அவகாசம் கொடுப்பதால் அவர்கள் அத்தேர்ச்சியைப் பெறுவார்களென்று நம்பமுடியுமா? இந்த ஊழியர்களுக்கு இப்பொழுது சிங்களத்தில் தேர்ச்சிபெற முடியாவிட்டால், அவர்களை ஓய்வுபெற அனுமதிப்பதைத் தவிர வேறுவழி கிடையாது. இந்நாட்டின் பெரும்பான்மை மக்களின் மொழியால் அரசாங்க அலுவல்களை நடத்தும் பொருட்டு, நியாயமான கால அளவுக்குமேல் அவகாசம் கொடுப்பதனுல் அரசாங்க ஊழியர்களுக்கு ஏற்படும் வசதிக் குறைகளைப்பற்றி இன்னும் பார்த்துக்கொண்டிருப்பது அறிவுடமையாகாது.'

'லங்காதீப்ப' பத்திரிகை 21-7-65ந் திகதி மேற்கண்டவாறு தலையங்கம் தீட்டியுள்ளது.

இத்தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:-

'பொரளையில்நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா—மொழிக் கொள்கை பற்றி திட்டவட்டமான தெளிவான ஒரு வாக்குறுதியை மக்களுக்கு அளித்தார்.

'சிங்களம்மட்டும் இந்நாட்டின் உத்தியோகமொழியாக அமுல்நடத்தப்படும்மொழிக் கொள்கையில் ஓர் எழுத்தைக்கூட தேசிய அரசாங்கம் மாற்ருது என்று, நாட்டின் பிரதமர் என்ற முறையில் நான் பொதுமக்களுக்கு வாக்குறுதி அளிக்கிறேன்' என்று பிரதமர் கூறும்போது அக்கூற்றின்மீது பூரண நம்பிக்கை வைக்கமுடியும்.

அங்கீகரிக்கப்பட்ட மொழிக்கொள்கையில் மாற்றம் செய்ய எண்ணியிருந்தால் பிரதமர் இத்தகைய தெளிவான திட்டவட்டமான உறுதிமொழியைக் கொடுத்திருக்கமாட்டார் இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படுமென்பதில் எத்தகைய ஐயமும் கிடையாது. அதனைப் பொதுமக்கள் உணரக் கூடியதாக நடவடிக்கை எடுப்பது தேசிய அரசாங்கத்தின் கடமையாகும்.

1956ல்சட்டமாக்கப்பட்ட மொழிச்சட்டத்தை அமுல் நடத்துவதற்கு அவசியமான ஏற்பாடுகளைச் செய்வதில் ஆர்வம் காட்டாமல், அதனை தேவையற்ற முறையில் கால தாமதம் செய்தது சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கமாகும்.

கடைசிக்கட்டத்தில் சமசமாஜக்கட்சியைச் சேர்த்துக்கொண்டு நிறுவப்பட்ட கூட்டரசாங்கம், அதுவரை தள்ளாடிக்கொண்டாவது நடைபெற்ற மொழி அமுல் ஏற்பாடுகளையும் நாசமாக்கும் முறையில் நடவடிக்கை எடுத்தது.

டாக்டர் என். எம். பெரேரா நிதிமந்திரியானவுடன் செய்ததென்னவெனில், திறைசேரியிலும், இதர அரசாங்கத் திணைக்களங்களிலும் இருந்த சிங்களத்தில் பணியாற்றக்கூடிய ஊழியர்களை அங்குமிங்கும் மாற்றி அனுப்பிவிட்டு, உத்தியோகமொழியால் செய்யப்பட்ட அலுவல்களுக்கும்முட்டுக்கட்டையிட்டதுதான்.

அரசாங்க சேவையில் பதவி உயர்ச்சித் தேர்வுப் பரீட்சைகளில் முக்கியமாகக் கருதப்பட்ட சிங்கள மொழித் தேர்ச்சியை அவர் ஒரு பொருட்டாகவேமதிக்கவில்லை.

சிங்களத்தால் அரசாங்க அலுவல்களைச் செய்வதற்கு 9 ஆண்டுகாலம் தாராளமாகப்போதுமென்பதில் ஐயமில்லை. எந்த அரசாங்கஊழியருக்காவது 9 ஆண்டுகளில் உத்தியோகமொழியிற் கருமமாற்றக்கூடிய தேர்ச்சி பெறமுடியவில்லையேல், அதனை உத்தியோகமொழியைக் கற்றுக்கொள்வதற்கு அவருக்குள்ள விருப்பமின்மையின் காரணமாக உத்தியோகமொழிக்கு எதிர்ப்புக் காட்டியதாக கருதப்படவேண்டும். உத்தியோகமொழியில் தேர்ச்சிபெற வேண்டியவர்கள் மொழி மசோதா சட்டமாக முன்பு அரசாங்கசேவையிற் சேர்ந்தவர்களேயன்றி அதற்குப் பிறகு சேர்ந்தவர்களல்ல. அதற்குப்பிறகு அரசாங்க சேவையிற் சேர்ந்தவர்கள் கட்டாயமாக அரசாங்க மொழியிற் பணியாற்றக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

மொழிச்சட்டத்தை அமுல் நடத்தும்போது தமிழ்மக்களுக்கு அநீதியோ, வசதிக் குறைவோ இழைக்கவேண்டுமென யாருமே கருதமாட்டார்கள்.

(12-ம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் பெயர்கள் வெட்டு

'யு. என். பி.—தமிழரசு அரசாங்கத்துக்கு எதிர்ப்பு காட்டுகிறவர்களென சந்தேகப்படும் வாக்காளர்களின் பெயர்களை வாக்காளர்களின் இடாப்பிலிருந்து நீக்கும் இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இடாப்புகளைத் திருத்தும் அதிகாரிகளையும், பதிவு செய்யும் அதிகாரிகளையும் கையிற் போட்டுக் கொண்டு மிக இரகசியமாகப் பெயர்களை நீக்கும் வேலை செய்யப்படுவதாக அறியப்படுகிறது. சில பிரதேசங்களில் வாக்காளர்களின் பெயர்கள் இடாப்புகளில் பதிவு செய்யப்படவேயில்லை என்றும் கூறப்படுகிறது.'

—'ஜனதின' (20-7-65)

## சிங்கள இதழ்களில்...

## நேருவின் நோக்கம் பற்றி

திரு. பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயக்காவும் திரு. என். கியூ. டயசும் மல்வத்து மகாநாயக்க தேரோவைச் சென்ற வாரம் பேட்டி கண்டு திருமதி சிறிமா பண்டாரநாயக்கா எழுதிய 'சிங்களவர்களின் எதிர்காலமும் இலங்கை—இந்திய பிரச்சினையும்' என்ற நூலை சமர்ப்பித்த பொழுது திரு. என். கியூ. டயஸ் மகாநாயக்க தேரோவிடம் கீழ்க் கண்டவாறு கூறியதாக ஒரு செய்தியை 'ஜனதின' (19-7-65) வெளியிட்டுளது:-

### திரு. டயஸ்

'நான் இந்த நாட்டில் கலவரம் ஏற்படுத்தப் போவதாக சில பத்திரிகைகள் பிரசாரம் செய்கின்றன. நான் இராணுவ அதிகாரிகள், அரசாங்க உயர்தர அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் அவர்கள் கூறுகின்றனர். பத்திரிகைகள் பிரசாரம் செய்யும் எதையும் நான் செய்யவில்லை.

நான் இப்போது மலைநாடு பூராவும் சுற்றுப் பிரயாணம் செய்கிறேன். பல்வேறு விதமான பேதங்களால் பிளவுபட்டுள்ள சிங்களவர்களை ஒற்றுமைப் படுத்துவதும் இந்தியப் பிரச்சினையை அவர்களுக்குத் தெளிவு படுத்துவதுமேநான் எனது சுற்றுப் பிரயாணத்தின் போது செய்ய உத்தேசித்துள்ள சேவை.

காலஞ் சென்ற இந்தியப் பிரதமரின் நோக்கம் என்ருவது இலங்கையை இந்தியாவின் ஒரு பகுதியாக இணைத்துக் கொள்வதே. ஒருமுறை நேருஜீ இலங்கையில் சுற்றுப் பிரயாணம் செய்த போது, கூடுமானவரை காணிபூமி மற்றும் சொத்துக்களை விலைக்கு வாங்கிக் கொள்ளுமாறு இந்நாட்டுத் தமிழர் தலைவர்களுக்குப் புத்திமதி கூறினர்.'

## இது உண்மையா?

'கடந்த பொதுத் தேர்தல் சமயத்தில் பௌத்த தேவாலயம் ஒவ்வொன்றுக்கும் சென்று மார்க்ஸீய—எதிர்ப்பு அறிக்கைகளை தயாரித்துக் கொண்டு வந்த லேக்ஹவுஸ் அதிபர்களின் கஷ்டம் தெரிந்த 'ஆரச்சி' ஒருவர் அண்மையில் ஜே. ஆர்.—எஸ்மண்ட் கோஷ்டியின் வீரகேசரி நிறுவனத்தால் வெளியிடப்படவிருக்கும் வாராந்தப் பத்திரிகையின் ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிருரென்று கூறப்படுவது உண்மையா?'

—'எத்த' (19-7-65)

## வீரகேசரியிலிருந்து சிங்கள ஏடு

'ஜே. ஆர். அவர்களின் பலனை ஊதுவதற்காக மற்ருெரு சிங்கள ஏடு' என்ற தலைப்பில் கீழ்க்காணும் செய்தியை 'எத்த' பத்திரிகை 16-7-65ந் திகதி பிரசுரித்துள்ளது:—

'அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்தன, லேக்ஹவுஸ் டைரக்டர்களில் ஒருவரான திரு. எஸ்மண்ட் விக்கிரமசிங்கா ஆகியோர் உட்பட ஒரு சிலரால் விலைக்கு வாங்கப்பட்ட 'வீரகேசரி' தமிழ் பத்திரிகாலயத்தால் சிங்களப் பத்திரிகையொன்று அச்சிட்டு வெளியிட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

தொடக்கத்தில் வாராந்த சிங்களப் பத்திரிகையைத் தொடங்கி பின்னர் அதனைப் பெரிதாக்கி தினசரிப் பத்திரிகையாக நடத்துவதற்கு எண்ணியிருப்பதாகவும் அறியப்படுகிறது.

இதன் பூர்வாங்க நடவடிக்கையாக வாராந்தப் பத்திரிகைக்குத் தேவைப்படும், சித்திரம் தீட்டுபவர்கள், எழுத்தாளர்கள், புகைப்படமெடுப்பவர்கள் ஆகியோரிடம் விண்ணப்பம் கோரி கடந்த ஞாயிற்றுக்கிழமை 'சிலுமின' பத்திரிகையில் ஒரு விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓடிப்போனவள்

நிமிடக் கதை

நன்ருக விடிந்து விட்டது. பார்வதி படுக்கையைவிட்டு எழுந்திருக்கவில்லை. அவளின் ஒரே மகள் விமலாவைப் பற்றிய சிந்தனை அவள் நெஞ்சத்தில் நிழலாட்ட மாடின. கண்களை விழிக்காமல் புரண்டு புரண்டு படுத்தாள்.

மெதுவாகக் கண்களைத் திறந்து விமலா படுத்திருந்த பக்கமாகப்பார்த்தாள். அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. விமலா படுக்கையில் இல்லை. படுக்கை விரித்தபடியே வெறிச்சோடிப் போயிருந்தது.

அவிழ்ந்து கிடந்த தன் தலை முடியைக் கையால் கோதி முடித்துவிட்டு ஓட்டோட்டமாகச் சென்று அடுப்படியை எட்டிப் பார்த்தாள். அங்கேயும் விமலா இல்லை. குளிக்கும் அறை, மற்றும் இடங்களிலெல்லாம் எங்கு தேடியும் விமலாவைக் காணுத பார்வதி கலங்கியே விட்டாள். செய்வதென்னதென்றே புரியாத இரண்டுங் கெட்டான் நிலையில் தன் கணவனின் அறையை மெதுவாகத் திறந்தாள். அவர் இன்னும் படுக்கையில் தான், நன்ருக அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்.

அழுது கொண்டே அவரை எழுப்பிஞல் அவர் பதறிப் போவார். ஏற்கனவே இரத்தக் கொதிப்பு வியாதியால் துன்பப்படும் அவரிடம் இதை எடுத்த எடுப்பிலே கூற அவளுக்கு மனம் இல்லை. மெதுவாக அவர் தலையை வருடவே அவர் எழுந்து விட்டார். எவ்வளவு தான் முயன்றும் பார்வதியின் கண்களில் வடிந்த கண்ணீரை அவளால் கட்டுப்படுத்த முடியாது போயிற்று.

தன்னைச் சமாளித்துக் கொண்டு ஒரு படியாக விமலாவைக் காணவில்லை என்ற சமாச்சாரத்தைக் கணவனிடம் கூறிஞள். அவரும் ஒரு கணம் பதறிப் போய், வீடுவளவு எங்கும் அவளைத் தேடிஞர். வாய்விட்டு விமலா என்று கூப்பிடவும் இருவருக்கும் பயம். அதிகாலையில் 'விமலா' 'விமலா' என்று குரல் கொடுத்தால் தூக்க மயக்கத்திலிருக்கும் அயலாருக்கு என்ன மாதிரியிருக்கும்?

'நான் எத்தனை தடவை சொன்னேன் ...அவளுக்கு விரும்பாத காரியத்தைச் செய்ய முனைய வேண்டாம் என்று; நமக்கு உள்ளது ஒன்றே ஒன்று. அதையே இப்படி ஆட்டிவைத்தால் என்னமாயிருக்கும்...?' என்று பார்வதி கணவனைப் பார்த்துச் சிணுங்கிஞள்.

'எனக்கு எல்லாம் தெரியும். நீ பேசாத. அவள் மணியத்திடம் தான போய் விட்டாள். இன்னும் விட்டு வைத்தால் எல்லாம் தலைகீழாக மாறிவிடும். அவளை என்ன செய்கிறேன் பார்...!' என்று கருவிக் கொண்டே எழுந்தார்.

பார்வதி இடைமறித்து 'தயவு செய்து நான் சொல்றபடி கேளுங்க. பச்சைக் குழந்தை தன் மாமனிடம் வைத்திருக்கும் பாசத்தை நாம் வெட்டிப் பிரிப்பது சரியில்லை. இப்பொழுது தானே விமலாவுக்கு ஏழு வயது முடிந்திருக்கிறது. விளையாட்டுப் பருவத்தில் ச...ா படி படி என்று நாம் இருவருமே பயமுறுத்திஞல் என்னமாயிருககும்? பார...்தீர்களா? விடிந்தும் விடியாமல் அவளுடைய சின்னமாமாவைத் தேடி, நமக்கே தெரியாமல் ஓடி விட்டாள். மணி யார்? என் தம்பி தானே! அவள் எங்கள் வீட்டிலேயே இருந்து விளையாடி விட்டு வரட்டும். நீங்கள் அங்க போய் உங்கள் முரட்டுத் தனத்தைக் காட்டாதீர்கள்' என்று கணவனைச்சமாதானப்படுத்திஞள்.

பார்வதியின் பெற்ருரை பார்வதியின் கணவர் எட்டிக்காயாக வெறுப்பவர். ஒரே தெருவில் குடியிருந்தும் தன் மனைவியையே அவள் தாய் வீட்டுப் பக்கம் போகவிடாது தடுப்பவர். ஆனல் அவரால் தன் மகளை-அவளுடைய பாட்டன், பாட்டி, மாமன் ஆகியோரைப் போய்ப்பார்ப்பதைத் தடுக்க முடியவில்லை!

-விஜயா


முடிவுத் தேதி 31-8-65

ரூபா 550-00 பெற்றிட

இன்றே உங்கள்!

அருத எண்ணெய்

வியாபாரியிடத்தில்

விபரம் கோரவும்!

தயாரிப்பாளர்:

பி. எம். திசாநாயக்க,

கம்பளை. போன்: 454.



'சுதந்திரன்'

புதிய சந்தா விபரம்

ஒரு வருடம் ரூபா 14-00

ஆறு மாதம் ரூபா 7-50

நிர்வாகி

சுதந்திரன்


கருத்துமேடை

# நற்குணங்கள் மறைந்து பெண்கள் நாசமடைகின்றனர்

—செல்வி இ. சரஸ்வதி—

### கூட்டுக் கல்வி நாட்டுக்கு நல்லதா? [3]

'கூட்டுக் கல்வி நாட்டுக்கு நல்லதா?' என்ற இக் கேள்விக்கு, 'கூட்டுக் கல்வி நாட்டுக்கு நல்லதல்ல' என்றே யான் பதிலிறுக்கிறேன். இதற்குரிய காரணங்களை இரத்தினச் சுருக்கமாக இங்கு எடுத்துக் காட்டி, எனது விவாதத்தை நிலைநாட்ட விரும்புகிறேன்.

இன்றைய உலகம் நாகரிகமென்னும் காரிருளில் மூழ்கிக் கிடக்கின்றது. அதனல் பெரும்பாலோர் கூட்டுக் கல்வி முறையைப் பெரிதும் விரும்புவரென்பது திண்ணம்! மேலை நாடுகளில் கூட்டுக் கல்வியினுல் நன்மை கிட்டுகிறதென்று, நாம் கற்பனை செய்து கொள்ளவேண்டியது தான்.

ஆனல் அவர்களுக்கிடையில் நடைபெறும் வாழ்க்கை முறைகளை வாய்விட்டுச் சொல்லவோ, எழுதவோ முடியாது. ஆகவே, மேல் நாடுகளில் உள்ள கல்வி முறைகளையும், வாழ்க்கை முறைகளையும் நம் நாட்டார் கடைப்பிடிப்பது மடமையிலும் மடமை!

கூட்டுக் கல்வி முறையால் மாணவ, மாணவியருக்கிடையில் தாழ்வு மனப்பான்மையும், தளர்ச்சியும் ஏற்படுவது ஒரு புறமிருக்க அவர்களின் உள வளர்ச்சியும், உடல் வளர்ச்சியும் கெட்டு; கல்வியில் போதிய கவனம் செலுத்தாது, மனதைப் பல கெட்ட செயல்களிலும், சிந்தனைகளிலும் செலுத்துகின்றனர். தங்கள் நேரத்தை கீழ்த்தரமான புத்தகங்கள் வாசிப்திலும் செலவழிக்க நேரிடும். அதனுல் இளமையில் முதுமையுற்றவர்களாகக் காட்சியளிக்கிருர்கள்.

#### பெண்ணுக்கே தீமை

ஆணும் பெண்ணும் கூட்டுச்சேர்ந்து கல்வி பயில்வதால், இளமைத் துடிப்புகளின் உணர்ச்சிகளுக்கு அதிகமதிகம் இடம் கொடுக்கக் கூடிய சூழ்நிலைகள் நிறைய உண்டு. அதனல் [illegible]

எவராலும் மறுக்கவோ, மறக்கவோ முடியுமா?

இன்றைய உலகவாழ்க்கை முறையில் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாக வாழ்கின்றபடியால் தான், ஆண்கள் பொறுப்பற்றவர்களாகவும்; பெண்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு போன்ற நற்குணங்களையும் இழந்தவர்களாக வாழ்கின்றனர்.

இந்நிலையில் நம் நாட்டில் கூட்டுக் கல்வி முறையை விரும்புவது அர்த்தமற்ற—அனர்த்தமுள்ள செயலாகும்.

எனவே, சகோதரி சுகிர்தநிதி கூறிய வண்ணம் மாணவ,மாணவியரிடத்தில் மனவளர்ச்சியும், தற்காப்பு உணர்ச்சியும் ஏற்படும் வரை, கூட்டுக் கல்வி நாட்டுக்கு நல்லதல்ல என்றும், வெவ்வேருன கல்விக் கூடங்களில் கல்விகற்கும்பொழுது பெண்பிள்ளைகட்குப் பெண் ஆசிரியைகளும், ஆண்பிள்ளைகட்கு ஆண் ஆசிரியர்களும் கல்வி புகட்ட வேண்டும் என்றும் கூறிவைக்க விரும்புகிறேன்.

### 61 வயது தாயின் கல்வி ஆசை

12 பிள்ளைகளுக்குத் தாயான, 61 வயதுடைய ஒரு வங்காள மாது பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புக்கான பரீட்சை எழுதினுர். இவருடைய பெயர் பிவாகுகா. கல்கத்தாவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

இந்த அம்மையாருடன் அவளுடைய மகள் ஒருத்தியும் பரீட்சை எழுதினுளாம்.

மேலை நாட்டு நாகரிகம்!

### கவர்ச்சிக் காலை காட்டிய அழகி

ஆடைக் குறைப்பு செய்து, கவர்ச்சிகரமான காலைக் காட்டினுள் ஒரு கட்டழகி; அடித்தது, திடீர் அதிர்ஷ்டம்; சினிமா நடிகையாஞள்.

ஜெர்மனியில் மெய்ன்ஸ் நகரிலுள்ள 'டெலிவிஷன்' நிலையத்தில் அறிவிப்பாளராகப் பணியாற்றிய எடல் கார்ட் ஸ்டாஷல் ஓர் அழகி. அவளுடைய கட்டுவிடாத உடலமைப்பும், கவர்ச்சிகரமான முக வெட்டும், எடுப்பான தோற்றமும் எவரையும் மயக்கும்.

ஒரு விருந்தில் கலந்து கொண்ட போது இக் கட்டழகி, அரை குறையான மெல்லிய ஆடை அணிந்திருந்தார். கவர்ச்சிகரமான கால்களைக் காட்டிக்கொண்டு ஒயிலாக அங்கும் இங்கும் நடந்து செல்லும் போது ஒரு படப் பிடிப்பாளர் படம் எடுத்துவிட்டார்.

அடுத்த நாள் மேற்கு ஜெர்மனியின் பத்திரிகைகள் பலவற்றில் முதல் பக்கத்தில் வெளியான கட்டழகியின் கவர்ச்சிப்படம், காளையர்களைக் கவர்ந்து இழுத்தது! ஆனல் டெலிவிஷன் நிலைய உயர் அதிகாரிகள் ஆனந்தப் படவில்லை. அதன் விளைவு, அழகி வேறு வேலை தேட வேண்டியதாயிற்று.

பத்திரிகைகளில் ஆடைக் குறைப்பு அழகியின் கவர்ச்சிகரமான உடலழகைக் கண்ட பின் சினிமா தயாரிப்பாளர்கள் சும்மா விடுவார்களா? ஒரு படத் தயாரிப்பாளர், அழகியை ஒப்பந்தம் செய்து கொண்டார். முதல் காட்சியில் காமிரா முன்பு முழு உடை இன்றி தோன்றினுள் அந்த அழகி.

## மங்கையர் சங்கம்

### குடிப்பழக்கம்...?

இளைஞர்கள் குடிப்பழக்கத்தை பெற்ருருக்குத் தெரியாமலே கற்றுக் கொள்ளுகின்றனர். தாய் தந்தையரை அறியாமல்நண்பர்கள் ஒன்றுசேர்ந்துநடாத்தும் விருந்துகளிலே தான் இப் பழக்கம் ஆரம்பமாகிறது.

இப்பழக்கத்தை இளைஞர்கள் கடைப்பிடிப்பதற்கு முக்கிய காரணம், அவர்கள் பெரியவர்களாகத் தகுதி பெற ஆரம்பித்துவிட்டனர் என்ற கருத்து அவர்களையே ஆட்டிப்படைக்க ஆரம்பிப்பதனுல் தான்.


5

கேள்விகள்

?

விரைவில்

எதிர்பாருங்கள்!


### இல்லாளுக்குச் சில யோசனைகள்

—செல்வி நளினி நாதன்—

(சென்ற வாரத்தொடர்ச்சி)

16. உங்கள் வீட்டு நிலவிரிப்புகள் (Carpets) எதனையாவது உங்கள் நாய் சுவை பார்க்கத் தொடங்கினுல், சிறிது, மேசை உப்பை (Table-salt) விரிப்பின் நான்கு மூலைகளிலும் பூசிவிடுவது நல்லது—ஏனெனில் இவ்வகை உப்பு நாய்கட்குப் பிடிக்காது.

17. எலுமிச்சம் பழத்திினின்றும் அதிகச் சாற்றைப் பெற விரும்பிஞல், அதனைப் பிழியுமுன்னர் சற்று நேரம் இளஞ் சூடான நீரில் அமிழ்த்தி விடுக.

18. சகிக்க முடியாத மணத்தையுடைய மருந்து வகையைக் குழந்தைக்குப் புகட்ட முன்னர், குழந்தையின் நாக்கில் ஒரு பனிக்கட்டி (Ice) யினுல், தேய்த்து விடலாம். இதனுல் நாவின் உருசி நரம்புகள் சற்று நேரம் உருசியை உணருந்தன்மையை இழந்து போய் விடுகின்றன—வேண்டுமாஞல் சுவை மிக்க ஐஸ்கிரீம் ஒரு தேக் கரண்டி பாவிக்கலாம்.

19. இனிப்புப் பதார்த்தங்களைக் கிளறுவதற்கு மரத்தாலான கரண்டிகள் உகந்தனவாயுள்ளன. ஏனெனில், அவற்றில் சூடு பிடித்துத் தொல்லைகள் ஏற்படமாட்டாது.

20. நீங்கள் வாங்கும் தேன் நல்லதா என்று பரிசோதிக்க, ஒரு துளி தேனைச் சாதாரண சூடான நீரில் விட்டுப் பாருங்கள்—நல்ல தேனுக இருந்தால் அது தானுகவே உருண்டை வடிவாகத் திரளும்—அல்லாவிடில், கரைந்துவிடும்.

—(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்த வைத்தியத்தில் சிறப்புற விளங்கிய இருபாலைச் செட்டியார்

ஈழவளநாட்டிலே, யாழ்ப்பாணத்திலே அன்று சித்த வைத்தியம் சிறந்து விளங்கியது. அன்றிருந்த சித்த வைத்தியர்கள் பலர் மிகவும் அறிவும், ஆற்றலும் மிக்கோராய் விளங்கியதுடன், பல அரிய பெரிய வைத்திய நூல்களையும்வெளியிட்டுள்ளார்கள்.

அன்றைய பெரியோர்களால் பரராசசேகரம், செகராசசேகரம், தன்வந்தரியம், சௌமிய காண்டம், வைத்திய விளக்கம், பதார்த்த சூடாமணி ஆகிய இன்னபிற நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. இவற்றுள் பின்னைய இரண்டும் இருபாலைச்செட்டியார் எனற புகழ் மிக்க வைத்தியரால் ஆக்கப்பட்டவையாகும்.

### அன்றைய நிலை

அன்றைய சித்த வைத்தியர்களில் பலர் தங்கள், தங்கள் சிறந்த வைத்திய முறைகளையும், அராய்ச்சி அனுபவங்களையும் பிறர்க்குத் தெரியப்படுத்தாது, தங்களோடும், தங்கள் குடும்பத்தாரோடும், வைத்திருந்தமையால் அவை அழிந்து, இன்று எமக்கு கிடைக்காது போய் விட்டது. இன்னும் சில செல்லரித்துப் பழுது போய் விட்டன. சில இன்னும் ஒளிந்து கொண்டிருக்கின்றன. இவையெல்லாம் நமக்குக் கிடைக்கும் காலம் எக்காலமோ? இன்னும் சிலர் பிறரை வஞ்சிக்கும் எண்ணத்துடன் கூட்டியும் குறைத்தும்-எழுதுபவராக இருக்கின்றனர்.

இத்தகையோரால் நம் அரும் பெரும் வைத்திய முறைகள் அவற்றின்உண்மை நிலை அழிந்து, அறிதற்கு அருகதையற்றதாகச் சிதைந்து நைந்து கிடக்கின்றன. தாமறிந்ததை பிறர் அறிதல் கூடாது என்னும் அறக்கொடிதாகிய எண்ணத்தால் இவை இப்படிப் பரிதபிக்கக் கூடிய நிலையில் இருக்கின்றன.

இப்பேரன்ன கொடுமையினுல, இக் காலத்தில் பயிலும் வைத்திய மாணவர்களும், மற்ருேரும் பெரும் பாலான அறிவைத் தேடிக் கொள்ள இயலாது தவிக்கின்றனர்.

தமிழர் வைத்தியமாம் சித்த வைத்தியமானது, ஆங்கில வைத்தியம், ஆயுள்வேத வைத்தியம் முதலியவற்றிலும் பார்க்க மிகவும் சிறந்த உயர்ந்த குணங்களைக் கொடுக்க வல்லது. எனினும் நம்முன்ளோரிடத்துள்ள, அழுக்காறு, பொருமை, காரணமாகவும், சுய நலம் காரணமாகவும் மேன்மை யிழக்கும் நிலையிலிருந்தும், நல்லோரின் முயற்சியினுலும், அதன் பெருமையினுலும் இன்று சிறந்து விளங்கி நிற்கின்றது.

### அரசினரின் அக்கறை

இன்று வட இந்தியாவில் ஆயுள் வேத வைத்தியம், அதன் மூலப்பிரதிகளிலிருந்து அதாவது சமஸ்கிருத மொழியிலிருந்து இந்தி மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டு, மிகவும் வேகமாக முன்னேறிப் பரவிவருகின்றது. இந்திய அரசியலார் இவற்றுக்கு பெருமதிப்புக் கொடுத்து, ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்றனர். அதே போன்று நம் இலங்கை அரசியலாரும் ஆயுள் வேதம், சித்தவைத்தியம் இவற்றிற்கு அளப்பரிய சேவை யாற்றி வருகின்றனர்.

சமஸ்கிருத மொழியில் உள்ள ஆயுள் வேத வைத்திய நூல்களாகிய, மாதவ நிதாநம், அஷ்டாங்க இருதயம் முதலிய நூல்களை சிங்கள மொழியில் ஆக்கி வெளியிட்டுள்ளார்கள். அதே போல் சித்த வைத்தியத்துக்கும் குணபாடம் என்னும் பெருநூல் அச்சு வாகனமேறியிருப்பதாக அறிந்து மகிழ வேண்டியநிலையிலுள்ளோம். இதனுல் சித்த வைத்தியர்களும், வைத்தியம் கற்கும் மாணவர் குழாமும்பெரிதும் பயனடைவார்களென்பது திண்ணம்.

### இருபாலைச் செட்டியார்

இருபாலைச் செட்டியாரின் உண்மைப் பெயர் யாதென அறிய முடிந்திலது. இவர் இற்றைக்கு நூற்று முப்பது வருடங்களுக்கு முன், யாழ்ப்பாணம் மீசாலை எனும் பதியில் பிறந்துள்ளார். வேளாண் செட்டி மரபினராகிய இவர் நீண்ட காலமாக இருபாலை எனும் பதியில் தொழில் புரிந்தார். இதனுல் இவருக்கு இருபாலைச் செட்டியார் என்ற காரணப் பெயர் நிலைத்து நின்றது. இப்பெரியார் ஓா துறவு நிலை கொண்டவராவர்இலக்கண, இலக்கிய அறிவு நிரம்பப் பெற்ற பண்டிதர். இவர் இயற்றிய இரு நூல்களுமே இவற்றுக்கு சான்ருகவுள்ளன.

'ஆதியாய் நிலமாய்
நீரா யங்கியாய்
மருந்தாய் விண்ணுய்ச்
சோதியாய்ச் சுயம்பா
யொன்ருய்த் தோற்றம்
மீ நிலதாய்மேவும்
நாதமாய் விந்தா
யெல்லா நடத்திடும்
பொருளாய் மேலாம்
போதமா யமர்ந்த
புத்தேன் பொன்னடி
தொழுதல் செய்வாம்'.

மேற்படி செய்யுள் இவர் இயற்றிய வைத்திய விளக்கம் என்னும் நூலின் காப்பு. இப்பாட்டின் முறையையும், அதன் கருத்தையும், நோக்குமிடத்து இவர் ஓர் சைவ சித்தாந்த செம்மலாய் இருந்திருக்க வேண்டுமென நாம் ஊகிக்க வேண்டியுள்ளது. இவருடைய வித்துவத் தனமையை அவரின் நூல்களைப் படிக்குமிடத்து நனகு அறியலாம். அத்தோடு இவர் வாக்குச் சித்தியிலும் சிறந்து விழங்கியுள்ளார் என்பதற்கு பல கதைகள் வழங்குகின்றன.

## ஆக்கிய நூல்களும் அவற்றின் சிறப்பும்

### சிறப்பியல்புகள்

'யாழ்ப்பாணச் சரித்திரம்' என்னும் நூலில் இவரது புகழ் அக்காலத்தில் எவ்வளவு தூரம் பரவியுள்ளன என்பதை அறியலாம் இன்று எம்மிடையே இருந்து மறைந்த பெரியார்—செம்மல் யோகர் சுவாமிகளோடு இவரை ஒப்பிட்டுக் கூறினுல் மிகையாகாது.

'பொன்மலி யிலங்கைப்
பூவகந் தன்னில்
மின்மலி திலகம் போன்று
நனி விளங்கிச்
செல்வங் கல்வி செழித்து
மிக வோங்கும்
நற்குலக் குடிகள் பற்பல
வாழும்,
யாழ்ப்பாண மென்னு
மெழில் பெறு நாட்டில்
இருபாலைச் செட்டி யென்று
பெயர் தழைத்தோன்
நோயொடு காரண
நுண்ணதினுடித்
திர்க்கும் வாயுஞ் செவ்விதி
னறியூஉக்
காலமொ டிடமுங் கருதிச்
செய்யும்
வைத்திய சிகாமணி யாகி
விழங்கினேன்
செய்கையி னன்றித்
தெய்வந் தன்னிலும்
எய்துபல பிணிக ளெய்தி
னீங்கி
இவ்வுல குய்யுமா றெய்திப்
பல நூல்
...............................

இப்படியாக பிரம்ம ஸ்ரீ—வித்துவான் சி. கணேசையர் அவர்களின் சிறப்புப் பாயிரம் வாயிலாக அன்னரின் சிறப்பையும் பெருமையையும் அறியலாம்.

வைத்திய விளக்கம் என்னும் நூல் முத்தோஷமாகிய வாத, பித்த, கபத்தையும், நாடிகளின் தோற்றம், தொழில்களையும், சுரவகை ஆதியனவற்றையும் மிகவும் இலகுவாக வைத்திய மாணவர்கள் அறியக்கூடிய விதமாய் ஆக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன்மருந்துகளாகிய சூரணம், குழிகை, மாத்திரை, தைலம், எண்ணெய் வகை முதலியவற்றையும் கொடுத்துள்ளார்.

**டாக்டர். என். கந்தையா**
(மத்திய ஆயுள்வேத மருத்துவமனை, கொழும்பு.)

இவற்றிலுள்ள பெரும்பாலான மருந்துவகைகள் சிறந்தகுணங்களைக்கொடுக்க வல்லது. இவருடைய தைல முறைகள் மிகவும் ஆச்சரியப்பட்ட குணங்களைக் கொடுக்க வல்லனவென்று யாழ்ப்பாணத்து சிறந்த வைத்தியர் சிலர் எமக்குக் கூறியுள்ளனர். பெரும்பாலான இன்றைய சிறந்த வைத்தியர்களால் இவரின் மருந்துகள் கையாளப்பட்டு வருகின்றன.

இரண்டாவது நூலாகிய 'பதார்த்த சூடாமணி' என்னும் நூல் உடம்போடு இயைந்து பயன் தரக்கூடிய குணங்களை சிறப்புற விளக்குகின்றது. இவற்றை எவரும் வாசித்து அறிய முடியக் கூடியனவாக இருக்கின்றது. அத்தோடு அவை இலகுவில் நமக்கு கிடைக்ககூடிய பொருட்களாக இருப்பதோடு, அவை நம் அன்ருட வாழ்க்கையில் கையாளப்படுவன வாகவும் இருக்கின்றன. அத்தோடு இவை நல்லனவென்றும்,இவைகூடாதென வென்றும் வகுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது.

### பொருட்களும் அவற்றின் குணங்களும்

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், என்பனவற்றின் குணங்களையும், எமது உணவுக்குரியனவான சோறு, சிற்றூண்டி முதலாம் பதார்த்தங்களின் செய்கை, குணம் என்பனவற்றையும், நன்செய், புன்செய் தானியாதிகள், கீரைவகைகள், வேர், இலை, பூ, பிஞ்சு, காய், கனி, பட்டை, இவைகளின் குணங்களையும், பால், தயிர், மோர், நெய், இறைச்சிவகைகள், மீன் வகைகளின் குணங்களையும் கடைச்சரக்குகள், உலோக வகைகள், முத்து, பவளம், நவரத்தினங்கள், புனுகு, சவ்வாது, இவற்றின் குணங்களையும் சிறப்புற-அழகுற-தெளிவாக விளக்கின்றது.

மக்களுக்கு தேவையாகும் அரிய பெரிய குணங்களைக் கொண்ட மேற்கண்ட இரு நூல்களையும், இன்று வைத்தியம் கற்கும் மாணவர்களும், இனிமேல்கற்போரும் மற்றும் வைத்தியப் பெருமக்களும், கற்று அறிந்து, நோயறிந்து, நோய்வளியறிந்து அது தணிக்கும் வாய்நாடி, அத்தோடு தாங்கள் புகழடைந்து, இன்புற்று வாழ்வதே அன்னருக்கு நாம்செய்யும் அஞ்சலியாகும்.

## பட்டினி ஏன்...?

"பாண்டியூரன்"

அளிகள் பறந்தும் அழையா மலர்போன்ற
விழிகள் இருந்தும் விழிப்பில்லை...!
துளிர்மேனி;
தொட்டவுடன் இன்பம் துளிர்க்கும் பனியிருக்கப்
பட்டினியேன் கண்ணே பகர்?

வாழைக் குருத்து மழையின்றி வாடுவது
போலப் பசுமை பொசுங்குவதேன்?
வாழ்வெல்லாம்;
கட்டிலிலே பெய்யுங் கரும்பு மழையிருக்கப்
பட்டினியேன் கண்ணே பகர்?

குளத்திற் குறையாக் குழுற லுடைப்பிருக்க
வீளைச்சல் கருகும் வினையேனே?
பழச்சாறு;
கொட்டி நிறைத்த குடங்க ளிருக்கையிலே
பட்டினியேன் கண்ணே பகர்?

பாக்குவெட்டி கையிற் பதமா யிருக்கையிலே
நாக்குடையப் பாக்கு நறுக்குவதேன்?
வாய்க்கினிய;
கட்டிப் பவளக் கனிகள் பழுத்திருக்கப்
பட்டினியேன் கண்ணே பகர்?

விருந்து மணக்க விரிப்பில் இலையிருக்க
அருந்தா திருக்கும் அறமேனே?
புரிந்து;
கொண்டாயோ உந்தன் கொழுநன் வரவின்றி
உண்ணுயோ இன்பம் உவந்து!


## கல்வியே கருந்தனம்

**ஆனந்தா லேகியம்**

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1965 யூலை மாதம் 25-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183


## அரசாங்கத்தின் கடமை

தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன் தேசிய அரசாங்கம் அமைக்கப் பட்டதும் நாட்டில் அரசியல் நிலைமையில் பெரும் மாறுதல் ஏற்பட்டது. தமிழ் பேசும் மக்களின் மீது நடாத் தப்பட்ட கெடுபிடிப்போர் தளர்ந்தது. இரு பெரும் தேசிய இனங்களிடையே சுமுக உறவு ஏற்படவும் வழி பிறந்தது. வெறுப்பும் கசப்பும் நீங்கி புதிய சூழ்நிலை தோன்றியது.

இழந்த உரிமைகளை மீட்க சூழ்நிலையைப் பயன் படுத்த முற்படும்போது சில முட்டுக்கட்டைகள் தோன்றின. தமிழ் பேசும் மக்களிடையே ஒருசிலர் இனத்தின் நலனைவிட தங்கள் கட்சியின் நலனை முன்னிருத்தி, தமிழரசாரின் முயற்சியைப் பக்கவாட்டில் தாக்கத் தொடங்கினர். தமிழரசாருக்கு மக்களின் பேராதரவு திரண்டதால் பக்கவாட்டுத் தாக்குதல் இதுவரை பயனளிக்கவில்லை. அதே வேளையில் எதிர்க் கட்சியினர் சிங்கள மக்களிடையே தீவிர வகுப்புவாத உணர்ச்சியைத் தூண்டிவிடவும் புதிய சூழ் நிலையைப் பயன்படுத்த முயற்சி செய்தனர்-செய்துகொண்டிருக்கின்றனர்.

தமிழரசுக் கட்சியோ தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை அகற்றுவதற்காகப் புதிய சூழ்நிலைக்கேற்ப திட்டவட்டமாகச் செயலாற்றி வருகிறது. இத் துறையில் உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வத்தின் பணி அளப்பரியது. ஐக்கியத்தையும், நல்லெண்ணத்தையும், சுமுகஉறவையும் மென்மேலும் வளர்ப்பதற்காகத் தேசிய அரசாங்கத்தின் அமைச்சர்கள் தமிழ்ப் பகுதிகளுக்கு விஜயம் செய்தது பெரிதும் பயன்படுகிறது. அதே சமயத்தில் நிர்வாகத் துறையில் எடுக்கும் நடவடிக்கைகளும் அநீதிகளை அகற்றும் பாதையில் செல்கின்றன.

வட பகுதிக்கு முதலில் சென்ற வீடமைப்பு தொழில் அமைச்சரும், தேசிய சேவை அமைச்சரும் பல வாக்குறுதிகளை அளித்தனர். சென்றவாரம் அங்கு சென்ற காணி அமைச்சரும்வடபகுதிக்கமக்காரர்களின்கஷ்டங்களைப் போக்கவும், நீர்ப்பாசன வசதிகளை அளிக்கவும் நிலமில்லாத விவசாயிகளுக்கு காணிகள் வழங்கவும் உறுதி அளித்தார். இவ்வாரக் கடைசியில் கல்வி அமைச்சரும் வடபகுதிக்குச் சென்றுள்ளார்.

அமைச்சர்களின் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுமென்றே அனைவரும் எதிர்பார்க்கின்றனர். காரணம் தமிழ் பேசும் மக்களின் இன்னல்களை நீக்கவேண்டுமென அமைச்சர்கள் மனப்பூர்வமாக ஆர்வம் கொண்டிருப்பதுதான். அத்துடன் நிர்வாகத் துறையில், தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் சில படிப்படியாக அகற்றப்பட்டுவருவதாகத் தெரிகிறது.

தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களுக்கு முன்னுள் அரசாங்கத்தால் இழைக்கப்பட்ட இன்னல்களையும் இடர்பாடுகளையும் அகற்றுவதில் தேசிய அரசாங்கம் ஆர்வம் கொண்டுள்ள தென்பது அதன் நடவடிக்கைகளிலிருந்து தெளிவாகிறது. அரசாங்கம் ஏற்கனவே செய்துள்ள சில முடிவுகள் மொழிச் சிக்கலில் சிக்கித் தவித்துக்கொண்டிருந்த தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு ஓரளவு ஆறுதல் அளிக்குமென எதிர்பார்க்கலாம்.

தமிழ்ப் பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்கள் சிங்களத்தில் தேர்ச்சிபெறத் தேவையில்லையென கல்வி அமைச்சர் அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுகோஷ்டியொன்றுக்குத் தெரிவித்திருப்பதும் காற்று எந்தப்பக்கம் வீசுகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

மத்திய வங்கி போன்ற இடங்களில் தமிழுக்கு ஓரளவு அந்தஸ்து கிடைக்கும் நிலைமையும் உருவாகி வருகிறது. தமிழ்ப்பகுதிகளில் பாடசாலைகளுக்கு 2000 சிங்கள ஆசிரியர்களை நியமிப்பதற்காக முன்னுள் கல்வி அமைச்சர் செய்திருந்த ஏற்பாடும் கைவிடப்பட்டதாக அறியப்படுகிறது. அகற்றப்படவேண்டிய இடைக்கால இன்னல்கள் இன்னும் பல இருக்கின்றன. தேசிய அரசாங்கம் தொடர்ந்து துணிச்சலுடன் செயலாற்றினால் அந்தக் கஷ்டங்களும் விரைவில் அகன்றுவிடலாம்.

இடைக்கால இன்னல்களை அகற்றும் சலுகைகளைத் தமிழ்பேசும் மக்கள் வரவேற்கின்றனரெனினும், அதனால் அவர்கள் திருப்தியடையப் போவதில்லை. அடிப்படை மொழி உரிமையை அவர்கள் பெற்றாகவேண்டும். தமிழ்ப் பிரதேசங்களில் தமிழிலேயே நிர்வாகம் நடைபெற வேண்டும். ஏனைய பகுதிகளில் வசிக்கும் தமிழ்பேசும் மக்கள் அரசாங்கத்துடன் தமிழில் தொடர்புகொள்ள சட்ட மூலம் அனுமதிக்கப்படவேண்டும். இந்த உரிமைகளைப்பெறும் நாளும் வெகுதூரத்திலில்லை என்று நம்புகின்றோம்.

அடிப்படை உரிமைகளைப் பெறுவதில் எதிர்க்கட்சி முட்டுக்கட்டையிடுமென்பதில் ஐயமில்லை. எதிர்க்கட்சிகள், குறிப்பாகச் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, தேசிய அரசாங்கத்திற் தமிழரசுக்கட்சி சேர்ந்திருப்பதையே முக்கிய பிரசாரக் கருவியாகக் கொண்டுள்ளது. இக் கட்சி அரசாங்கத்திற்கெதிராக சிங்கள மக்களைத் தட்டியெழுப்புவதற்கு மொழிப்பிரச்சினையைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது. மலைநாட்டுச் சிங்களவர்களைத் தங்கள்பால் ஈர்க்க சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தையும் உபயோகப்படுத்துகிறது.

## கல்வி அமைச்சரின் வாக்குறுதி

தமிழ்த் தலைமை ஆசிரியர்கள் எவரும் சிங்களத்தில் தேர்ச்சி பெறத் தேவையில்லை என்று கல்வி அமைச்சர் திரு. ஈரியகொல்லை கூறியிருக்கிறார். அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவிடம் அமைச்சர் இவ்வாக்குறுதியை அளித்திருக்கிறார்.

தமிழாசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தலைமேல் அவசியமெதுவுமின்றிச் சுமத்தப்படவிருந்த பெரிய சுமை நீங்கிவிட்டது. இச்சுமையை நீக்கியமைக்காக தமிழாசிரியர்களுடன் இணைந்து தமிழ் பேசும் மக்கள் அனைவருமே அமைச்சரைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளனர்.

தமிழ் பேசும் மக்கள் மீது பலாத்காரமாக சிங்களத்தைத் திணிக்க வேண்டுமென்று கருதும் சிங்கள வகுப்புவாதிகளின் அடாத போக்குத்தான் தமிழ் ஆசிரியர்களை இதுவரை அச்சுறுத்தி வந்தது. தமிழையே

களப்பு பகுதிவித்தியாதிகாரி இம்முயற்சியில் முன்னணியில் சென்று, தமிழாசிரியர்களின் ஏகோபித்த சக்தியினால் ஏற்பட்ட போராட்டத்தின் போது, மூக்குடைபட்ட சம்பவத்தை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

ஒற்றுமையுடன் இருந்து செயற்பட்டால் எத்தகைய தீமையையும் சிதறடித்துவிடலாம் என்ற உண்மை இத்தால் வெளிப்படுகிறது. அதே நேரத்தில் பல முரண்

சுதந்திரன் அரசியல் நிருபர்

பாடுகள் நிர்வாகத் துறைகளில் வேண்டுமென்றே புகுத்தப்படவும், அமைச்சரின் உத்தரவே உதாசீனமாக்கப்படவும் கூடும் என்றும் எச்சரிக்க விரும்புகிறோம்.

அமைச்சர் இடும் கட்டளைகளை நிர்வாகத் துறையிலுள்

நடக்கத் தலைப்பட்டிருப்பதையே இதற்குக் காரணம் எனக் கூறினால் மிகையாகாது. இந்நாட்டின் இரு பெரும் தேசிய இனங்களுக்கிடையில் இருந்து வந்த பிளவுகள் ஓரளவு நீக்கப்பட்டு வருவது எதிர் காலத்தில் சுபீட்சம் மலருவதற்கேற்ற அறிகுறியாகும்.

வடமாகாணத்துக்கு அண்மையில் விஜயம் செய்த காணி அமைச்சர் திரு. சி. பி. டி சில்வா இப்பிரதேசத்தின் பல்வேறு இடங்களுக்கும் சென்று பார்வையிட்டார். மக்களுடனும், மக்கள் பிரதிநிதிகளுடனும் அளவளாவி அவரவர்களின்தேவைகளை அறிந்து கொள்ள அமைச்சருக்கு நல்ல வாய்ப்பு கிடைத்தது. மக்களும், பிரதிநிதிகளும் தங்கள் குறைகளை எடுத்துக் கூறவும் இந்தச் சந்தர்ப்பம் நன்கு பயன் படுத்தப்பட்டது.

சிங்களம் மட்டும் என்ற மொழிக்கொள்கையுடன் மட்டுமே நின்று விடாது, சர்வ சிங்கள மயக் கொள்

## காணி அமைச்சரின் யாழ். விஜயம்

படித்து தமிழ் மொழி மூலம் மட்டுமே தமது கடமைகளைச் செய்தும், தமிழ் பேசும் மக்கள் மத்தியிலேயே வாழ்க்கை நடத்தியும்வரும் தமிழாசிரியர்களுக்கு எந்த வகையிலும் சிங்களத் தேர்ச்சி அவசியமானதல்ல. அப்படியிருந்தும் கடந்த காலம் ஆட்சிபீடத்திலிருந்தவர்கள் தமிழ்த் தலைமை ஆசிரியர்களுக்குச் சிங்களம் அவசியம் என்று வற்புறுத்தத் தொடங்கினர்.

வேண்டுமென்றே புகுத்தப்பட்ட இந்த விபரீதக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுவிட்டதனால் தமிழ் பேசும் மக்கள் ஓரளவு ஆறுதலடைந்துள்ளனர்.

### வீணாகிவிட்ட விஷப்பரீட்சை

தமிழ்ப்பிரதேசங்களிலுள்ள தமிழ் ஆசிரியர்களுக்கு சிங்களத்தில் சம்

ளோர் அனுசரித்து நடக்க வேண்டியது கடமையாகவிருக்கும் போது, நிர்வாக இயந்திரத்தை முடுக்குபவர் அமைச்சர்களின் கட்டளைகளை மீறி நடக்கும் தன்மையை மேற்கொண்டுவருவது கண்கூடு.

### எச்சரிக்கை அவசியம்

கல்வித் திணைக்களத்தில் மட்டுமல்லாமல் பல்வேறு திணைக்களங்களிலும் இத்தகைய முரணான நடவடிக்கைகள் இருந்து வருகின்றன. இதனால், கல்வி அமைச்சர் 'தமிழ்த் தலைமை ஆசிரியர்களுக்குச் சிங்களம் அவசியம் இல்லை' என்று விடுத்துள்ள உத்தரவுக்கும் குந்தகம் ஏற்படாதபடி எச்சரிக்கையுடன் பார்த்துக் கொள்ள வேண்டியது சகலருடைய கடமையுமாகும்.

கைகளையும் கடந்த காலத்தில் வகுப்பு வெறியில்ஊறித் திளைத்த சிங்கள அரசியல்வாதிகள் கடைப்பிடித்து வந்தனர். இதன் காரணத்தினால் வடக்குக்கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி குன்றியதுடன், ஆட்சியின் பாராமுகத்தினால், ஓரளவு செழித்து வந்த பல அபிவிருத்தித்திட்டங்களும் அருகிப்போய் விட்டன. இதனால் தமிழ் பேசும் மக்கள் மட்டும் தான் சீரழிந்தார்களென்று கூறுவதற்கில்லை. இலங்கை அனைத்துக்குமே இதனால் தீமையே ஏற்பட்டது.

காணி அமைச்சர் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புகளிலெல்லாம், 'தேசிய அரசாங்கம் இனப்பாகுபாடுகள் எதையுமே கடைப்பிடிக்காமல், சகல இன மக்களும் பயனடையத்தக்க பணிகளையே மேற்கொள்ளும்'

## மட்டக்களப்பில் மராமத்து மந்திரி

பளப் பட்டியல்களை அனுப்பவும், சிங்களக் காசோலைகளை அனுப்பவும் கடந்த காலங்களில் பல பிரயத்தனங்கள் எடுக்கப்பட்டன.

கல்வி அமைச்சரோ, தகுதிவாய்ந்த மேலதிகாரிகளோ கட்டளையிடாமல் சில பகுதி வித்தியாதிகாரிகளே தங்களுக்கெனத் தனியான கொள்கைகளை வகுக்கத் தலைப்பட்டனர். மட்டக்

### மந்திரி வருகை

கடந்த பல வருடங்களாக இந் நாட்டிலே அருகிப் போய்க் கொண்டிருந்த தேசிய ஒற்றுமை மீண்டும் தளைத்து வளருவதற்கேற்ற சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. தேசிய அரசாங்கம் ஓரளவு பெருந்தன்மையுடன்

என்று வலியுறுத்தி வந்திருக்கிறார். வாய்ப்பேச்சுடன் மட்டும் நின்று விடாது, இதனைச் செயலுக்குக் கொணரவும் அரசு உடன் ஆக்கவேலைகளில் ஈடுபட வேண்டும்,

### தட்டுப்பாடு நீங்க......

அயல் நாடுகளிலிருந்து எழுபது சதத்துக்கு ஒரு கொத்து அரிசியை வாங்கி, இருபத்தைந்து சதத்துக்கு மக்களுக்கு வழங்கும் திட்டம் அமுலில் இருப்பதனால் தான் அயல் நாட்டுச் செலாவணித்தட்டுப்பாடு இங்கு இருந்து வருகிறது என்பதனை சகல அரசியல் விற்பன்னர்களும் எடுத்துக் காட்டி வருகின்றனர். ஆனால் இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் அரிசி மானியத்தில் கைவைப்பது ஆபத்தாகவே முடியும்.

இந்நாட்டுப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் மக்களைப் பசியின்றி வாழவைக்கவும் உள்ள ஒரே ஒரு திட்டம் தான் விவசாயத்துறையில் போதுமான அபிவிருத்திகளை மேற்கொள்ளுவது.

கிளிநொச்சிபாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் சங்க இலக்கியச் சான்றுகளுடன் பாரா

(9-ம் பக்கம் பார்க்க)

தேசிய அரசாங்கம் சர்வாதிகாரப் போக்கில் போவதாக மற்றொரு குற்றச்சாட்டையும் எதிர்க்கட்சிகள் சுமத்தத் தொடங்கியுள்ளன. ஆயினும் அரசாங்கம் உறுதியுடன் நடவடிக்கை எடுக்குமானால் எதிர்க் கட்சிகளின் இந்தப் பிரசாரத்தை முறியமடித்துவிடலாம். எதிர்கட்சியினர் தங்களின் பிரசாரப் பீரங்கியைத் தமிழரசுக் கட்சியின் மீது திருப்பியுள்ளனரென்றாலும் சிங்கள மக்களிடையே உடனுக்குடன் பதிலளிக்க வேண்டியவர்கள் ஐக்கியத் தேசியக் கட்சியினரே.

சிங்கள மக்களிடையே ஐ. தே. கட்சியினரின் பிரசாரம் இதுவரை வலுவடையவில்லை. சிங்களத் தினசரிப் பத்திரிகைகளின் பிரசாரமும் போதுமானதாயில்லை. ஐ. தே. கட்சியை ஆதரிக்கும் "லங்காதீப" போன்ற பத்திரிகைகள் சில சமயங்களில் தங்களை அறியாமலே வகுப்புவாதப் பிரசாரத்தில் இறங்கிவிடுகின்றன. ஆதலின் இப்போதிருந்தே ஐ. தே. கட்சி எதிர்ப்பிரசாரம் செய்தாலன்றி மொழி மசோதா போன்ற சிறுபான்மையோருக்கு உரிமைகள் வழங்கும் மசோதாக்களைக் கொண்டுவரும் போது நெருக்கடியான நிலைமை தோன்ற வழி ஏற்படும்.

[illegible] நியாயமான உரிமைகள் வழங்கப்படுவதை அவ்வப்போது சிங்கள மக்களுக்குத் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கிக் கூற வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க இரகசியங்கள் அம்பலம்

## எதிர்க்கட்சி நடவடிக்கைக்கு உயர்தர அதிகாரிகள் ஆதரவாம்

அரசாங்க திணைக்களங்கள் சம்பந்தப்பட்ட இரகசியத் தகவல்களை, அரசாங்கம் எவ்வளவு பாதுகாப்புடன் வைத்திருந்தாலும் எதிர்கட்சியினரும் எதிர்கட்சிச் சார்புடைய பத்திரிகைகளும் அம்பலப்படுத்திக் கொண்டேயிருக்கின்றன. சாத்திரி—சிறிமா உடன்படிக்கை பற்றி சில இரகசியத் தகவல்கள் பொது மக்கள் அரங்கிற்கு அண்மையில் அம்பலப்படுத்தப்பட்டது வாசகர்கள் அறிந்ததே. இதே போன்று மத்திய வங்கி சம்பந்தப்பட்ட சில தகவல்களும் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தும் நோக்கத்துடன் எதிர்கட்சிகள் அண்மைக் காலத்தில் எடுத்து வரும் நடவடிக்கைகளில் முதன்மை பெற்று நிற்பது, அரசாங்க திணைக்களங்கள் சம்பந்தப்பட்ட தகவல்களை அறிவதாகும். எதிர்கட்சியினரின் இம் முயற்சிக்குப் போதிய ஆதரவு இருந்து வருவதாகவும் தெரிகிறது. சிறுபான்மையினருக்குச் சாதகமான முறையில் இரகசியமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் வெளியாகிக் கொண்டேயிருக்கின்றன.

ஒவ்வொரு திணைக்களத்திலும் தமிழ் பேசும் மக்களுக்கும், தமிழ் ஊழியர்களுக்கும் சாதகமான முறையில் எடுக்கப்படும் நடவடிக்கைகள்—சட்ட அமுலில் காட்டப்படும் தளர்ச்சிகள் உடனுக்குடன் எதிர்க்கட்சிச் சார்புடைய தினசரிகளில் அம்பலப்படுத்தப்படுகின்றன. இதற்கு ஒவ்வொரு திணைக்களங்களிலும் உள்ள சில பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சிச் சார்புடைய அதிகாரிகளேகாரணமெனத் தெரியவருகிறது.

மத்திய வங்கியில் எதிர்க்கட்சிச் சார்புடைய ஒருஉயர்தர அதிகாரி சிங்களச் சட்டத்தை தீவிரமாக அமுல் நடாத்தி ஒரு கிளர்ச்சியை உருவாக்க முயன்றது சம்பந்தமாக தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் எடுத்த நடவடிக்கைகள் இப்பொழுது எதிர்க்கட்சிச் சார்புடைய தினசரி யொன்றில் வெளியாகியுள்ளன. திரு. செல்வநாயகம் அவர்கள் மத்திய வங்கியின் ஆளுனருக்குத் தனிப்பட்ட முறையில் எழுதிய கடிதத்தின் விபரத்தையும் இப் பத்திரிகை வெளியிட்டுள்ளது. இதற்குக் காரணம் மத்திய வங்கியின் துணைச்செயலாளர்களில் ஒருவர் தான் என்று கூறப்படுகிறது.

தமிழ் பேசும் மக்களுக்குச் சாதகமான முறையில் எடுக்கப்படும் நடவடிக்கைகளை வைத்து, பெரியஒரு பிரச்சாரத்தை நடாத்தி நாட்டில் வகுப்பு வாதப் பூதத்தை அவிழ்த்து விட எதிர்க்கட்சிகள் எடுக்கும் முயற்சிக்கு அடித்தளமே இது என்று தெரிகிறது.

### வர்த்தக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யத்தைச் சாதிக்க முனைந்ததாகவும் கூறப்படுகிறது.

பிடவை வியாபாரத்தில் ஓரளவு பிரசித்தமடைந்துவிட்ட வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு தமிழ் வர்த்தகரை, அவர் இந்நாட்டவரல்ல என்று கூறி பல வகையிலும் துன்புறுத்தி, அவருடைய சொத்துக்களை சில சிங்கள முதலாளிகள் பிடுங்கிக்கொண்டிருப்பதாகவும் ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. இது சம்பந்தமாக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

மலைநாட்டில் சிங்களவரல்லாதோருக்குச் சொந்தமாகவுள்ள வர்த்தக நிலையங்களை தந்திரோபாயங்கள் மூலம் பிடுங்கிவிடவும் இக்குழு பெருமுயற்சிகள் எடுத்துவருவதாகக் கூறப்படுகிறது.

## 'ஒன்று பட்டு வாழ வழி வகுப்பீர்'

### நீர்ப்பாசன அமைச்சருக்கு உடுவில் கிராமசபை வரவேற்பு

'தன் பங்கு தாவென்ற தம்பியும், தம்பியோடின் புற்று வாழாத் தமையனும் சொல்லாமல் வந்த கூற்றுவன்' என்னும் முதுமொழியை நினைவூட்டி அம்மொழிக்கு இலக்காகா வண்ணம் தேசிய அடிப்படையில் ஒருமித்தும், தனித்தும் வாழ வழிவகுப்பீர்களென நம்பி வருக, வருகவென பன்முறை வாழ்த்தி வரவேற்கிறேன்.' இவ்வாறு நீர்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வாவுக்கு உடுவில் கிராமசபையின் சார்பில் சபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் வாசித்தளித்து வரவேற்புப் பத்திரம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சரின் யாழ்ப்பாண விசயத்தின்போது உடுவில் கிராமசபை அளித்த வரவேற்பில் வாசித்தளிக்கப்பட்ட வரவேற்புப் பத்திரத்தின் விபரம் வருமாறு:-

'தேசிய அரசாங்க அமைச்சரவையின் கௌரவ முதல்வர் அவர்களே, கௌரவ உள்ளூராட்சி அமைச்சர் அவர்களே, தங்களை எமது இனத்தின் சார்பில் வருக, வருகவென்று வரவேற்கின்றேன்.

'எமது இனம் இழந்த உரிமைகளை மீண்டும் பெற்று இலங்கை மாதாவின் இரட்டைக் குழந்தைகளாய் நாம் ஒருவரோடொருவர் இணைபிரியாத சந்தோசமாகவாழ வழிசெய்வீர்களென நம்பி வருக, வருகவென்று இதயம் மலர்ந்து வரவேற்கின்றேன். இலங்காபுரியின் தவப்பயனுக வந்துதித்த கௌரவ காணி நீர்ப்பாசன அமைச்சர் அவர்களே, எமது இனத்தின் தந்தையாகிய செல்வாவுடன், மைந்தராய இத்தொகுதி உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் முதலாய பதின்நால்வரும் ஒன்றிணைந்து எமது வடகீழ் மாகாண வரண்ட பிரதேசத்தை வளப்படுத்துவீர்களென வாழ்த்தி வருக, வருகவென்று மனம் பூரித்து வரவேற்கிறேன்.

'வடமாகாண மின்சார மத்திய நிலையத்தை விஸ்தரிப்புச்செய்து எமது மின்சார சேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்றும், மின்சாரத்தின் விசைகொண்டு எமது கமத்தொழிலை விருத்தி செய்வதற்கு கடனுதவி பெற்றுத் தரவேண்டுமென அமைச்சர்கள் இருவரையும் எமது உடுவில் கிராமசபை சார்பிலும், மற்றும் கிராமசபைகளின் சார்பிலும் வேண்டுகிறேன்.

'தன்பங்கு தாவென்ற தம்பியும், தம்பியோடின் புற்று வாழாத் தமையனும் சொல்லாமல் வந்த கூற்றுவன்' என்னும் முதுமொழியை நினைவூட்டி அம்மொழிக்கு இலக்காகா வண்ணம் தேசிய அடிப்படையில் ஒருமித்தும், தனித்தும் வாழ வழிவகுப்பீர்களென நம்பி வருக, வருகவென பன்முறை வாழ்த்தி வரவேற்கின்றேன்.'

### வீரகேசரி......

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வாரந்தோறும் வெளியாகும் இந்தப் பத்திரிகை ஏனைய ஞாயிறு அல்லது வாராந்தப் பத்திரிகைகளை விட மிகக் கவர்ச்சியான முறையில் அச்சிடவும், பல வர்ணங்கள் உள்ள பக்கங்களால் பத்திரிகையை அலங்கரிக்கவும் திரு. எஸ்மன்ட் விக்கிரமசிங்கா எண்ணியுள்ளார்.

ஜே. ஆர். —எஸ்மன்ட் கோஷ்டியால் விலைக்கு வாங்கப்பட்ட 'வீரகேசரி' நிறுவனத்தைப் புதிய கம்பெனியாகப் பதிவு செய்து அதன் நிர்வாக அதிபராக திரு. எ. அருள்பிரகாசத்தை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. அருள்பிரகாசம் 1956ல் தேர்தல் கமிஷனராகக் கடமையாற்றி 1956ல் மக்கள் புரட்சிக்குப் பின்னர் திரு. பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்ததையொட்டி அரசாங்க சேவையிலிருந்து விலகி லேக்ஹவுஸ் ஆசிரியர் குழு நிர்வாக அதிகாரியாகப் பதவியேற்றார். 'தினகரன்' பத்திரிகையின் நிர்வாக ஆசிரியராகவும், ராயிட்டர் நிறுவனத்தின் நிர்வாகியாகவும் அவர் பணி புரிந்துள்ளார்.

இதற்கிடையே 'வீரகேசரி' நிறுவனத்தின் நிர்வாக அதிபரும், நிர்வாக ஆசிரியருமான திரு. டி. பி. கேசவனுக்குக் கௌரவப் பிரசாவுரிமை வழங்குவது பற்றியும் அரசாங்கம் பரிசீலனை செய்வதாக அறியப்படுகிறது. திரு. கேசவன் ஓர் இந்தியர்.'

### கல்வி அமைச்சரின்........

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞமன்றத்தில் எடுத்துக் கூறியுள்ளார், இக்கருத்தினை.

வடக்கிலும் கிழக்கிலுமே விவசாயத்துக்கான பொன் கொழிக்கும் பூமி கிடக்கின்றது. இப் பூமியை உடனடியாகப் பயிர்ச் செய்கைகளுக்குப் பயன் படுத்தினால் உணவுப் பற்றுக்குறை நீங்கிவிடும். வான் மழையை மட்டும் நம்பி விவசாயம் பண்ணினால் வளர்ந்து வரும் சனப் பெருக்கத்துக்கு உணவளித்துச் சமாளிக்க முடியாது. காடு வளர்ந்து போயுள்ள நிலங்களைப் பண்படுத்தியாக வேண்டும்.

பண்டிதர் அவர்கள் மகாவலி கங்கையை வடக்கே திருப்புவதன் மூலம் கிடைக்கக் கூடிய பலனைப் புள்ளி விபரங்களுடன் எடுத்துக் காட்டியிருக்கிறார். மகாவலி கங்கையைத் திருப்புவதோடல்லாமல் வடக்கிலும் கிழக்கிலும் தூர்ந்து போய்க் கிடக்கும் குளங்களையும் சீர்திருத்த உடனடியாக அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

#### பட்டினிச்சாவு பெருகும்!

கிழக்கு மாகாணத்தின் காடடர்ந்த பிரதேசத்துக்குள்ளே அழிந்தும் அழியாத நிலையிலிருக்கும் பல குளங்களை அரசாங்கத்துக்கு காண்பித்த பெருமை முன்னாள் கற்குடா பிரதிநிதியாகவிருந்த திரு. பொ. மாணிக்கவாசகருடையதாகும். அவர் காட்டிய குளங்களைத் திருத்தும் பணிக்கு ஆட்சியினரிடம் போதிய பணம் இல்லை என்று கைவிரிக்கப்பட்டது.

விவசாயத்துறை அபிவிருத்திக்கு பணம் செலவிட இன்று அரசாங்கம் தயங்குமேயானால் எதிர்காலத்தில் இந்நாட்டில் பட்டினிச் சாவுகள் பல்கிப் பெருக ஆரம்பித்துவிடும் என்று எச்சரிக்க விரும்புகிறோம்,

வடமாகாணத்துக்கு மாவலியைத் திருப்புவதற்கான ஒழுங்குகளைச் செய்வதாகவும், யாழ்ப்பாணத் தண்ணீர் வினியோகத்தைச் சீராக்க அமெரிக்காவிலிருந்து இயந்திர சாதனங்களை வரவழைக்கப் போவதாகவும் காணி அமைச்சர் உறுதி கூறியிருக்கிறார். மற்றும் படித்த இளைஞர்களுக்கும், காணியற்ற விவசாயிகளுக்கும் உடனடியாகக் காணிகள் வழங்க அமைச்சர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் போவதாகவும் வாக்குறுதி கூறியிருக்கிறார்.

#### படுவானும் எழுவானும்

அண்மையில் மட்டக்களப்புக்குச் சென்றிருந்த தபால் தந்தி, பொது மராமத்து அமைச்சர் திரு. மொண்டேக்கு ஜெயவிக்கிரமா கிழக்கு மாகாணத்துக்கான அபிவிருத்தித் திட்டங்களில் போதிய கவனம் செலுத்தப் போவதாகக் கூறியிருக்கிறார்.

படுவான் கரை என்றும் எழுவான் கரை என்றும் மட்டக்களப்பு வாவியின் மேற்குக் கரையிலும் கிழக்குக் கரையிலும் முறையே பிரிந்து கிடக்கும் பூப் பிரதேசங்களை இணைத்து வைக்கும் சாதனங்கள் வெகு குறைவு. வளமான வயல்களை புடைய படுவான் கரைப் பிரதேசம், மக்கள் தொகை கூடிய எழுவான் கரையுடன் தொடர்பு கொண்டிருந்தால் தான் பெருகும் வளத்தை மேலும் பெருக்கவும் அதன் பலனை அடையவும் முடியும். இவ்விரு பிரதேசத்தையும் இணைக்க, பிளவு படுத்தும் நீர் நிலையங்களுக்கு மேலாகப் பல பாலங்கள் கட்டப்பட வேண்டும்.

அமைச்சர் ஜெயவிக்கிரமாவை மட்டக்களப்பு முதலாவது பிரதிநிதி திரு. செ. இராசதுரை நீர்த் துறைகளுக்கு அழைத்துச் சென்று காட்டியிருக்கிறார். படுவானையும் எழுவானையும் இணைக்க வேண்டிய அவசியத்தையும் விளக்கிய பின்னர் இரு பாலங்களை ஐந்து வருடங்களுள் கட்டிமுடித்துத் தருவதாக அமைச்சர் வாக்குறுதி அளித்துள்ளாராம்.

மட்டக்களப்புக்கு மேற்கேயுள்ள வலையிறவுக் துறைக்கும், தெற்கேயிருக்கும் மண்முனைத் துறைக்கும் பாலங்கள் போடப்பட்டுவிடுமானால் இலங்கையின் உணவுப் பற்றுக்குறையில் பெரும் பகுதி நீக்கப்பட்டு விடும் என்பதில் ஐயமில்லை.

### விருந்தினர் மீது...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதி ஜனுப் எம். எச். மகம்மது அவர்களாவார்.

டாக்டர் ஸுத்ரமழான் இதற்கு முன்பும் ஒரு முறை இலங்கைக்கு வந்த பொழுது அப்போதைய பிரதமர் திருமதி சிறிமாவோ பண் [illegible] நேரத்தில் இந்நாட்டிலிருந்து வெளியேறுமாறு அவருக்கு உத்தரவிட்டார்.'

### இன்னும்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மொன்றா மன்னார் பள்ளிமுனை தமிழ்ப் பாடசாலை அதிபருக்குக் கொழும்பு கல்வித் திணைக்களத்திலிருந்து 6-7-65ந் திகதி அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

இக்கடிதத்தில் வித்தியாதிகாரிக்குப் பதிலாக டி. செபரத்தினம் என்பர் ஆங்கிலத்தில் கையெழுத்திட்டுள்ளாராம்.

தேசிய அரசாங்கம் வந்த பிறகும் சில அதிகாரிகளின் பழைய வசப்புவாதக் கெடுபிடிகள் இன்னும் ஓயவில்லை இச் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

### தொழிலாளர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டும் முகமாக நாடகம், நடனம், சங்கீதம் போன்ற இன்னோரன்ன பிற கலை நிகழ்ச்சிகளைத் தயாரிக்கலாம்.

இக் கலைவிழா சம்பந்தமான விபரங்களுக்கு இ. தொ. கழகம், 37, ஸ்டவ் வோட் வழி, இராகலை என்ற மூகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி கலைஞர்களை மாவட்டப் பிரதிநிதி கேட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நினைப்பும் நடப்பும்

வாரவிடுமுறையில் வீடுவந்திருந்த நான் நோயாளி ஒருவரைப் பார்ப்பதற்காக அரசாங்க வைத்தியசாலைக்குச் சென்றேன். மேல் மாடியில் ஏழாம் வாடில் இரண்டாவது கட்டிலை நெருங்கும்போது ஆச்சரியம் ஒன்று மூர்த்தி வடிவில் கட்டிலில் படுத்திருந்தது. ஒரு கணம் ஸ்தம்பித்துப் போய்விட்டேன். வசதியுள்ள குடும்பத்தில் பிறந்து, பெரிய உத்தியோகம் பார்க்கும் மூர்த்தி போன்றோரும் அரசாங்க வைத்தியசாலையின் கட்டிலைக் கைப்பற்றிக் கொண்டால் சாதாரண மக்களின் கதி என்ன என்பதை எண்ணிக் கொண்டிருந்த போது......

'யார் சேகரா? எங்க இங்கால? இப்படி வந்து இருந்து எனக்கு கடிதம் ஒன்று எழுதித்தாங்க' மூர்த்திதான் அழைத்தார். அவருடைய வலது கையில் விரல்களைச் சுற்றி பலமான கட்டுப் போட்டிருந்தது. என்ன நடந்தது என்று கண்களாலே கேட்டுக் கொண்டு கட்டிலின் விளிம்பில் ஏறி உட்கார்ந்தேன்.

எனது சைகை வினாவுக்கு பதிலளிக்காமல் தலையணை அடியிலிருந்து பேனாவையும் எடுத்து நீட்டினார். இனி என்ன செய்வது? மறுக்க முடியுமா? எழுத முடியாதவாறு அவருடைய கையில் கட்டுப் போட்டிருக்கிறது. அவற்றை வாங்கி எழுதுவதற்கு தயாராக நிமிர்ந்து பார்த்தேன்.

'டியர் சாந்திக்கு!' மூர்த்தி கூறினார்.

நான் எழுதாமல் வியப்புடன் மூர்த்தியை நோக்கினேன்.

எந்த சாந்திக்காக பெற்றோரையும் எதிர்த்து, அவளைத் திருமணஞ் செய்ய முடியாதென்று கங்கணம் கட்டிக் கொண்டு வாழ்ந்தாரோ, அதே சாந்திக்கா மூர்த்தி கடிதம் எழுதுகிறார்? நம்ப முடியவில்லையே! எனது முகக்குறிப்பை உணர்ந்த மூர்த்தி 'நீங்கள் நினைப்பதெல்லாம் எனக்குத் தெரியும். எந்த சாந்தியை வெறுத்து ஒதுக்கினேனோ அவளுக்கே இன்று கடிதம் கட்டாயம் எழுதித்தானாக வேண்டிய நிலை. இப்போது அவள் மிஸ் சாந்தியல்ல திருமதி மூர்த்தி.' என்று வியப்பூட்டினான்.

அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி! சாந்தி மூர்த்தியின் மனைவியாகிவிட்டாளா? அப்படியானால் மூர்த்தியின் சபதங்கள் எல்லாம் காற்றிலே பறந்து விட்டதா? 'என்ன மூர்த்தி சொல்றீங்க? சாந்தி உங்க மனைவியா? எப்போ உங்க திருமணம் நடந்தது? எனக்குத் தெரியாதே!'

'உங்களுக்கென்ன, நண்பர்கள் எவருக்குமே தெரியாது! அது பெரிய தொரு கதை. முதலில் இன்றைய கட்டிற்கு இந்தத் தபாலை சேர்க்க வேண்டும். அதை எழுதி முடியுங்கள்.'

எண்ணற்ற வியப்பு வினாக்கள் என்னைக் குடைய, கடிதத்தை எழுதத் தொடங்கினேன். கடிதத்தை எழுதி முடிக்கவும், ஆஸ்பத்திரி மணி அடிக்கவும் சரியாக இருந்தது. அதற்கு மேல் அங்கு நின்றால் கங்காணிமார் கடி நாயாக மாறுவார்கள். ஆகவே ஒரு முறை கடிதத்தைப் படித்துக் காட்டி விட்டு ஒட்டி முகவரியை எழுதினேன்.

'சேகர்! முகவரியைக் கவனமாக எழுதுங்க. மாற்றி எழுதிவிடாதீங்க. அப்படி எழுதியதால் வந்த முடிவுதான் இவையெல்லாம். நாளைக்கு கட்டாயம் வாங்க. நடந்தவற்றைச் சொல்லுகிறேன். தபாலை மறக்காது கட்டிற்குச் சேர்த்து விடுங்க.'

அடக்க முடியாத ஆவலை ஒடுக்கிக் கொண்டு ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறினேன்.

எப்படி இவர்கள் திருமணம் நடந்திருக்கும்? மூர்த்தியின் தொழில் நுட்பப் பயிற்சிக் காலத்திலிருந்தே சாந்தியை அவனுக்கு மணம் பேசி முடிப்பதற்கு பெற்றோர் முனைந்து கொண்டிருந்தது எனக்குத் தெரியும். மூர்த்தி ஒரு வார்த்தை மாத்திரம் 'ஆம்' என்று கூறியிருந்தால் திருமணம் 'ஜாம் ஜாம்' என்று நடைபெறத் தயாராயிருந்தது. ஆனால் ஏனோ தெரியாது மூர்த்திக்கு சாந்தி மேல் கொஞ்சங்கூடப் பிரியங் கிடையாது. திருமணப் பேச்சு எடுத்ததுமே, ஒருமாத காலத்திற்கு வீட்டுப் பக்கமே எட்டிப் பார்க்க மாட்டார். அப்படியிருந்தவர் சாந்தியையே மணந்து கொண்டால் வியப்படையாமல் இருக்க முடியுமா?

மறுநாள் மாலை 5 மணியாகியதும் அவசர அவசரமாக புறப்பட்டு ஆஸ்பத்திரியை அடைந்தேன். மேல்மாடி ஏழாம் வாட்டின் திறந்திருந்த ஜன்னலினூடே வரும் தென்றலை சுவைத்துக் கொண்டு என்னையே எதிர் பார்த்துக் கொண்டிருந்தார் மூர்த்தி- எந்தவித சம்பிரதாய வார்த்தையுமின்றி நடந்ததைச் சொல்லத் தொடங்கினார்.

வழக்கமான அப்பாவிடமிருந்து வரும் கடிதங்களிலெல்லாம் சாந்தியைப் பற்றி குறிப்பில்லாமல் இருக்கவே இருக்காது. சரவணையார்—அவர்தான் சாந்தியின் தகப்பனார் எங்களுக்குச் சிறிது தூரத்து உறவு. அதை வைத்துக் கொண்டு சாந்தியை என் தலையில் கட்டுவதற்கு சரவணையார் தான் ஒற்றைக் காலில் நின்றாரென்றால் அப்பாவும் ஒற்றைக் காலில் நின்றதுதான் வேடிக்கை.

அன்று சனிக்கிழமை. சூறாவளியால் பாதிக்கப்பட்ட இடங்களை மதிப்பீடு செய்து விட்டு பங்களாவுக்குத் திரும்பிய எனக்கு அப்பாவிடமிருந்து நீண்ட கடிதமொன்று வந்திருந்தது. அதில் சாந்தியின் தந்தை, இனித் தங்களால் காத்திருக்க முடியாதென்றும் வெகு விரைவில் திருமணத்தை முடித்து விட வேண்டுமென்றும் கூறுவதாக எழுதியிருந்தார். அதை வாசித்ததும் ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. உடனடியாக அப்பாவிற்கு மிக நீண்ட பதிலொன்றை எழுதி முடித்தேன்.

மகன் விரும்பாத ஒன்றை வலுக்கட்டாயத்தின் பேரில் செய்து வைப்பதற்காக தந்தை என்ற முறையில் தாங்கள் விடாது முயற்சி செய்து வருவதையிட்டு மிக மிக வேதனைப் படுகிறேன். உங்கள் தள்ளாத வயதில் என்னைத் திருமணக் கோலத்தில் பார்க்க விரும்புவதை நானறிவேன். அதற்கு, சாந்திதானா கிடைத்தாள்? சாந்தி தவிர்ந்த வேறு எந்த ஏழைப் பெண்ணையாவது தாங்கள் காட்டினால் மறு பேச்சில்லாமல் மணஞ்செய்து கொள்கிறேன். தயவு செய்து சாந்தியை மட்டும் கட்டச் சொல்லி வற்புத்த வேண்டாம்.

சாந்தி படித்த பெண் தான். ஆனால் அவளின் படிப்பு கலாசாலைக்கு உதவுமேயன்றி வாழ்க்கைக்கு பயன் படாது. அவளின் நடை உடை பாவனை எதுவுமே எனக்குப் பிடித்தமாயில்லை. சாந்தியை மணக்கிறவன் அவளோடு நீண்ட காலம் வாழ்க்கை நடத்த மாட்டான். நடத்தவும் அவள் விடமாட்டாள். குடும்பப் பெண்ணுக்குரிய எந்த லட்சணம் அவளில் காணப்படுகிறது? வெறும் பகட்டும் பார்ப்போரைக் கவரும் பயங்கரக்கவர்ச்சியும் தவிர சாந்தியிடம் வேறு என்னத்தைக்காணக் கூடியதாக இருக்கிறது?

**மனிதன் நினைப்பவை அனைத்தும் நடைபெறுவதில்லையே! வெறுத்ததை விரும்புகிறான். விரும்பியதை வெறுக்கிறான். இது இயற்கையின் நியதி. சாந்தியை வெறுத்த மூர்த்தி அவளுக்கே வாழ்வளிக்கிறான்.**

**இவ்வாரச் சிறுகதை**

இப்படி எதை எதை யெல்லாமோ கைக்கு வந்தபடி எழுதித் தள்ளினேன். எவ்வளவுக்கு சாந்தியை கீழ்த்தரமாக எழுத முடியுமோ அவ்வளவு மோசமாக எழுதினேன். இதைப் படித்த பிறகாவது அப்பா சாந்தியைப் பற்றிய திருமணப் பேச்சை விடவேண்டுமென்ற நோக்கோடு அப்பட்டமான சில பொய்களையும் சேர்த்து எழுதினேன்.

அப்பாவுக்கு மாத்திரம் இன்றி அதே நேரத்தில் சரவணையாருக்கும் ஒரு கடிதமெழுதினேன். அதில் 'என்னை நம்பி இருப்பதில் எதுவித பயனுமில்லை. சாந்தியை காலாகாலத்தோடு வேறு எங்காவது கட்டிக் கொடுங்கள்' என்று குறிப்பிட்டிருந்தேன்,

இரண்டையும் தனித் தனி உறையில் போட்டு ஒட்டி முடித்த பின் தான் மனத்திருப்தியோடு மதிய உணவுக்குச் சென்றேன்.

சூறாவளி நிவாரணவேலைகளை ஓரளவு முடித்துக் கொண்டு சரியாக ஒரு மாதத்தின் பின் ஊருக்குக் கிளம்பினேன். பங்களாவில் மடைத்தொழில் புரியும் பெரோவின் உணவில் சுவையை மறந்திருந்த 'நாக்கு' அம்மாவின் கை வரிசையை ஒரு வினாடி நினைத்து உமிழ் நீரில் நனைகிறது. பசி வயிற்றைக் கிள்ளியது.

வழக்கமாக விடுமுறையில் இங்கு வரும்போதெல்லாம் எனது முதல் தரிசனம், 'பஸ் ஹோல்டிங் பிளேஸை' யடுத்து, பரந்து விரிந்து பழம் பெரும் ஆல மர நிழலில் அசாதாரண அமைதியோடு விளங்கும் அந்த மாரியம்மன் கோயிலில் குடி கொண்டிருக்கும் அம்மனைத் தான். அம்மன் தரிசனத்தை தொடர்ந்து என்னை யறியாமலேயே கால்கள் மெயின் வீதியை விட்டு, குறுக்கில் ஒடிந்து திரும்பும் ஒற்றையடிப் பாதையை நாடும். அந்தப் பாதையின் எல்லையில் தான் என்னையீன்ற தாயும் தந்தையும் என்னைக் காண்பதற்கும் களிப்பதற்கும் காத்திருப்பர்.

உறவினர் ஒருவரோடு கதைத்துக் கொண்டே மெயின்வீதியில் மிகநீண்ட தூரம் சென்று விட்டேன். வீதி திரும்பும் வளைவில் தான் சாந்தியின் வீடு. இவ்வளவு தூரம் வந்து விட்டு அங்கே போகாமல் விடுவது முறையல்ல, என்று உள்ளே நுழைந்தேன்.

வீடு 'வெறிச்' செனசோபையிழந்து கிடந்தது. சாந்தியின் தகப்பனார் சரவணையார் மூலையில் கட்டிலில் மல்லாக்கப் படுத்திருந்தார். என்னைக் கண்டதும் அவர் முகத்தில் தோன்றியது வியப்பா, விரக்தியா என்று கண்டு கொள்ள முடியாதிருந்தது. எழுந்திருந்து வரவேற்க முயன்றார். சிரமத்தைக்கொடுக்காது நானே அருகில் சென்று கதிரையை இழுத்துப்போட்டு உட்கார்ந்தேன். சரவணையார் மிகவும் பலவீனமாகக் களைத்துப் போயிருந்தார்.

'மூர்த்தி! எப்ப வந்தனீ? மெலிஞ்சு போயிட்டியே! உடம்ப நல்லா கவனிச்சுக்கோ' என்று பரிவுடன் கூறிய அவர் உள்ளே திரும்பி 'மகள் சாந்தீ! கோப்பி கொண்டு வா!' என்று கட்டளையிட்டார்.

அவரின் குரலில் கெம்பீரத்தைக் கூட காணவில்லை. 'என்ன உங்களுக்குச் சுகமில்லையா?' என்று கேட்டு வைத்தேன்.

சில நிமிடங்களால் சாந்தி கோப்பி கொணர்ந்தாள். அவள் கூட சற்று மெலிந்திருந்தாள். கலகலப்பையும் காணவில்லை. எல்லாமே பிரமை பிடித்தது போல் காணப்பட்டன. அங்கிருக்கவே பயங்கரமாயிருந்தது. விடை பெற்றுக் கொண்டு வீட்டிற்கு வந்தேன்.

அப்பா எங்கோ வெளியில் சென்றிருந்தார். அம்மா என்னைக் கண்டதும் பூரித்துப் போனாள். எனக்குப் பக்கத்தில் கிடந்த மேசையில் சாய்ந்து கொண்டு அம்மா 'தம்பி! சரவணையார் வீட்டுப் பக்கம் ஒருக்கா போயிட்டு வாவன்' என்றவள் பிறகுதான், சொல்லியது சரியோ தவறோ என்று மனதிற்குள் சங்கடப்படுபவர் போல் காணப்பட்டார்.

'அங்கிருந்துதானம்மா வாரன். சரவணையாருக்கு சுகமில்லையோ' என்று நான் கேட்டேனோ இல்லையோ, அம்மாவுக்கு அழுகையே வந்துவிட்டது.

'தம்பி! உனக்கு விஷயம் ஒன்றும் தெரியாமத்தானா கேட்கிறாய்? ஒரு மாதமா வாதம் வந்து படுத்த படுக்கையாய் ஒன்றுஞ் செய்ய ஏலாமல், உள்ளதெல்லாம் விற்றுச் சுட்டு மருந்தும் மாயமுமாய் அந்தக் குடும்பம் படுகிற பாடு. எல்லாம் உன்னால் வந்த வினை தான்...'

'என்னாலா? என்னம்மா சொல்லுகிறீர்கள்?'

'அதுதான் நீ அனுப்பின கடிதத்தைப் பார்த்தப்புறம்...'

'எனது கடிதமா? ஒ முந்தி அனுப்பியதைச சொல்கிறீர்களா? அதில் அப்படி ஒன்றும் விசேடமாக எழுதவில்லையே!'

'அதுதான்டா நீ செய்த பெருந்தவறு. அவள் சாந்தியை பற்றி கண்டமாதிரி கிறுக்கி அப்பாவுக்கு அனுப்புறத்துக்குப் பதிலா சரவணையாருக்கு அனுப்பிப் போட்டாய். உன்ர கடிதத்தை உடைத்து வாசித்ததும் உணர்ச்சியிழந்து மயக்கமாக விழுந்த சரவணையார் இன்றும் அப்படியேதான் படுத்த படுக்கையாய்.........'

இன்னும் அம்மா என்னென்னவோ சொல்லிக் கொண்டேயிருந்தா. எனக்கு அந்த வீடே தலைகீழாக சுற்றிக் கொண்டு வருவது போலிருந்தது. மண்டையில் ஓங்கி யாரோ அடிப்பதுபோன்ற பிரமை. சே! எனது கடிதமொன்று ஒரு குடும்பத்தையே சோகத்தில் ஆழ்த்தியுள்ளதே! என்னால் அவ்வளவு தொல்லைகள் வந்திருந்தும் அதைச் சிறிதும் காட்டிக் கொள்ளாமல் என்னை நலம் விசாரித்த பண்பை நினைத்ததும் மெய் சிலிர்த்தது.

சரவணையார் படுத்த படுக்கையாக இருப்பதற்கு நானே காரணமாக இருந்து கொண்டு 'சுகமில்லையா' என்று வேறு கேட்டு வைத்தேனே! என்ன சிறுமைத்தனம்? தனிமையிலிருந்து குமுறினேன். என்னால் சீரழிந்த அந்தக் குடும்பம் என்னாலேயே செம்மைப் படுத்தப்பட வேண்டும் என்று அந்த வினாடியே சங்கற்பம் செய்து கொண்டேன்.

சாந்தி குடும்பத்திற்கு ஏற்றவளேயல்ல' என்ற

(12-ம் பக்கம் பார்க்க)

தா. பி. சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது தனித்துவம்?

அறிவும் ஆற்றலும் தனி மனித வாழ்வில் இன்றியமையாதனவாகும். அறிவு என்று எதனைக் குறிப்பிடுகிறோம் என்பதை ஆராய்வோம். அறிவின் ஆராய்வு ஏன்? எதற்காக?

இப்பரந்த பிரபஞ்சங்களிலிருந்து நாம் தெரிந்து கொண்டவை சிலவே. பலப்பல நமதறிவிற்கு எட்டாதனவாக இருப்பவையாயினும் அவற்றின் விளைவுகள் யாவை என்பதை அறிதல் நம் கடனாகும்.

எண்ணிலடங்கா சீவராசிகள் வதியும் புவனத்தில் மனிதனும் தோன்றியுள்ளான். மனிதனுக்கு அறியும் ஆற்றல் இயல்பாகவே உருவாகியது. புலன்களின் உணர்வுத் தன்மையை அறிந்து கொண்ட மனிதன் புறப் பொருட்களின் தொடர்பையும் அறியத் தொடங்கினான். மண்ணையும், விண்ணையும், தன்னையும் இணைத்து இயங்கும் இசைவு ஒன்றெனக் கண்டான்.

### பரிணாம வளர்ச்சி

புல்லாகிப் பூண்டாகிச் செடி, கொடி, மரம் எனப் பெருகி நிற்பவை முதல் புழுவாகிப் பறவையாகி விலங்கினமாகி ஈற்றில் மனிதராய் வளர்ந்து வரும் பரிணாமத் தன்மையைச் சிந்திக்கும் ஆற்றல் பெற்றவனாக வளரத் தொடங்கினான். ஒன்றிலிருந்து பலவும், பலப்பலவும் தோன்றி, நிலவி மேலும் பலவன தோன்றச் செய்து ஈற்றில் அழிந்து மீண்டும் அவ்வொன்றினையே அடைகின்றன என்பனவற்றை உணர்ந்தான்.

அகவாழ்விலும், புறவாழ்விலும் வளர்ச்சிப் பரிணாமங்களை அறிந்தான். இயற்கையாகவே நிகழும் பரிணாம மாற்றங்களும், செயற்கையாக ஆக்கப்படும் பரிணாம மாற்றங்களும் விளைவிக்கும் பயன்களையும் அறிந்தான். இயற்கையின் பரிணாம வளர்ச்சிக்கு ஒப்புமாறு செயற்கை வழியால் மாற்றங்களை அமைக்க முயன்ற மனிதன் காலவேகத்துடன் ஓட்டிப் போகும் அளவு திண்மையடையவில்லை. மனித உலகு பூரண விழிப்படையவில்லை. உண்மையறிந்த மனிதன் அறிவொளியைத் தாண்ட விழைந்தான். அறியாமைக் காரிருளில்வாழ்ந்து பழகிப்போன மாந்தர் பகுத்தறியும் ஆற்றலை இழந்தனர்.

### உண்மை புறக்கணிப்பு

ஆதிக்க வெறியர்களும், ஆணவக்காரர்களும், உண்மைக்குத் திரையிட்டு மக்களை ஊமையர்களாக்கினர். அறிஞர்களைப் பகைத்தனர். மதநிலையங்கள் தோன்றின. நலிவுற்ற மக்களுக்குப் பாவிகள் என்ற பட்டம் கிடைத்தது. தெய்வத்தின் பெயரைச் சொல்லி வாழக் கற்றுக் கொண்டனர் மதவாதிகள் பலர்.

இயற்கைப் பரிணாமம் எத்தன்மை வாயந்தது, செயற்கை மாற்றங்கள் எத்தன்மை வாய்ந்தன என்பதை அறியும் ஆற்றல் பொது மக்களுக்கு ஏற்படவில்லை. தனி மனிதர்களாகவே தனித்துவ ஆராய்வாளராகவோ தோன்றிய அறிஞர்கள்,உலகத்து மாந்தரின் சுகவாழ்விற்காகச் சாதித்தவை பலப்பல. இச் சாதனைகள் யாவும் அறியாமையால் விவேகமற்றவர்களால் எதிர்க்கப்பட்டவையாகவும், புறக்கணிக்கப்பட்டவையாகவுமே இருந்தன என்பதை அறிஞர்கள் மறுக்கமாட்டார்கள்.

உலகமே ஓரினம் எனச் சொல்லளவில் கருதி நிற்கும் மக்கள் தாம் வாழ்ந்து பழகிப்போன குறுகிய நோக்கங்களிலிருந்தும், அந் நோக்கங்களுக்கு ஆதாரமாக அமைக்கப்பட்ட கட்டுக் கதைகளையும், ஆயிரம் ஆயிரம் சமுகங்களையும், மூடபக்தி காரணமாக ஆயிரம் தெய்வங்களையும் நம்பித் தம் சுதந்திரத் தன்மையை எய்த முடியாதவர்களாக-பகுத்தறிய முடியாதவர்களாகத் தடுமாறுகிறார்கள்.

இன்றும் இது போன்ற தடுமாற்றங்களால் மாந்தர்கள் இனம் இனமாகப் பிரிந்து கொள்கையின் பெயரால், கட்சிகளின் பெயரால் பலப் பிரச்சினைகளை உருவாக்கித் தமது வளர்ச்சிக்கே எல்லை கட்டிக் கொள்வதுடன் முன்னேற்றத்திற்கு வழிகாண முடியாதவர்களாகத் துன்புறுகிறார்கள்.

இப்பிரிவுக் கொள்கைகள் வளர்ந்ததால் மனிதன் மனிதனையே தாழ்த்தத் தொடங்கினான். போட்டி, போர், பகை முதலிய அழிவுகள் ஏற்பட்டன. மனிதன் இத்துடன் நின்று விடவில்லை. அவன் பிறரைக் கட்டி ஆள முயன்றான். தனிமனிதச் சுதந்திரத்தை அறிய மாட்டாத சூழ் நிலையைக் கொண்டான். அடங்கு முறைகளைக் கையாண்டான். இத்தன்மையால் அறிவுக் கண்களைக் கூட அழிக்க முயன்றான்.

கட்சிகள் தோன்றின. கட்சிக்குக் கட்சி கொள்கைகள் எழுந்தன. வகுப்புவாரியாக, இனவாரியாக, சாதிவாரியாக, மதவாரியாக, தொழில் வாரியாக மக்களினம் பிரிந்தது. இன்றைய வளர்ச்சியிலும் மனிதன் நிலையை முன் வைத்துப் பார்க்கும் போது, அவன் உலகாயுதத்தில் முன்னேடியாகக் கருதப் பட்டாலும், அறிவுப் பண்பாடுகளில் பின் தங்கியவனாகவே இருக்கிறான்.

### உணர்வு

பரிணாம வளர்ச்சியில் சீவராசிகள் மட்டுமன்று, பிரபஞ்ச தோற்றம் யாவுமே நிமிடத்துக்கு நிமிடம், விநாடிக்கு விநாடி, சிந்தனை செயல்களிலும், தோற்றத்திலும் பரிணாம வளர்ச்சிக்குட்படாமலில்லை. பரிணாம வளர்ச்சியின் காரணமாக நிர்மலமான பிரபஞ்சத்தில் ஏற்பட்ட வேகம் பலப்பலத் தோற்ற உணர்வுகளுக்கு மூலாதாரமாக இயங்குகிறது என்பதை அறிதல் சிறப்பு.

இப்படித் தோன்றிய சீவராசிகள் காலத்திற்குக் காலம் படிப்படியாகப் பரிணாம வளர்ச்சி பெற்றுத் தம்மைத் தாமே கிரகிக்கும் நிலையை எய்தின. இந்த நிலையைப் பல கோடி வருடங்களின் பின்னரே மனிதன் உணர்ந்தான் எனலாம்.

விலங்கினத்திலிருந்து பரிணாம வளர்ச்சியால் உணரும் தன்மையை அடைந்து-விலங்கினத்திருந்து மனித உருப்பெற்று வாழும் மனிதன் இன்னும் பூரண தெளிவை எய்தவில்லை எனலாம்.

மனிதப் பிறவியின் பின் ஏற்படுதல் யாது என அறிய முற்படுவோமானால், மனிதரில் பண்பட்ட மனிதராகவோ, அல்லது அதற்கும் பால் அருவான பொருளாகவோ ஆகுதலேயாம். இதனையே முகதி நிலை என ஆன்றோர் அருளியுள்ளனர். எல்லாம் மாய்யாவு [illegible] நிறைந்து விளங்கும் மாயாத உணர்வு ஒன்றென்பதை உணருங்கால் நமது பிறப்பின் பெருமையும், பரிணாம வளர்ச்சியின் விரிவும் புலப்படுகின்றன.

ஆனால் மனிதன், எப்படி வாழ்வது என்று முணுமுணுக்கிறானே யன்றி உலகத்துத் தோன்றியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய திறன் பெற்றவனாகவில்லை.

அகத்தெளிவு குன்றி, அறியாமை காரணமாக பிறர் அறிவால் தன்னைக்காத்துக் கொண்டு வெறும் உணர்வற்ற கருவியாகவே-வாழ்க்கை, வாழ்க்கை என்று கூவி-காலத்தை ஓட்டுகிறான். அகத் தெளிவற்ற காரணங்கள் பலப்பல துன்பந்தரும் பிரச்சினைகளை உருவாக்கிச் சமுதாய வளர்ச்சியையே

**சக்தீ அ. பாலையா**

தடுத்துப் பாழ்படுத்தி விடுகின்றன என்பதைச் சித்திக்கும் ஆற்றல் அற்றவனாக மனிதன் வாழ்கிறான் என்பதை ஒப்புக்கொள்வோர் கூட இல்லையென்று கூறிவிடலாம்.

மனிதன்,மனிதனாக வாழாமல், மீண்டும் மீண்டும் பின்னேக்கிச் செல்கிறான். செயற்கை யளவில் மனிதனின் வளர்ச்சி நின்று போகவில்லை. ஆனால் மனிதன் அவ்வக்காலப பரிணாம மாற்றங்களை அறியும் பக்குவநிலையை எய்த முடியாமல் இன்னலுக்காளாகி விடுகிறான்.

### மாற்றம்

எவ்வளவிற் கெவ்வளவு தனி மனிதததன்மை உயர்ந்துள்ளதோ,எவ்வளவிற்கெவ்வளவு அறிவும் பக்குவமும் விழைந்துருக்கிறதோ, அவ்வளவிற கவ்வளவு பரிணாம வளர்ச்சியில் ஒவ்வொரு சீவராசியும், ஏனவையும், மாறி மாறித் தொடர்கின்றன என்பதைக் கருத்தில் காணுதல் வேண்டற் பாலதாம்.

இவற்றிலிருந்து அறிவும், ஆற்றலும், மனித வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் பிரச்சினைகளை ஆய்ந்து அகற்றுவதற்கே என்பதைக் காண்கிறோம். ஒவ்வொரு தனிமனிதனும் தான் வாழும் சமூகத்தினதும் சமுதாயத்தினதும் அறியாமை எவை என அறிநதுஅதனாலேற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கமுயல்வதும் தன் கடனாகக் கொள்ளல் அவசியமானதாகும்.

சுயநலத்தை மட்டும் விரும்பி,பிறர் நலம்கருதாது வாழ்வதில் நாம்எந்தததியாகத்தையும் செய்தவராக மாட்டோம். எனவே எங்கெங்கே மக்கள் அறியாமையினால் நசுக்கப்படுகிறார்களோ அறியாமைக்கு இலக்காகித் துன்புறுகிறார்களோ, எங்கே வாழ முடியாது துடிக்கிறார்களோ, அங்கெல்லாம் அவர் துயர் படக்காரணமானவைகளை உணர்ந்து, அவர்களின் அச்சத்தையும், மடமையையும், மூடப் பழக்க வழக்கங்களையும்அகற்றி முன்னேற்றப் பாதையில் வழி நடாத்திச் செல்வதே தனி மனிதனின் கடமையாகும்.

அறிவாற்றல் மிக்க தனித்துவர்கள் ஒன்று பட்டால்சமுதாயம் தலை நிமிர்ந்து வாழ [illegible] கும். புதுமைகள் பலவனவாகத் தோன்ற இடம் விரியும்.

தனி மனிதனே உலகம் என்ற உணர்வு எழுமானால் தனி மனிதப் பிரச்சினையே உலகப் பிரச்சினை எனக்கருதுவோமானால், தனி மனித சுதந்திரமே உலக சுதந்திரமெனக் காண்போமானால் இந்தப் பிரபஞ்சம் யாவுமே தனித்தன்மை வாய்ந்த தொடர்புறவுகளைக்கொண்டதென்பதைக் கிரகித்துக் கொள்வது எளிதாகும்.

### அறிவுச் சுதந்திரம்

அறிவுச் சுதந்திரம் எங்கே கட்டுப்படவில்லையோ அங்கே பூரணத்துவம் ஒளிவிடுகிறது. உலகமே இவொருமையை அடைய வேண்டுமானால், ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒவ்வொரு குடும்பத்திலும், ஒருவன் தன்னையும் இயற்கையையும்ஒன்று கூர்ந்துநோக்க முயல்வானேயானால் அந்தச் சமுதாயமும், நாடும், அகமும், புறமும் ஒளிபெற்ற பண்புமிக்கப் பெருவாழ்வை-புதுவாழ்வைக் கொண்டதாகவும், உலகத்தின் வழிகாட்டியாக விளங்குவதாகவும் இருக்குமென்பதில் ஐயமில்லை.

அறிவுச் சுதந்திரமும், பொளாதாரச்சுதந்திரமும், பெருகும் வழிகளில் தனித்துவ அறிஞர்கள் தமது ஆற்றலைப் பிரயோகிக்கத் துணிவார்களேயானல் சுயஅறிவுச் சுதந்திரமும், பிறந்த பயனும் பெறற்கரிய இன்பமென உணர்வர். எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் குலம்" என்ற உயர்ந்த நோக்கம் சிறந்து நிலவும். மனித குலம், மாசற்ற தவ்ய நிலையானது என்பதும் தெளிவாகும், ஆதலின் சிறு பராயமுதலாகத் தனித்துவ அறிவை வளர்ப்பதில் ஊக்கம் காட்டுவோமாக. புதுமை உலகை எழுவிப்போமாக. அறியாமை அகற்றி ஒளி பெற்று உய்வோமாக.

---

## களுவாஞ்சிக்குடி சைவ மகாசபை

இம் மகாசபையின் 14வது வருடாந்தப் பொதுக் கூட்டம் சபைத் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் (பா. உ.) அவர்கள் தலைமையின் கீழ் வக்கினேஸ்வரர் ஆலய முன்றலில் நடைபெற்றது. நடப்பு ஆண்டுக்குரிய புது உத்தியோகத்தர்களாக பின் வருவோர் தெரியப்பட்டனர்:

காப்பாளர்கள் சைவப் புலவர் தேசிகமணி கா. அருணாசலம், திரு. க. சீனித்தம்பி, தலைவர்: சி. மூ. இராசமாணிக்கம், உப தலைவர்கள்: டாக்டர் பெ. செல்வரத்தினம், திரு. வி. சதாசிவம்பிள்ளை ஆசிரியர். செயலாளர்: திரு. கோபாலபிள்ளை பாக்கியராசா, உப செயலாளர்கள்: திரு. க. கந்தசாமி, திரு. ந. ஞானசூரியம். பொருளாளர்: திரு. வி. விசுவலிங்கம், உதவிப்பொருளாளர்: திரு. ந. இராமச்சந்திரன், பரிட்சாதிகாரி: திரு. க. அ. பாக்கியன், சமய வகுப்பு அதிபர்: திரு. வி. விசுவலிங்கம்.

பதினெருபேரைக் கொண்ட நிர்வாக சபையும், பதினறு பேரைக் கொண்ட சமய போதனை ஆசிரிய குழுவும் அமைக்கப்பட்டது.

---

## இலக்கிய உலகு

**-"வேதாளம்"-**

### பழையவர்கள்

ஈழத்திலக்கிய வுலகின் பழையவர்கள் எங்கே? அவர்களுடைய இலக்கிய வாக்கங்களை நாமினிமேல் படித்துச் சுவைக்கவே முடியாதா? இலக்கியவுலகினின்றும் விலகி அவர்கள் அஞ்ஞான வாசம் செய்ய வேண்டிய காரணம் யாதோ? இவ்வளவு தூரம் விரக்திமனப்பான்மை ஏற்படுவதற்கு ஈழத்திலக்கிய வுலகு அவர்களுக்கு என்ன துரோகம் செய்தது?

எழுதுவதனுல் பயனில்லை என்று எண்ணுகின்றார்களா? 'பயன்' என்பது பல அர்த்தங்களை இலக்கியத்தினைப் பொறுத்த மட்டிலுள்ளது. நமது முன்னவர்கள் எழுத்தினால் வாழ முடியும்; பணம் வருவாயாகக்கிடைக்கும் என்று நம்பி எழுத்துலகில் பிரவேசித்தவர்களல்லர். இந்திய எழுத்தாளர்கள்போன்று மூன்று பக்க மூன்றாந்தரக் கதைகளுக்கு ஐம்பது ரூபா சன்மானம் பெற அவர்கள் விரும்பி,ஆற்றலையும், பேப்பரையும், மையையும், தபால் முத்திரைகளையும், குடும்பத்தோடு இனிமையாகக் கழிக்க வேண்டிய பொழுதையும் விரயமாக்கியவர்களல்லர்.

எழுத்தின் பயனாகப் புகழைவிரும்பினார்களா?

—அவ்வாறிருக்கலாம். ஆரம்ப காலத்தில் எழுத்துலகில் தலையை விடும் போது அச்சில் பெயரைப் பார்க்க விழையும் குழந்தைத்தனமிருந்திருக்கலாம். புகழை விரும்பாதவர்கள் யார்? இந்த தமிழுலகம் அவர்களுக்குத் தேவையான கௌரவத்தை அளிக்கவில்லையா? இலக்கியத் தமிழணங்கை ஈழத்தமிழகமும்தன் இலக்கிய ஆரங்களால் அலங்கரித்திருக்கிறது; அலங்கரித்து வருகிறதென்பதை நிலைநாட்டத்தான் ஈழத்தெழுத்துலகப் பழையவர்கள் எழுத்துலகில் நுழைந்தார்கள். அதுதான் அவர்கள் எதிர் பார்த்த பயன். அந்தப்பயன் அவர்களுக்கு கிடைக்க வில்லையா?

எவருமே அப்படிக்கூறி விடமுடியாது. இந்தியத் தமிழ் எழுத்தாளர்களில் முந்நூறு பேர் இருந்தால், இருபது பேர் தமிழிலக்கியத்தை அலங்கரிக்கக் கூடிய இலக்கியம் சமைத்தவர்கள்; ஆனல்,ஈழத்தில் ஐம்பது எழுத்தாளர்கள் இருந்தால், நிச்சயமாகப் பததுப் பேர் நன் முத்துக்கள்.

—அவர்கள் இன்று துறவறம் பூண்டிருக்கலாமா? நேரமின்மை யிருக்கலாம்; விரக்தி மனப்பான்மை இருக்கலாம்; குடும்பக் கவலைகள் மலைபோலிருக்கலாம். ஆனல், இலக்கிய அன்னையை மறந்து இருக்காதீர்கள். ஒரு மாதத்தில் ஒரு சிறுகதையாவது, ஒரு கவிதையாவது, ஒரு கட்டுரையாவது எழுதுயளியுங்கள். குடும்பத்தவர்கள் துறவறம் பூணக்கூடாது.

—எழுதுவீர்களா? எழுவீர்களா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனித சக்தி-உபகரணம்-கைத்தொழில்

ஒருவன் செய்யும் வேலையில் அவன் சக்தியை அதிகரிப்பதே உபகரணத்தின் முக்கிய நோக்கம். 'உப' என்ருல் சமீபமென்றும், 'கரணம்' என்ருல் அவயவம் என்றும் பொருள். அதாவது கருவி நமது அவயவத்தின் விஸ்தரிப்பு என்று பொருள். உபகரணத்தை மனிதன் தானே செய்கிருன்- மிருகமல்லவே!

சிங்கம் தன் பற்களால் உடைக்க முடியாததை எதைக் கொண்டும் உடைக்க முடியாது. நகங்களால் கிழிக்கமுடியாததை அதனுல் கிழிக்கவே முடியாது. ஆனுல் மனிதன் சுத்தியலால்உடைக்கிருன்; கத்தி கொண்டு கீறுகிருன். எனவே மனிதனின் சக்தியை அதிகரிப்பதுவே உபகரணமாகும்.

அந்தஉபகரணம் எனக்குத் தேவையில்லையென்று கூறுபவன் முட்டாள். இயந்திரத்தை மறுப்பது முட்டாள்தனமாகும். நான் சுத்தியலால்உடைக்கிறேன்என்ருல், என்னுடைய சக்திக் குறைவைப் பூர்த்தி செய்து கொள்ளுகிறேன் என்று பொருள் கொள்ளக்கூடாது.

கண்ணுல் பார்க்கஇயலாத தூரப் பொருளை 'பைனுகுலரின்' உதவியால் பார்க்கிரேம். அதாலும் கண்டு கொள்ள முடியாததை 'டெலஸ்கோப்' கொண்டு பார்க்கிருேம். நுண்ணிய பொருளைக்காண 'மைக்ராஸ்கோப்' பை உபயோகிக்கிரேம். இவ்வளவும் செய்ய

## ஆச்சார்ய தர்மாதிகாரி

நமக்கு கண் வேண்டும். அதாவது கருவி ஒரு பொழுதும் அவயவத்தின் இடத்தை அபகரித்துக் கொள்ளக்கூடாது. ஆகவே எமது சக்தியை உபயோகிப்பதில் நாம் கையாள வேண்டிய முறை:

1. மனித சக்தி,
2. ஜீவ சக்தி,
3. இயற்கையின் சக்தி,
4. உபகரண சக்தி.

அவயவத்தின் சக்தியை உபகரணம் எடுத்துக்கொள்ளுமானுல் அது உபகரணமாகாது. பொருள் துய்ப்பிற்குரியது. துய்ப்பு, மனிதனின் உரிமைஇவையாவும்நிலைத்து நிற்க மனிதன் நிலைத்து நிற்க வேண்டும்,

தொழிற் புரட்சியின் போது கார்ல் மார்ச்ஸ் இயந்திர உபயோகத்தை எதிர்த்தார். ஏனெனில் இதனுல் மனிதனின் மகத்துவம் குறையும் என்ற பயம் அவருக்கு இருந்தது. இன்றும் பெரிய தொழிற்சாலைகளில் நவீன இயந்திரங்களை உபயோகிப்பதால் ஆட்குறைப்பு ஏற்பட்டு விடும்என்று கொம்யூனிஸ்டுகள் அதை எதிர்க்கிருர்கள். இது சித்தாந்தமல்ல; விவேகம். எனவே எல்லாவற்றையும் தார்மீக சித்தாந்தமாக்கி விடாமல் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நமக்கு முக்கியமானது மனிதனின் மகத்துவம் குறைந்து விடக் கூடாதென்பதே. அப்படி உபகரணம் அமையுமானுல், அது மின்விசை கொண்டு இயங்கினுலும், அதை நாம் மறுப்பது சரியல்ல என்று தோன்றுகிறது.

—சர்வோதயம்

# 'லவகுசா' 'நீதிக்குப்பின் பாசம்' இலவச குறுக்கெழுத்துப் போட்டி

சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினர் அளிக்கும் திரைவிருந்துகளான 'லவகுசா' என்ற வர்ணப் படத்தையோ—அல்லது 'நீதிக்குப்பின் பாசம்' என்ற படத்தையோ இலவசமாகப் பார்ப்பதற்கு இப்போட்டி மூலம் திரைப்பட இரசிகர்களுக்கு ஓர் வாய்ப்பு ஏற்படுகிறது. இப்போட்டியில் கலந்துகொள்வதற்கு எதுவிதமான கட்டணமும் செலுத்தப்படவேண்டியதில்லை. சுதந்திரன் பத்திரிகை நிறுவனத்தினதும், சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினதும் ஊழியர்களையும் அவர்களுடைய நேரடி உறவினர்களையும் தவிர்ந்த ஏனையோர் இப்போட்டியில் தாராளமாகக் கலந்துகொள்ளலாம்.

சுதந்திரன் வாசகர்களுக்கான இப்போட்டியில் பங்குபற்றி வெற்றிபெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினரே பரிசுகளை வழங்க ஒப்புதல் அளித்துள்ளனர்.

**விதிகள்:**

1. சுதந்திரனில் விசேடமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் 'கூப்பன்'களிலேதான் விடைகள் நிரப்பி அனுப்பப்பட வேண்டும்.
2. ஒருவர் ஒரே உறையில் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். ஆனுல் ஒவ்வொரு விடையுடனும், சினிமாஸ் லிமிட்டெட்டாரின் படங்களைத் திரையிடும் படமாளிகைகளில் படம் பார்த்த நுழைவுச்சீட்டின்அடிக்கட்டை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உறையின் மேல் போதுமான தபால் முத்திரைகள் ஒட்டப்பட்டிருத்தல் அவசியம்.
3. முழுக்கட்டங்களும் நிரப்பப்படாத விடைத்தாள்கள் நிராகரிக்கப்படும்.
4. போட்டி விடயமாக சுதந்திரனுடனே சினிமாஸ் நிறுவனத்தாரிடமோ எதுவித கடிதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது.
5. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

**பரிசுகள்**

முற்றிலும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விடைக் கூப்பன்களிலிருந்து தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரால் பரிசுக்குரிய விடைகள் பொறுக்கப்படும். முதலாவது எடுக்கப்படும் விடைக்கு முதல்பரிசும், ஏனைய பரிசுகள் முறைப்படியும் வழங்கப்படும்.

**1 வது பரிசு—6 மேல்வகுப்பு டிக்கட்டுகள்.**

**2 வது பரிசு—4 மேல்வகுப்பு டிக்கட்டுகள்.**

**3 வது பரிசு—3 மேல்வகுப்பு டிக்கட்டுகள்.**

மற்றும்

**3 ஆறுதல் பரிசுகள்—ஒவ்வொன்றும் 2 மேல்வகுப்பு டிக்கட்டுகள்விதம் வழங்கப்படும்.**

**முடிவுத் திகதி 20-8-65**

**29-8-65 சுதந்திரன் இதழில் முடிவுகள் வெளியாகும்.**

விடைக்கான கூப்பன் 13ம் பக்கத்தில் உள்ளது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை,
சுதந்திரன்,
த. பெ. இல. 1183,
கொழும்பு.

உறையின் இடது பக்க மேல் மூலையில் 'லவகுசா' 'நீதிக்குப்பின் பாசம்' இலவசப்போட்டி என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை.

## அட்லாய் ஸ்டீவன்சன் மறைந்தார்



அமெரிக்க நாட்டின் உயர்தர ராஜதந்திரியான திரு. அட்லாய் ஸ்டீபன்சன் கடந்த 14ம் திகதி புதன்கிழமை லண்டனில் திடீரெனக் காலமானுர்.

அமெரிக்க அரசியலில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக உழைத்து வந்த அரசியல் மேதையான திரு. ஸ்டீபன்சன் ஐ. நா. வின் அமெரிக்க ஸ்தானிகராவர். அவர் இறக்கும் போது 65 வயதாகிறது.

உலக விவகாரங்களிலும் அமெரிக்க நாட்டின் கொள்கை விளக்கங்களிலும் உரை நிகழ்த்தும் போதெல்லாம், தமதுநகைச்சுவை பொதிந்த விமர்சனங்களால் சகலரையும் கவரக்கூடியவராக திரு. ஸ்டீவன்சன் திகழ்ந்தார்.

கலிபோர்னியாவிலுள்ள லொஸ்ஏஞ்சல்ஸில் 1900-ம் ஆண்டு பெப்ரவரி 5-ம் திகதி பிறந்த திரு. ஸ்டீவன்சன் உலகளைத்துமுள்ள நாடுகளுக்கும் சென்று பல அரசியற் தலைவர்களுடனும் தொடர்பு கொண்டிருந்துள்ளார்.

பள்ளிப்படிப்பின் போதே கல்லூரியில் வெளியான தினசரிப் பத்திரிகையின் ஆசிரியராகவும், பின்னர் வேறோர் தினசரியின் ஆசிரியர்களுள் ஒருவராகவும் திகழ்ந்துள்ளார். மத்திய ஐரோப்பாவிலும்ருஷ்யாவிலும்பத்திரிகை நிருபராகப் பணியாற்றிய பின்னர் 1926-ல் சட்டத்துறையுள் பிரவேசித்தார்.

பிரபலமான ஏழு புத்தகங்களை எழுதியதோடல்லாமல் பல பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் கட்டுரைகள் வழங்கியுள்ளார். பல பல்கலைக்கழகங்களும் இவருக்கு கௌரவப்பட்டங்களை வழங்கியிருக்கின்றன.

1952லும் 56லும் அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக ஜனுதிபதி தேர்தலில் போட்டியிட்டு திரு. ஸ்டீபன்சன் தோற்றுள்ளார்.

மூன்று ஆண் குழந்தைகளின் தந்தையான திரு. ஸ்டீபன்சன் 1949ல்தமது மனைவியிடமிருந்து விவாகரத்துப் பெற்ருலும் மீண்டும் மணம் முடிக்க வில்லை.

ஜெனிவாவில் நடந்த ஒரு மாநாட்டுக்குச்சென்றுதிரும்புகையில் திரு. ஸ்டீபன்சன் லண்டனில் தங்கியிருந்தார். திடீரென ஏற்பட்ட மார்பு நோய் அவருடைய உயிரைக் குடித்தது. வியாழக்கிழமை அவருடைய உடல் வாஷிங்டனுக்குக் கொண்டு வரப்பட்டது. கடந்த திங்கட்கிழமை இல்லியானிஸ் மாகாணத்திலுள்ள புளுமிங்டன் நகர்ப்புறத்திலிருக்கும் குடும்ப மயானத்தில் ஸ்டீபன்சனின் உடல்நல்லடக்கம் செய்யப்பட்டது. ஜனுதிபதி ஜோன்சன் தமது குடும்பத்தாருடன் இறுதி மரியாதைகளில் ஏனைய பல தேசப் பிரதிநிதிகளுடன் கலந்து கொண்டார்.

## நினைப்பும்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

அவச் சொல்லைத் தாங்க மாட்டாமல்தான் சரவணையார் அப்படி கூனிக் குறுகி எலும்போடு எலும்பாகி விட்டார். எந்தச் சாந்தியை வாழ்க்கைக்கு உதவாதவள் என்றேனே அந்தச் சாந்தியையே என் வாழக்கைக்கு துணைவியாக்கிக் கொள்வதென தீர்மாணித்தேன்.

இரண்டு வாரத்தால் எங்கள் திருமணம் எந்தவித ஆடம்பரமுமின்றி செல்வச்சந்நிதியில் நடைபெற்றது. உளத்தால் தாக்குண்டிருந்த சரவணையார் சாந்தியின் திருமணத்திற்குப் பிறகு தடிபிடித்து எழுந்து உலாவுகிருர். அந்த நிலையில் வேறு எதைச் செய்தாலும் என் மனச் சாட்சி திருப்திப் பட்டே இருக்காது......'

செயற்கரிய ஒன்றைச் செய்துவிட்ட மூர்த்தியைப் பார்த்தேன். பூரண திருப்தி பொலிவு பெற்ற முகத்தில் மின்ன தென்றலைச் சுவைத்துக் கொண்டிருந்தார். எனது மனங் கனிந்த ஆசிகளை சமர்ப்பித்துவிட்டு மாடிப்படிகளால் இறங்கினேன்.

(யாவும் கற்பனை)

## கதிர்காம யாத்திரை

கொழும்பு விவேகானந்த சபையினர் வழமை போல் இந்த வருடத்திலும் கதிர்காமத்துக்கு யாத்திரை செய்யும் சபை உறுப்பினர்களுக்கும் சபை அனுதாபிகளுக்கும் தகுந்த ஏற்பாடுகள் செய்து வருவதாகத் தெரிகிறது.

ஆகஸ்ட் மாதம் 1-ம் திகதி காலை 6 மணிக்கு, சபையினர் ஏற்பாடு செய்துள்ள பஸ் வண்டி கொழும்பிலுள்ள சபை அலுவலகத்திலிருந்து புறப்படும் என்றும் 4-ம் திகதி காலை கதிர்காமத்திலிருந்து, கொழும்பு புறப்படும் என்றும் தெரிய வருகிறது. இந்த யாத்திரையில் பங்குகொள்ள விரும்புபவர்கள் விவேகானந்த சபைப் பொதுக் காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## வகுப்பு வாதம் இல்லாத நாடு

'உலகிலேயே உயர்ந்த இனம் தாங்கள் தான் என்ற எண்ணம் இப்பொழுது ஜெர்மனியரிடம்கிடையாது. பெர்லினில் சாதாரண மக்கள் பலரை நான் சந்தித்தேன். அவர்களிடம் இனபேத, வகுப்புவாத எண்ணம் இம்மியும் கிடையாது. ஆபிரிக்கர்களாகிய எங்களையும் சமஉரிமையுடையவர்களாகவே கருதி கௌரவிக்கின்றனர்". என்று மாலி தேச எழுத்தாளரான சிதிக் டெம்பலே பெர்லினில் ஒரு பத்திரிகை நிருபரிடம் கூறினுர்.

அவர் ஜெர்மனியில் நடைபெற்ற உலக எழுத்தாளர் [illegible] இன்னும் [illegible]திருந்தார்.

## காரைநகர் சைவ மகாசபை ஆண்டு விழா

காரைநகர் சைவ மகாசபை 50-ம் ஆண்டு நிறைவு விழா திரு. ஆ.மு. கந்தையா தலைமையில் 25-ம் திகதி நடைபெறுகிறது.

மாலையில் திரு. இ. நாகலிங்கம் அவர்களின் நினைவு விழாவும் நடைபெறும். திரு. த. முத்துசாமிப்பிள்ளை, பண்டிதர் சு. அருளம்பலம், திரு. க. சபாபதி, திரு. ஆ.ச. கதிரவேலு ஆகியோர் பேசுவார்கள். திரு. நாகலிங்கத்தின் உருவப் படத்தை திரு. ஏ. விசுவசிங்கம் திறந்து வைப்பார்.

## உத்தியோக...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ப் பிரதிநிதிகள் அரசாங்கத்திற் சேர்ந்திருப்பதால், மொழிக்கொள்கையின்மீது அரசாங்கத்திற்கெதிராக பலவிதமான பொய்ப்பிரசாரங்களைச்செய்வதற்கு எதிர்க்கட்சிக்கு இலகுவாகியுள்ளது. ஆதலின் உத்தியோகமொழிச் சட்டத்துக்கு மாருக பேசுவதிலிருந்தோ, செயலாற்றுவதிலிருந்தோ தமிழ்ப் பிரதிநிதிகள் விலகி நின்ருல், எதிர்க்கட்சி அரசாங்கத்தின்மீது ஏவிவிடும் எதிர்ப்புக்களை அவர்களையேதிருப்பி அடிக்குமென்பது திண்ணம்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பானில்

# திரைப்படங்களுக்கு மதிப்புக் குறைந்தது

## நிர்வாண நடனங்கள் மலிந்ததே காரணமாம்

## 295 தியேட்டர்கள் ஒரே வருடத்தில் மூடு விழா

ஜப்பானில் திரைப்பட இரசிகர்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. இதனால் தியேட்டர்களுக்கு வருமானம் குன்றி விட்டது. பல தியேட்டர்கள் மூடப்பட்டு விட்டன. கடந்த ஒரே வருடத்தில் மொத்தம் 295 தியேட்டர்கள் மூடப்பட்டு விட்டன.

இதற்கு இரு காரணங்கள் கூறப்படுகின்றன. பெருகி வரும் நாடகக்கலையில் மக்கள் பேரார்வம் காட்டுகின்றனர். அநேகமாக மேடைகளில் இள மங்கையர்களை நிர்வாண கோலத்தில் நாட்டிய மாட விடுவதையே இப்பொழுது இரசிகர்கள் பெரிதும் விரும்பிப் பார்க்கின்றனர்.

'இசை மண்டபம்' என்ற பெயரில் எழும் தியேட்டர்களில் பெரும் பாலும் நிர்வாண நடனநாடகங்களையே மேடையேற்று கின்றனர். தினசரி இக் காட்சிகள் நகரின் பல பாகங்களிலும் பல காட்சிகளாகக் காண்பிக்கப் படுவதால் மக்கள் அங்கேயே கூட்டம் கூட்டமாகச்சென்று விடுகின்றனர்.

அடுத்தது, நாட்டில் பரவலாகப் பெருகி விட்ட 'டெலிவிஷ'னும். ஜப்பானில் ஒவ்வொரு வீட்டிலும் டெலிவிஷன் இருப்பதனால், பொழுது போக்க, தியேட்டர்கள் போன்ற வேறுஇடங்களுக்குச் செல்ல மக்கள் அதிகம் விரும்புவதில்லை. டெலிவிஷன் நிகழ்ச்சிகளில் திரைப்படங்களும் காண்பிக்கப்படுவதனல் வீட்டிலிருந்த படியே படங்களையும் டெலிவிஷனில் கண்டு களிக்கின்றனர்.

ஜப்பானிய நகரங்களில் திரையிடப்படும் படங்கள் இங்கு போன்று தினசரி சில காட்சிகள் என்ற ரீதியில்காண்பிக்கப்படுவதில்லை. காலை முதல் நள்ளிரவு வரை ஒரே படம் திரும்பத் திரும்ப ஒரே தியேட்டரில் காண்பிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும். காலையில் படம்பார்க்க நுழைவுச் சீட்டை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றல் தொடர்ந்து ஓடும் படத்தை திரும்பத்திரும்பப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு,சாமம் 2 மணிக்கும் திரும்பி வரலாம். மேலதிகக் கட்டணம் எதுவும் கிடையாது.

சினிமாத் தியேட்டர்களில் இருக்கைகளை விட நின்று படம் பார்ப்பவர்களுக்கே அதிகமான இடம் ஒதுக்கப் பட்டிருக்கும். நாற்காலிகள் காலியாகும் வரை நின்றே படத்தை அனுபவிக்கலாம். காலியான நாற்காலிக்கும் அதிகமானபோட்டியும்இருக்காது. மற்றவர்களுக்காக விட்டுக்கொடுக்கும் பண்பிலே சிறந்த நாடு ஜப்பான்.

## எமது விமர்சனம்

## நீதிக்குப் பின் பாசம்

பாசம் பொல்லாதது. பாசத்துக்குக் குறுக்கே எதுவுமே தடைக் கல்லாக நிற்க முடியாது. ஆனால் தேவர் தயாரித்து, சினிமாஸ் திரைகளில் காட்சி தரும் 'நீதிக்குப் பின் பாசம்' பாசத்தைவிட நீதிதான் முதன்மையான இடத்தைப் பெறுகிறது என்பதை வலியுறுத்துகிறது. சாதாரண வாழ்க்கை நடைமுறையில் சிக்கலான இத்தத்துவத்தை விளக்க கதையினைத் திறம்பட அமைத்திருக்கிறார்கள்.



வீட்டிலே வளரும் முறைப் பெண்ணை அவன் தன் சகோதரியாகக்கருத, அவளோ அவனை மனதால் வரித்து விடுகிறாள். அவனுடைய தந்தையின் ஆணையும் அனாதையான அவளை அவனுக்கே உடைமையாக்கிவிடுவது தான். அவனோ கிராமத்திலே வளரும் அழகி ஒருத்தியிடம் தன் உள்ளத்தைப் பறி கொடுத்துத் தவிக்கிறான். தனக்குத் தன் அத்தான் கிடைக்க மாட்டான் எனக் கண்ட அவள் தவறி விழுந்து படுத்தபடுக்கையாக- ஊனனாகாலுடன் வேதன்படுகிறாள். முறைப் பெண்ணைக் கட்ட வேண்டியதே நீதியாகவும், காதலியின் பாசத்தைக் கைவிட வேண்டியதே அவன் நிலையாகவும் ஆகிறது.

தந்தையார் போலீஸ் இன்ஸ்பெக்டர். அவரால் கைது செய்யப்பட்ட டாக்டரான அவர் மனைவி- அவனின் தாய்— கொலையாளியாக கைதிக் கூண்டில் நிற்கிறாள். அண்ணன் வழக்கை நடாத்தும் அரசாங்க வக்கீல். அங்கே குடும்ப பாசம், நீதிக்குக் கட்டுப் பட்டுக் கிடக்கிறது. கடமை உணர்ச்சியுடன் கூடிய தந்தைக்கும், வழக்கை நடாத்தும் அண்ணனுக்கும் இடையின் தாயைக் கொலையாளியல்ல என்று நிரூபிக்கவேண்டிய கடமை வக்கீலான அவனுக்கு. இங்கே கூட நீதிக்கும் பாசத்துக்கும் இடையில் பெரும் போராட்டம்.

இரு கட்டங்களில் நீதியையும் பாசத்தையும் மோத விட்டு, இரண்டுமே வெற்றி பெற வைக்கும் கதை—திறமையாக உருவாக்கப்பட்டு பார்ப்பவரைப் பரவசத்திலாழ்த்துகிறது.


புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., சரோஜாதேவி இருவரும் தோன்றும் கட்டங்கள் சுவைபட அமைக்கப்பட்டிருக்கின்றன. எம். ஆர். ராதா கிராமப்புறத்தானக, இப்படத்தில் புதுமையான மனிதராகக் காட்சி தருகிறார். நம்பியார்தான் இப்படத்தின் வில்லன், ரங்கராவ் இன்ஸ்பெக்டராகவும், கண்ணாம்பா அவர் மனைவியாக-டாக்டராக வருகிறார். இவ்விரு தம்பதிகளுக்கும் அசோகனும் ராமச்சந்திரனும் மக்கள்.

சுவைபட எழுதப்பட்ட கவிஞர் கண்ணதாசனின் பாடல்களுக்கு மகாதேவன் தரமான மெட்டமைத்துள்ளார். திருமுகத்தின் டைரக்ஷனில் உருவான இப்படம் தேவர் தயாரிப்புகளில் தனித்துவம் பெற்று விளங்குகிறது. சண்டைக் காட்சிகளும் அளவாக விருப்பதனுலும் காட்சிக்குக் காட்சி விறுவிறுப்புடன் அமைந்திருப்பதனுலும் சகலருக்கும் 'நீதிக்குப் பின் பாசம்' படம் அருமையான விருந்தாகும்.

-நாதன்

### எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம்

கண்டியில் எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. கே. என். ராஜா, பூ. அரசன் ஆகியோர் இதன் அமைப்பாளர்களாகக் கடமை யாற்றுகின்றனர்.




## லவகுசா நீதிக்குப் பின் பாசம்

### இலவசக் குறுக்கெழுத்துப் போட்டி விடைக் 'கூப்பன்'

—இவ்விடத்தில் கத்தரிக்கவும்—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ரா | 2 ம | ச் | 3 ச | ந் | தி | 4 ர | 5 ன் |
| 6 க | | ■ | | ■ | ■ | 7 | ண |
| 8 வா | | ■ | 9 | ள | 10 | ■ | |
| ■ | பி | ■ | தே | ■ | 11 மி | 12 | கு |
| 13 வ | ஷே | ■ | | ■ | | ரு | |
| | | 14 | ■ | ■ | வா | மு | ல |
| 15 க | | | ன் | ■ | ■ | | |
| | ■ | 16 அ | ற் | | த | | ■ |

முழுப் பெயர்........................................

முகவரி........................................

........................................

........................................

லவகுசா அல்லது நீதிக்குப் பின் பாசம் திரையிடப்பட்டுள்ள, நீங்கள் படம் பார்க்க வசதியாக உள்ள.........

........................ தியேட்டரின் பெயர்

........................ ஊர்

........................ கையொப்பம்

.........இவ்விடத்தில் கத்தரிக்கவும்.........

### இடமிருந்து வலம்

1. லவ, குசன் இருவருக்கும் தந்தையாகியவருடைய பெயரைத் தாங்கியவரே 'நீதிக்குப்பின் பாசம்' படத்தின் கதாநாயகனைத் தோன்றுகிறார்.

6. இராமருடைய மிகச் சிறந்த நண்பர்களுள் ஒருவரான குகன் உருமாறி, சிதைந்து நிற்கிறார்.

7. இராமனுடைய நல்ல—குறைந்து விட்டது.

8. தன் அருமை நண்பனைப் படம் பார்க்கச் செல்வதற்கு இப்படியும் ஒருவன் அழைப்பான்.

9. சீதைக்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு.

11 மேலதிகமாக உள்ள பொருள் மாறி விட்டது.

15. இராமாயணத்தைத் தமிழில் பாடிய கவிச்சக்கரவர்த்தி இவர்.

16. 'லவ குசா' படத்தைப் பார்த்தவர்கள் இப்படிப் பலமுறை கூறிப் புகழ்ந்தார்கள். நீதிக்குப் பின் பாசத்தைப் பார்த்ததும் இப்படியே தான் கூறுவார்கள்.

### மேலிருந்து கீழ்

1. இராமனை இப்படியும் அழைப்பார்கள்.

2. லவகுசா வரலாறு இராமருடைய — வைபவத்துடன் தான் ஆரம்பமாகிறது.

3. 'நீதிக்குப் பின் பாச'த்தில் தோன்றும் நடிகை.

4. இராமன்—வம்சத்தைச்சேர்ந்தவன்.

5. இராமனின் தம்பி தலை கீழாக நிற்கிறார்.

10. இராமாயணத்தை முதலில் எழுதியவரும் லவகுசரை வளர்த்தவருமான இந்த குரு சிரேஷ்டர் தலை கீழாக நின்று தவம் புரிவதற்கான காரணம் புரியவில்லை.

12. 'நீதிக்குப் பின் பாசம்' படத்தின் இயக்குநர் இவர்.

13. சுப்பிரமணிய பாரதியாரை இத்தலையவர் என்று கூறுவார்கள்.

14. சீதையின் பரிதாபமான நிலையை எண்ணி, அவளைப் பலர் தலைகீழாகவுள்ள இந்தச்சொல்லால் வர்ணிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறித்தவ இலக்கியம்

# தேன் சொட்டும் தேம்பாவணி

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' எனவும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனவும் 'எனைத்தானும் நல்ல கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்' எனவும் மிசப்பரந்த மனப் பண்பினைக்கொண்ட மாபெரும் மக்களைத் தோற்றுவித்த தமிழகமும் தமிழ் மொழியும் தனிச் சிறப்புடையனவாகும். வேறு எந்நாட்டிற்கும் எம்மொழிக்கும் இல்லாத சிறப்பு—ஆற்றல் இவற்றிற்குண்டு.

### பக்தியின் மொழி தமிழ்

மனித உள்ளத்தைப் புனிதப்படுத்தும் மாண்புமிக்க எண்ணற்ற பக்தி இலக்கியங்கள் தமிழ்மொழியில் சிறந்து காணப்படுவதுபோல் உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை.

வணிகத்தின் மொழி ஆங்கிலமென்றால்;—சட்டத்தின் மொழி இலத்தீன் என்றால்—தூதின்மொழி பிரான்சு என்றால்—இசையின் மொழி கிரேக்கமென்றால்—தத்துவத்தின்மொழி செருமானியம் என்றால்—உலகிலே பக்தியின்மொழி தமிழாகும் எனத் தவத்திரு. தனிநாயக அடிகளார் தாம் எழுதியுள்ள 'தமிழ்த்தூது' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு சமயக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டிருந்த தமிழ்நாடு அவ்வவ் சமயங்களின் கருத்துக்களைத் தனது மொழியாம் தமிழ்மொழியில்வெளியிட இடம் கொடுத்தது.

சைவர்களும், வைணவர்களும், சமணர்களும், புத்தர்களும், கிறித்தவர்களும், இசுலாமியர்களும் தங்கள் சமய இலக்கியங்களைப் படைத்து மகிழ்ந்த ஒரே உலகமொழி தமிழேயாகும். தமிழ்மொழி போல் பழம் பெருமை வாய்ந்த இலத்தீனுக்கோ, வடமொழிக்கோ இவ்வாறான சிறப்பு இல்லை எனலாம்.

பரிபாடலில் முருகவணக்கம்—திருமால் வழிபாடு என்பன காணப்படுகின்றன. பத்துப்பாட்டில் முருகனின் பெருமை அழகு என்பவற்றைக்கூறும் திருமுருகாற்றுப் படையும் ஒன்றாகும்.

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தில் சிவன், திருமால், அருகன் என்போரின் பெருமையும்—அழகும்—சிறப்பும் காட்சிதருகின்றன. சாத்தனாரின் மணிமேகலை புத்தரின் பெருமையையும், திருத்தக்க தேவரது சீவக சிந்தாமணி அருக சமயத்தின் அழகினையும், கல்லாடனார்யாத்த கல்லாடம் சைவ சமயத்தின் சிறப்பினையும் கூறும் இலக்கியங்களாக விளங்குகின்றன.

### யேசு பெருமானின் வாக்கு

இந்த வரிசையில் பிற்பட்டு வந்த கிறித்தவ சமயமும் இடம்பெறுகின்றது. கிறித்தவ சமயத்தில் உள்ளவர்கள் தங்களின் வழிபாட்டு முறை—கிறித்துவின் பெருமை—இயல்பு—சிறப்பு என்பவற்றை எடுத்துக்கூறும் பொழுது தமிழன்னைக்குச் சிறந்த தொண்டு செய்துள்ளனர்.

'உலகம்எங்கும் போய் மக்களுக்கு எனது மொழியைப் பரப்புங்கள்' (மாற். 16 அதி: 6 வச) எனும் யேசுநாதரின் வாக்கிற்கேற்ப அவரின் சீடர்கள் எருசலேம் நகரை விட்டு உலகின் பல பாகங்களுக்கும் சென்றனர். அதன்படி யேசுநாதரின் சீடர்களில் ஒருவராகிய தூயதோமஸ் என்பவர் கி. பி. 52ம் ஆண்டில் இந்தியா வந்தார். இந்தியாவின் மேலைக் கடற்கரையோரங்களில் யேசுவின் கொள்கையைப் பரப்பிய பின்பு தமிழ் நாட்டை அடைந்து இன்று தமிழ்நாட்டின் தலைநகராக விளங்கும் சென்னையில் உள்ள மைலாப்பூரில் வாழ்ந்து சமயத்தைப் பரப்பினார். இவரின் போதனைகளைப் பிடிக்காத சிலர் கி. பி. 72ம் ஆண்டில் இவரைக் கொலை செய்தனர். இதன்பின் தமிழ்நாட்டின் தென் பகுதியாகிய குமரி, தூத்துக்குடி போன்ற இடங்களில் ஓரளவு கிறித்தவ மதம் பரவி இருந்தாலும், கிறித்தவ சமயத்தார் தமிழ் மொழிக்கும் தமிழ்

**புலவர் ஏ. டபிள்யூ அரியநாயகம்**

நாட்டிற்கும் தொண்டு செய்யத் தொடங்கியது கி. பி. 15ம் நூற்றாண்டிற்குப் பின்தான்.

### வீரமாமுனிவர்

தமிழ் மொழிக்குத் தொண்டாற்றிய கிறித்தவ அறிஞர்களில் மேலை நாட்டினரே முதலிடம் பெறத்தக்கவர்கள்.

மேலை நாட்டறிஞருள் தலைசிறந்தவர் வீரமாமுனிவர் ஆவார். இத்தாலி நாட்டிலுள்ள காசுதிக்கிளியோன் எனும் ஊரில் பிறந்த இவரின் இளமைப் பெயர் கான்சுடன்டைன் யோசெப் பெசுகி என்பதாகும்.

1698ல் துறவியான இவர் 1711ல் தமிழ் நாட்டிற்கு வந்து சேர்ந்தார். தமிழ் நாட்டில் தம் சமயப்பணி வெற்றி பெறத் தமிழ் அறிவு இன்றியமையாதது என அறிந்தார். எனவே தமிழரோடு தமிழராய் வாழ்ந்து தமிழை வளர்த்தார்-வசன நடைக்கு வழிகாட்டி வான் புகழ் படைத்தார்-இலக்கண நூல்கள் இயற்றி ஏற்றமடைந்தார். தமிழ் உரை நடைக்கு வளர்ப்புத் தந்தையாராய் உள்ள முனிவர்-தமிழ் அகராதிக்குத் தனித் தந்தையர் ஆனார்.

தேம்பாவணி எனும் பெருங் காப்பியம் இயற்றிக் காப்பியக் கவிஞர் ஆனார். 3 காண்டங்களையும் 36 படலங்களையும் 3615 பாடல்களையும் கொண்ட இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடலும் கற்பார்க்கு இதயத்தில் இன்பத்தேனைப் பாச்சுகிறது. தென்றலின் சுகமும், தேன்நிலவின் குளிர்மையும் பாடல்கள் பலவற்றிலும் நிறைந்து இருப்பதால் இதனைத் தேன் சொட்டும் தேம்பாவணி என்பர் அறிஞர்.

### தேம்பாவணி

இது யேசுநாதரை வளர்த்த தந்தையாகிய தூய சூசை மாமுனிவரின் வரலாற்றைக் கூறுவதாகும்.

யேசுநாதருக்குப் பன்னிரெண்டு வயது நடக்கின்ற பொழுது புனித சூசையப்பரும் தேவதாயாரும், யேசுநாதருடன் எருசலேம் திருக்கோவிலில் நடைபெற்ற விழாவிற்குச் சென்றனர். திருக்கோவிலில் மக்கள் பெருந்திரளாய்க் கூடுவதால் ஆண்களும், பெண்களும் தனித் தனியாக இருந்து வழிபாடு செய்வதற்கும் தனித்தனி வாயில் வழியாக வெளியே வருவதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. சூசையப்பரோ யேசுநாதர் தேவதாயாருடன் வருவதாக எண்ணினார். தேவதாயாரோ யேசுநாதர் சூசையப்பருடன் வருவதாக எண்ணினார். பல தூரம் நடந்து சென்று இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்த பொழுது ஒருவருடனும் யேசுநாதர் வரவில்லை என்பதை அறிந்து, துயருற்றார்கள்-அழுதார்கள், புலம்பினார்கள். புனித சூசையப்பரும், தேவதாயாரும் புலம்பியதாக வீரமாமுனிவர் பாடியுள்ள பாடல்கள் படிக்கப்படிக்கச் சுவை தருவனவாகும். எடுத்துக் காட்டிற்கு இரு பாடல்களைப் பார்ப்போம்:-

'குயிலே! கிளியே!
வெண்குருகே! கோவனமே
மயிலே இனைந்தென்
மனங்குளிர்ப்ப அண்ணன்
கொள்
எயிலே வனமே இயம்பீரேல்
போயவற்கே
துயிலே இலநான்
துஞ்சுவனென்பீர்'

என்கிறார் சூசையப்பர். தேவதாயாரும்:-

'அன்னச் சிறைநீயலர்தா
மரைநா
னென்னச் செறியின்
பெ டிருந்தனமே
முன்னச் சியதேன் முருகில்
லதெனு
மன்னச் சவியோய்
வனமேகினையோ'

யேசுநாதரின் பிரிவினை அறிந்து அங்கிருந்த மக்கள் மாத்திரமா அழுதார்கள் இயற்கையே அழுதது.

'கிளியோடு அன்னம் அழக்
குயில்கள் கெழுமி அழ
வழியோடு அலரும் அழ
புனலும் விம்மி அழ
அளியோ அம் கா
வருந்திஅழ, வளவன்
அழுவான்
களியோடு அகன்றான் என்
காவலன் என்ற
ஓதையினன்'.

இப்பாடலைப் படிக்கின்ற பொழுது:-

'கிள்ளையொடு பூவை
யழுத கிளர்மாடத்
துள்ளுறையும் பூசை
யழுத வுருவறியாப்
பிள்ளையழுத
பெரியோரை யென்
சொல்ல
வள்ளல் வனம்புகுவா
னென்றுரைத்த
மாற்றத்தால்.'

என்ற கம்பராமாயணப் பாடல் எம்மனத்தே தோன்றுகிறது.

### சொல்லின் செல்வர் கூறியது

தேம்பாவணியின் திறனைக் காலம் சென்ற சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:- 'முன்னோர்மொழி பொருளேயன்றி இவர் பொருளும் பொன்னே போல் அக்காவியத்தில் போற்றப்பட்டுள்ளன. சிந்தாமணியின் செழும் சுவையும்-கம்பராமாயணத்தின் கவிச்சுவையும்-திருக்குறளின் தெள்ளிய நலமும்-மேலைநாட்டுக் காப்பிய அறிஞர் பலரின் கருத்துக்களும் அமைந்து திகழ்கின்றது. இதில் அமைந்து திகழும் நலத்தினை ஆராய்ந்து அறிவது தமிழ் மாணவர்க்கு நல்விருந்தாகும்.'

கிறித்தவ இலக்கியமாகத் திகழும் தேம்பாவணியினைக் கிறித்தவர்கள் மட்டுமன்றி எல்லாமதத்தினரும் நன்றாகக் கற்றல் வேண்டும். அதில் உள்ள சுவையினைத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் பெறல் வேண்டும். அறுவரும் கற்று இன்புற இருத்தல் வேண்டும்.

## சரோஜாவின் கதை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சன். ஒரு பக்கம் இலட்சுமி; இன்னொரு பக்கம் தாமரகுமாரி; இந்தஇரண்டு பெண்களும் போதாதென்று அந்த வியாபாரப் பெண் மோகினி வேறு! மோகினியை வேண்டுமானால் அலட்சியப் படுத்தி விடலாம்; கொஞ்சம் சிரமப்பட்டால் இலட்சுமிக்கும் விடை கொடுத்து விடாமல். ஆனால் தாமரகுமாரி? புத்த விஹாரத்து முருகன் சன்னதியில் வைத்து அவள்-தாமரகுமாரி-அவனைப் பார்த்து முத்து முத்தாய் உதிர்த்த கண்ணீர்! அந்தக் கண்ணீரைத் துடைப்பதற்கு மனித ஜென்மம் எடுத்தவன் எத்தகைய தியாகத்தையும் புரியத் தயங்க மாட்டானே? அப்படியானதோர் இக்கட்டான நிலை உருவாவதன் முன்னால் சரோஜாவைக் கையேற்று விடுவது எல்லாருக்கும்-எல்லாவற்றிற்குமே-நல்லதுதான்!

எண்ணச் சுழியில் சுழன்று கொண்டிருந்த கணேசனை, 'மாத்தயா' என அழைத்துக் கொண்டுவந்த ஒரு பெண்ணின் குரல் சுய நிலைக்குக் கொண்டு வந்து விட்டது.

குமரனை ஏறெடுத்துப் பார்த்தான் கணேசன்.

உமிரியை விழுங்கிக் கொண்டு நின்றான் குமரன்!

## மோகினிக் கடல்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இது என்று குறைத்துக் கற்பனை பண்ணி விடாதே! என்னைப் பொறுத்த அளவில், அவள் உடல் பூராவும் ஒரு புனிதப் போர்வை படர்ந்திருப்பதாகவே எனக்குப் படுகின்றது. மோகினியை நான் கடலுக்கு ஒப்பிட்டேன்; இலட்சுமியை வேண்டுமானாலும் அதே கடலுக்கு ஒப்பிடுவோம்; ஆனால் தாமர குமாரி என்ற தேவமகளைக் கடலுக்கு ஒப்பிட என் மனமும், உணர்வும் அஞ்சுகின்றன. மோகினியும், இலட்சுமியும் கடல் என்றால், அந்தக் கடலின் ஆழத்தில் கிடக்கும் முத்தீனும் சிப்பி தாமரகுமாரி! பல நதிகளையும் தன்னுள் சங்கமிக்க இசைகின்றது. கடல்; ஆனால் முத்தீனும் சிப்பியோ, தாய்மை மிக்க ஒரு துளிப் பனி நீரை மட்டுமே ஏற்க இசைகின்றது!' கண்களில் நீர் பனிக்க—உணர்ச்சி மதமதப்போடு கூறி முடித்தான் கனேசன்.

கணேசனுடைய ஆவேச நிலை கண்டு குமரன் ஒரு கணம் துணுக்குற்று விட்டான். கணேசனுடைய உள்ளத்தை எத்தனை வேசத்துடன் தாமரகுமாரி ஈர்த்திருக்கின்றாள் என்பதை உணர அதிக நேரம் பிடிக்கவில்லைக் குமரனுக்கு! அந்த விநாடிப் பொழுதில் அவன் நினைவுத் திரைக்கு ஓடி வந்து நின்றவள் மோகினியோ? இலட்சுமியோ? தாமரகுமாரியோ அல்ல; [illegible] சரோஜாதான் அவன் முன் வந்து நின்றாள். சரோஜாவின் நினைவு வந்து அவனை நிமிண்டியதும் அச்சத்தால் அவன் உள்ளம் உதறல் எடுத்தது! இப்படியே காலத்தை நகர்த்திக் கொண்டு செல்வதற்கு இனி ஒரு கணமும் கணேசனை அனுமதிப்பதில்லையென்றும், அவனைக் கையோடு அழைத்துச் சென்று சரோஜாவின் கழுத்தில் தாலியைக் கட்டிவிடுவது என்றும் திர்க்கமாக முடிவு எடுத்துக் கொண்டு நடக்கலானான் குமரன். அப்படி நடந்தவன் திடீரென்று, ஒரு கேள்வியைக் குமரனிடம் கேட்டு, அவனுடைய சிந்தனையோட்டத்தின் திசையைத் திருப்பலானான்.

'டேய் கணேசா! உன் தாமரகுமாரி முத்தோ? பவளமோ? இருந்து விட்டுப் போகட்டும். அது பற்றிக் கவலையில்லை. சற்றுமுன் உன் வீடு தேடி வந்த மோகினி, அப்படிச் சள சளவென்று என்ன தான்பேசித் தொலைத்தாள்?'

'அதுவா? இங்கு ஒரு பழக்கம். 'சாப்பாட்டுக்கு நேரம் வந்து விட்டதா?' என்று நாம் மணிக்கூட்டைப் பார்த்துக் கொண்டு அவதிப்பட வேண்டியதில்லை. சாப்பாடு முடிந்ததும், மோகினி அதை அறிவிப்பதற்கு இங்கு ஓடி வந்து விடுவாள். இப்படிச் செய்வதன் மூலம் நம்மைக் கௌரவிப்பதாக அவர்களுக்குள் ஐதீகம். இது ஒரு நல்ல பண்பு இல்லையா?'

'ஆயிரம் தடவை அடித்துச் சொல்கின்றேன். இது ஒரு நல்ல பண்பேதான்! இல்லாவிட்டால், தனிமையில் உன் வீட்டில் அவளை உன்னால் சந்திக்க முடியுமா? சந்தித்து......அந்தக் கடலுடன் சங்கமிக்கத்தான் முடியுமா?...'

'போதும் கவிராயரே! தயவு செய்து உங்கள் திருவாயை இத்துடன் மூடிக் கொள்மின்' என்றான் கணேசன்.

குமரன் வாயை மூடிக் கொள்ளவில்லை. பேச்சுக் கொடுத்தான்.

'அவ்விதம் சாப்பிட அழைக்க வந்தவளிடம் இந்த நாதிராஜன் என்ன சொல்லி அனுப்பினாரோ?'

சொல்லுவதென்ன; என் கழுத்தை அறுப்பதற்கு ஊரிலிருந்து ஒரு கொலைகாரன் வந்திருக்கிறான். அவனுடன் சென்று குளித்துவிட்டு விரைவாக வந்து விடுகிறேன். ஏகதடபுடலாக இன்று சாப்பாடு அமைய வேண்டும்!' என்று சொல்லியனுப்பினேன் என்றான் கணேசன்.

இருவரும் மகிழ்வோடு நதி தீரத்தை நெருங்கினர்.

நதியில் பலர் குதூகலத்தோடு நீராடிக்கொண்டிருந்தனர். அந்தப் பலருள் ஓர் உருவம் கணேசனைக் கண்டு ஒரு சுந்தரப் புன்னகையை உதிர்த்தது!

அந்த மாயப் புன்னகையில் தாமரையின் தூய்மையையும், ரோஜாவின் மென்மையையும் கண்டு மயங்கி நின்றான் குமரன்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நீங்களும் வெகு வேகமாகப் படிக்கலாம்!

காலம் சென்ற ரூசுவெல்ட் தினமும் மூன்று புத்தகங்கள் படித்து முடித்தவராம்.

'என்ன...இது முடியக் கூடிய காரியமா' என்று கேட்கிறீர்களா?

'முடியும். நிச்சயமாக முடியும்' என்கிறார் எவிலின் நையில் கென்உட் என்கிற ஆசிரியை.

'வேகமாகப் படிப்பதெப்படி?' என்ற ஆராய்ச்சியிலேயே தன் வாழ்நாளின் பெரும் பகுதியைச் செலவிட்டுள்ளார் இந்தப்பெண்மணி.

சாதாரணமாக நாம் படிக்கும் பொழுது என்ன செய்கிறோம்? கண்கள் சொற்களைப் பார்க்கின்றன; உதடுகள் நம்மை அறியாமலே அச்சொற்களை உச்சரிக்கின்றன. சில சமயங்களில் படிப்பதன் பொருளை நன்கு புரிந்து கொள்வதற்காக மீண்டும் மீண்டும் படிக்கிறோம்.

இதனால் காலம் வீணாகின்றது. நமது படிப்பின் வேகம் தடைப்படுகிறது.

சாதாரண மனிதன் ஒரு நிமிடத்திற்கு 200 அல்லது 250 சொற்கள் படிக்கிறான். கல்லூரி மாணவன் 100 அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் படித்து முடிக்கிறான்.

இது மிகவும் குறைவு என்று எவிலின் கருதுகிறார்.

'சிறு வயது முதற்கொண்டே புத்தகங்களை உரக்கப் படித்தே நமக்குப் பழக்கம். ஆசிரியர்களும் நம்மிடம் இந்தப்பழக்கத்தையே வளர்த்து வந்துள்ளனர். ஒவ்வொரு சொல்லாகப் படித்தால் தான் நமக்குப் புரிகிறது. இது தான் நாம் வேகமாகப் படிக்க முடியாமலிருப் பதற்குக் காரணம்' என்கிறார் எவிலின்.

இதைத் தவிர்ப்பது எப்படி?

எவிலின், வேகமாகப் படிக்கக் கூடிய திறமை பெற்றுள்ளவர்களைச் சந்தித்து அவர்களது ஆற்றலைப் பற்றி ஆராய்ந்தார். இவர்களிடம் மூன்று குணங்கள் பொதுவாக இருந்தன.

1. தங்கள் கண்களை ஒரு பக்கத்தினூடே வேகமாக ஓட்டக் கூடிய ஆற்றல் அவர்களுக்கிருந்தது.

2. படித்ததைப் புரிந்து கொள்வதற்காக மீண்டும் மீண்டும் படிக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கில்லை.

3. அவர்கள் தங்கள் கண்களையும் மூளையையும் மட்டுமே பயன்படுத்தினர்.

மெதுவாகப் படிப்பவர்கள் ஒவ்வொரு சொல்லாகப் படிக்கின்றனர். வேகமாகப் படிப்பவர்கள் ஒரே சமயத்தில் பல சொற்களைப் படிக்கின்றனர். ஒரு தொகுதிச் சொற்கள் எந்தக் கருத்தை வெளியிடுகின்றன என்பதை அவர்கள் விரைவில் புரிந்து கொள்கின்றனர். எனவே அவர்கள் காற்று வேகத்தில் வெகு விரைவாகப் படிக்க முடிகிறது.

'ஆனால் ஒருவர் மிக விரைவாகப் படிக்கும் ஆற்றலைப் பெற வேண்டுமானால் அவர் சிறந்த அறிவாற்றல் பெற்றிருக்க வேண்டும் என்கிறார் எவிலின். 'வேகமாகச் சிந்திக்கும் திறன் பெற்றவர்கள் தான் விரைவாகப் படிக்க முடியும். விரைவாகப் படித்தால்தான் வேகமாகச் சிந்திக்க முடியும். வேகமாகச் சிந்திக்கத் தொடங்கும் ஒருவர் ஒரு புத்தகத்தில் இருக்கும் பல சொற்களைக் காண்பதில்லை. அங்கு சொல்லப் பட்டுள்ள கருத்தைத்தான் காண்கிறார். இதனால் அவர் அந்தப் புத்தகத்தை நன்கு அனுபவித்துப் படிக்க முடிகிறது.'

இவ்வகையான பயிற்சி மிகவும் கடினமானதுதான் என்று ஒப்புக்கொள்கிறார் எவிலின். ஊன்றிப் படிக்கும் பழக்கம் உள்ளவர்கள்தான், இப்பயிற்சியில் வெற்றியடைய முடியும்.

இதற்கான வழி வகைகளையும் அவரே விளக்கியுள்ளார்.

புத்தகத்தின் ஆசிரியர் அதை எழுத முன்பு, அப்புத்தகத்தை எவ்வாறு அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டுத்தான் எழுதியிருப்பார். இதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். பொருளடக்கம், அத்தியாயத் தலைப்புகள் ஆகியவற்றைப் படிக்கையிலேயே நாம் ஓளரவிற்கு அப்புத்தகத்தில் பொதிந்துள்ள கருத்தினைப் புரிந்துகொள்ள முயல வேண்டும். அது வெறும் கதையாக இருந்தால், கதையில் வரும் படைப்புக்களை யார் யார் என்று தெரிந்து கொள்வது நல்லது. இந்தப் பூர்வாங்க வேலையினால் நம்முடைய காலம் வீணாவதைத் தவிர்க்க முடிகின்றது, ஏனென்றால் கதையில் மையக் கருத்து நமக்கு விரைவில் புரிந்து விடுகிறது.

ஆனால், அறிவியற் புத்தகங்கள், கவின் மிகு கவிதைகள், ஆகியவற்றை வேகமாகப் படிப்பது கடினம் என்பதை ஒப்புகிறார் எவிலின். ஆயினும் 'எவற்றையும் வேகமாகப் படிக்க வேண்டும்; அவ்வாறு படிக்கும் போதே அவற்றைப் புரிந்துகொள்ளவும் வேண்டும்; புரிந்து கொண்டதை நினைவில் வைத்துக் கொள்ளவும் வேண்டும், என்கிறார் [illegible] இதற்காக அவர் பல [illegible]களையும் நடத்தி வருகிறார்.

இங்கு பயிற்சி பெற்றுப் பயனடைந்தோர் பலர்.

நாம் அவருடைய பள்ளியில் சென்று பயிற்சி பெற முடியாதல்லவா? நமக்காக அவர் சில வழிகளைச் சொல்லியுள்ளார்.

'மெதுவாக உதடுகளைக் குவித்துப் படிக்கும் பழக்கம் உங்களுக்குள்ளதா? நீங்கள் ஒன்று செய்யுங்கள். வாயில் மிட்டாய் ஒன்றைப் போட்டுக்கொண்டு, படிக்கமுயற்சி செய்யுங்கள்: மிட்டாயைச் சுவைக்கையில் படிப்பது கடினமாக இருக்கிறதா? மிட்டாயை மெதுவாகச் சுவைத்துக் கொண்டே விரைவாகப் படிக்க முயலுங்கள். இவ்வாறு செய்தால் சில நாட்களில் உதடு குவித்துப் படிக்கும் பழக்கம் அறவே ஒழிந்துவிடும்.

'உங்களை அறியாமலே நீங்கள் படிப்பதை உங்கள் செவி வாங்கிக் கொள்கிறது. இதுவும் தவறான பழக்கமே. நீங்கள் படிப்பது, உங்கள் கருத்தில் பதிய வேண்டுமேயல்லாமல், செவிக்கு வேலையில்லை.

'புத்தகத்திலுள்ள வரிகளில் உங்கள் விரலை ஓடவிடுங்கள். இதே வேகத்தில் நீங்கள் படிக்கவும் வேண்டும். விரலின் வேகத்துடன் உங்கள் கண்கள் போட்டியிட வேண்டும்.

மேலும் மேலும் படித்துக் கொண்டே போங்கள். படித்த வரிகளையே உங்கள் கண்கள் நாடுமானால், அந்த வரிகளை ஓர் அட்டையைக் கொண்டு மறைத்து விடுங்கள்.

'வெறும் சொற்களைப் படிப்பதற்குப்பதிலாக, ஆசிரியர் என்ன கருத்தை விளக்க முயன்றிருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள முயலுங்கள். ஆசிரியர் விரிவாக [illegible] கவலைப்பட வேண்டாம்.

'ஒவ்வொரு முறையும் நீங்கள் படிக்க எடுத்துக் கொள்ளும் நேரத்தைக் குறித்து வைத்துக்கொள்ளவும். உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு உங்களுக்கே வியப்பாய் இருக்கும்'.

எவிலின் அவர்களிடம் பயிற்சி பெற்ற அமெரிக்க செனட்டர்-கெர்மன் என்பவர் நிமிடத்திற்கு 3,500 சொற்கள் படிக்கிறார் என்றால், இந்தப் பயிற்சியில் பலனை விவரிக்க வேண்டுமா?

—ஆதாரம்: முத்தாரம்.

## காவடியாட்டம்!

'மாவிட்டபுர ஆனந்தன்'

மேற்கு வீதி யில்—நல்ல
மேள தாளங் கள்
நாற்பு றத்தி லும்—மக்கள்
நிறைந்து நிற்கி றார்!

வண்ண மயில தன்-தோகை
வளைந்து ஆடு து!
கண்ணைக் கவ ருது—அங்கே
காவடி யாட் டம்!

துள்ளி ஆடு றார்—பக்தி
வெள்ளம் பாயு து!
உள்ளம் யாவி லும்—உவகை
ஊறிப் பெருகு து!

சுழன்று ஆடு றார்—பக்திச்
சுவையில் மூழ்கி றார்!
தளர்ச்சி யின்றி யே-மேலுந்
தாவி ஆடு றார்!




## 12. முறிந்த தந்தம்

மாணிக்கச் சித்தப்பா தொடர்ந்து கூறிக் கொண்டே வந்தார். தில்லை கண்கள் நீரைச் சொரியக் கேட்டான்.

'உடையார் வீட்டில் களவு போனபின் கள்ளரைப்பிடிப்பதில் நான் மும்முரமாக ஈடுபட்டேன். எங்களைக் கட்டிப்போட்ட ஆறுகால் மடத்தின் பக்கம் என்பார்வை அதிகமிருந்தது! நானும் வேறுசில ஊர்க்காவலரும் அடிக்கடி இரவு வேளைகளில் அம்மடம் பக்கம்திரிந்தோம்! நாம்! எதிர்பார்த்தபடி அவர்கள் அம்மடத்தில் கூடவில்லை! ஒரு நாள் கோம்பயன் மணல் சுடலைக்குள்ளிருந்த மடத்தில் சிலர் கூடியிருப்பதைக் கண்டோம்! எல்லாரையும் வெளியே நிறுத்திவிட்டு நான் மட்டும் அவர்கள் கதைப்பதைப் ஒட்டுக்கேட்கப் போனேன்! சுடலையில் வளர்ந்திருந்த பாரிய மரங்கள் நான் மறைந்து மறைந்து அவர்கள் இருந்த மடத்தை நெருங்க உதவின. அவர்கள் பேசியவற்றை எல்லாம் ஒட்டுக் கேட்டேன்! அவற்றிலிருந்து தெரிந்தது முதலியார் கனகரத்தினம் வீட்டில் கொள்ளையிடுவது அவர்களது அடுத்த திட்டமென! அரைமணி நேரம் வரை மறைந்திருந்தேன்!... இருந்தாற்போல ஒருவன் பேசினான். 'அன்டைக்கு நான் துரத்தினன்ரா ஒரு பொடியனை...? அந்தப் பொடியன் நம்மடை கந்தப்பற்றை மருமோனாம்!' என. இதைக் கேட்ட நான் திடுக்கிட்டேன்! அன்று துரத்தப்பட்ட 'பொடியன்' நீ! நீ மருமகன் என்றால், கந்தப்பன் யார்? உன் மாமா தானே? கூறு தில்லை...?'

தில்லை ஒன்றும் பேசாதிருந்தான். சித்தப்பாவே தொடர்ந்தார்.

'இதைக் கேட்டபின்பு கூட உன் மாமா மேல் சந்தேகப்படத் தயக்கமாக இருந்தது! ஆனால் அத்தயக்கத்தை நீ கூறிய இரு விஷயங்கள் தீர்த்தன! ஒன்று உடையார் வீட்டில் களவு போன தந்த யானை உன் மாமா வீட்டில் இருந்தது! மற்றது உன்னைத் துரத்திய கள்ளன் மாமாவோடு பேசியது...! இவ்வளவும் உன் மாமாவிற்குப் பாதகமாக நின்றன! அதன் பிறகும் நான் என் கடமையைச் செய்யாதிருக்க முடியுமா? உன் மாமாவைக் கைது செய்து, வீட்டைக் சோதனை போட்டதில், பலர் வீட்டில் களவு போன நகைகள் அகப்பட்டன! அதுமட்டுமன்று...கள்ளர் எல்லாரோடும் வைத்து விசாரித்த போது தான் தான் ஆனைக் கோட்டைக் கந்தப்பன் என்பதையும் ஒப்புக் கொண்டு விட்டார்...!'

'மாமாவே ஒப்புக் கொண்டாரா?'

'ஆமாம், தில்லை!'

தில்லை பழையபடி 'விக்கி விக்கி' அழத்தொடங்கினான்.

'நீங்கள் மாமா குடும்பத்தைச் சீர்குலைத்து விட்டீர்களே, சித்தப்பா?'

சித்தப்பா வேதனைப்பட்டார்.

'தில்லை! உன் மாமாவால் எத்தனை குடும்பங்கள் சீர்குலைந்தன, தெரியுமா?'

வெதும்பி வெதும்பி அழும் தில்லையின் முதுகில் அன்போடு மாணிக்கச் சித்தப்பா தடவினார்.

**ஆறுகால் மடம்**
**போட்டி விபரம்**
**அடுத்த வாரம்**

'தில்லை! குற்றம் செய்தவர்கள் தண்டனை அனுபவித்தே தீர வேண்டும்! தண்டனை என்பது அவர்களைத் திருத்துவதற்காக அளிக்கப்படுவது! உன்மாமாவை நான் கைது செய்யாதிருந்தால், அவர் செய்யும் குற்றம் மேன் மேலும் கூடிக் கொண்டே போகும்! இப்போது தான் செய்த குற்றங்களுக்காக அவர் வேதனைப் படுவார்! அந்தப் பச்சாதாபம் அவர் சிறையிலிருந்து மீண்டு வரும்போது அவரை மாற்றிவிடும்! குற்றம் செய்யாத புது மனிதராக வெளி வருவார்! அழாதே, எழுந்திரு தில்லை!...உன் மாமி, மச்சானுக்கு ஆறுதல் கூறித் தேற்ற வேண்டாமா?'

தில்லை எழுந்திருந்தான். மாமியை எண்ணிய போது வேதனையாக இருந்தது.

'போய் வாறன், சித்தப்பா!'

மாணிக்கச் சித்தப்பா கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். தில்லை மாமா விடு நோக்கி நடந்தான்.

அதோ வருவது தான் ஆறுகால் மடம்! ஓரிரவு அம்மடத்தைக் கடக்க நேர்ந்ததால் தான் தன் மாமாவின் குடும்பம் தவிக்க நேர்ந்தது எனத் தில்லை எண்ணிக் கொண்டான். ஆறுகால் மடத்தை ஒரு முறை நிமிர்ந்து பார்த்தான்! அது எதுவும் தெரியாதது போல தூங்கிவழிந்தது.

இருந்தாற் போலத் தில்லைக்கு அந்தத் தந்த யானைப் பொம்மை நினைவு வந்தது. மினுமினுத்த உடல்! மணிக் கண்கள்! பிளிறும் நிலையில் துதிக்கை! உடைந்த ஒரு தந்தம்! அவன் கண்கள் கலங்கின! ஒரு மட்டில் அவன் வாழ்விலும் ஒரு தந்தம் உடைந்துதான் விட்டது!

தில்லை நடந்து கொண்டே இருந்தான். அவன் உள்ளம் அழுது கொண்டே இருந்தது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9-வது இன்பம் தரும் இனிய வாரம்!

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) மீரா (நீர்கொழும்பு) சிகிரி (பண்டாரவளை) ஈகிடேன் (சம்மாந்துறை) நியூவிஜேந்திரா (அனுராதபுரம்)
ஆகிய திரைகளில்!

★ ஜெய்சங்கர் ★ வசந்தா ★ அசோகன் ★ பண்டரிபாய் ★ நாகேஷ் ★ ராமதாஸ்

# இரவும் பகலும்







## விரைவில் எதிர்பாருங்கள்!

கண்ணை இழந்து - கண்ணை கணவனை இழந்து - கண்ணைப் பெற்றும், வாழ்வையே இழந்து விடும் குருட்டுப் பெண்ணின் உள்ளம் உருக்கும் உயிரோவியம்!

ஏ. எல். எஸ். புரொடக்ஷன்சாரின் புரட்சித் தயாரிப்பு!

# சாந்தி



## காதல்-கடமை, பாசம்-நீதி இவற்றுக்குள் எழுந்த மோதலின் முடிவுதான்-

29ம் திகதி முதல்
கிங்ஸ்லி பிளாஸா
நவா
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டக்களப்பு]
மொடேர்ன் (பதுளை)
விஜிதா (அட்டன்)
தீவொலி [நுவரெலியா]
கல்யாணி [நாவலப்பிட்டி]
இலட்சுமி [இரத்தினபுரி]
அய்யன் [மன்னார்]



எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி,
எம். ஆர். ராதா,
அசோகன்,
நம்பியார்,
ரங்கராவ்,
கண்ணாம்பா
நடித்த

# நீதிக்குப் பின் பாசம்

## 3வது வாரமாக மகிழ்விக்கிறது!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) வின்சர் (யாழ்ப்பாணம்) இம்பீரியல் (மட்டக்களப்பு)
ரீகல் (கண்டி) நெல்சன் (திருகோணமலை) ரீகல் (நுவரெலியா)
ஆகிய திரைகளில்!

ஜெமினி கணேசன்—சாவித்திரி—முத்துராமன்—மணிமாலா
நாகேஷ்—மனோரமா—பண்டரிபாய்—சகஸ்ரநாமம்
நடித்த

# பூஜைக்கு வந்த மலர்



## வெகு விரைவில் எதிர்பாருங்கள்!

ஜனாதிபதியின் பரிசு பெற்ற
கல்யாண்குமார்—சரோஜாதேவி
மற்றும் பலர் தோன்றும்

# சிற்பியின் செல்வன்

(ஈஸ்ட்மென் கலர்).

சிவாஜி கணேசன்-சரோஜாதேவி-சௌகார் ஜானகி
மற்றும் பலர் நடித்த

# புதிய பறவை

[ஈஸ்ட்மென் கலர்]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1965-ம் வருடம் யூலை மாதம் 25-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.